241

241
NOV 1944

வசந்தம்

விலை 8 அணா

தாரண - ஆடி

1944 - ஜூலை

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

வசந்தா மில்ஸ் லிமிடெட்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ஷ கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சி பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:

20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முருக்கு, காரம், சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்டிங்,
மல், சதர்,

தயாரிக்கிறோம்

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

Office copy 17/?/44

எஃகு தொழிலைச் சேர்ந்த குடும்பங்கள்

வேலையில் ஈடுபட்டு கடத்திய பால்யத்தின் நற்பயனை வயதான காலத்தில் இந்த மனிதன் எவ்வளவு சந்தோஷமாய் அனுபவிக்கிறான்!

ஸ்தாபிதர், ஜாம் ஷட்ஜி டாடா இவருக்கு தகுந்த மித்திரராய் ஊக்கமளித்தவர். அவருடைய முன் யோஜனையே இவருக்கு கவலையற்ற பிற்கால வாழ்வை அளித்தது.

இந்திய தொழில் முன்னேற்றத்துக்காக பால்யத்தில் உழைத்து இப்போது சுகமாய் எஃகு தொழிலைச் சேர்ந்த குடித்தனத்தின் பாட்டனாய் விளங்குகிறார்.

TATA STEEL

(டாடா எஃகு)

8-NOV 1944

தி டாடா அயரன் அண்டு டீல் கம்பனி லிமிடெட்டால் வெளியிடப் பட்டது.

தலைமை விற்பனை இலாகா: 102 A, க்ளைவ் தெரு, கல்கத்தா.

THE
COCHIN TEXTILES

(Proprietors : The west coast Agencies Limited)
[Incorporated in COCHIN STATE]

MANAGING DIRECTOR:

RM. ALAGAPPA CHETTIAR,

M. A., BAR-AT-LAW, D. LITT.

TELEGRAM:
' TEXTILES, TRICHUR

TELEPHONE
TRICHUR 40.

PUDUKAD MILLS POST. COCHIN STATE

Working Spindlage
29880 Spindles

★

MANUFACTURERS OF

BEST QUALITY SWADESHI YARN IN FINER
COUNTS 40s. 60s. & 80s. TO
SUIT THE REQUIREMENTS OF
THE CONSTITUENTS.

★

Also manufacturers of the Cheese, Cone and Doubled Yarn.

வசந்தம் வாசகர்களே!
உங்களுக்கு எது தேவை?

சுடர் மிகுந்த வைரங்கள்
தங்க நகைகள்
வெள்ளி சாமான்கள்
எனுமல் மோதிரங்கள்

GOLD & SILVER WARES
K.R. & SONS
(PHONE No. 226) JEWELLERS, COIMBATORE.

முதன்மை ஸ்தானம் வகிப்பது

உத்திரவாத முள்ளது

சிறந்த வேலைப்பாடுள்ளது

எல்லோரும் விரும்புவது

K R

சீல்

PHONE 226

தந்தி கிருஷ்ணு

கே. ஆர். & சன்ஸ்,

நகை வியாபாரம்

பெரிய கடை வீதி : : கோயமுத்தூர்

8-NOV 1944

காசிநாத் அண்டு கோ,

இங்கிலீஷ் மருந்து ஷாப்,

முனிசிபல் ஆபீசுக்கு எதிர்ப்புறம் கோயமுத்தூர்.

உங்கள் மருந்துத் தேவைக்கு தயவு செய்து எங்களை விசாரியுங்கள்.

உங்களை மகிழ்விக்க அதிக விரைவில் வெளி வருகிறது!

வியோ பிலிம்ஸார் நியூடோன் ஸ்டுடியோவில் தயாரித்த :—

பூம்பாவை

உன்னத தமிழ்ப்படம்

டைரக்ஷன் :- **T. பாலாஜி சிங்**

நடிகர்கள் :—

ராமசாமி - ஜீவரத்தினம்
ராமச்சந்திரன் - சகுந்தலா
சாரங்கபாணி - செல்லம்
கிருஷ்ணன் - மதுரம்

வசனம் :—

A. A. சோமையாஜுலு, B. A.

பாட்டு :—

மாரியப்பசாமி

வினியோகிப்பவர்கள் :— கந்தன் & கம்பெனி,

கோயமுத்தூர், மதுரை, கோட்டயம்.

மைசூர் சமஸ்தானத்திற்கும், பெங்களூர் கண்டோன்மென்டிற்கும், வடக்கு தெற்கு கன்னடத்திற்கும் மைசூர் கார்ப்பரேஷன் பிலிம்ஸ், 196, காந்திநகர், பெங்களூர்.

வசந்தம் சந்தா

வருஷத்திற்கு ரூ. 6—0—0 தனிப் பிரதி 0—8—0

வசந்தம் 4/12A திருச்சி ரோடு, கோயமுத்தூர்.

உயர்ந்த பித்தளை வெங்கலப் பாத்திரங்களுக்கு
நம்பிக்கையான இடம்,

V. K. வெள்ளையப்ப செட்டியார்

பித்தளை தாமிரம் வியாபாரம் கடை வீதி, கோயமுத்தூர்.



Manufactured at : **A. P. R. Oil Mills, Fort, Coimbatore.**

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனு பஜார் மதராஸ்

இப்பொழுதே நீர் கட்டப்போகும் வீட்டிற்கு "பிளான்" தயாரியுங்கள்



நீங்கள் கட்டப்போகும் வீடு உங்கள் தேவைகளுக்கு சரியாக பொருந்தியமைந்திருத்தல் அவசியம், இல்லையா? அதைப்பற்றின நுண்ணிய விவரங்களை காகிதத்தில் வரைந்து பார்த்து அப்பழுக்கில்லாமல் செய்யுங்கள். அப்படிச் செய்வது வீண்பொழுது போக்கு ஆகவேயாகாது. நாளை நீங்கள் அந்த புதிய வீட்டில் குடிபோய் குடித்தனம் செய்து கூடுதல் சுக சௌகரியங்களுடன் நீடித்து வாழ்வீர்கள்.



இந்தியாவில் தற்காலத்தைய வீடுகள்

படங்களுடன் கூடின இந்த சிறு புஸ்தகம் உங்களுக்கு புதுயோஜனைகள் அளிக்கும் விலை ரு. 1/-தான் தபால் செலவு அணா 4/- வேறு. உங்கள் பிரத்தியேக தேவைகளைக் குறித்து சாஸ்திரீயமாக இன்னும் விரிவான அபிப்பிராயங்கள் வேண்டுமானால், இந்திய கான்க்ரீட் அஸோஸியேஷனுக்கு எழுதுங்கள். எப்போதும் பெறலாம். சிறு புஸ்தகத்திற்கோ. யோஜனைகளுக்கோ இலாகா 122/D. தி கான்க்ரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா, 199, மவுண்ட் ரோட், மதராஸ் எனும் விலாசத்திற்கு எழுதவும்.

டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ்:

தி சிமெண்ட் மார்கெட்டிங் கம். ஆப் இந்தியா லிட்.

வசந்தம்

மலர் 3]

பொருளடக்கம்

[இதழ் 3

நெட்டைப் பனை	...	'கதிரவன்'	...	1
நோயும் டாக்டரும்	...	ரா. நா	...	2
காதலும் கவிதையும்	...	கி. ரா	...	4
இன்பம்	...	பாரதி	...	7
எழுத்தாளர் சங்கம்	...	'வில்லன்'	...	8
கட்டை வண்டி	...	கே. விஜயராகவன்	...	11
என்ன சிகிச்சை?	...	ஸ்ரீமதி கோமதி சுப்ரமணியம்	...	14
சாவித்திரி	...	ஆர். ஷண்முகசுந்தரம்	...	17
அன்பின் அழைப்பு	...	வெ. ராம ராவ்	...	24
ஆசை	...	ஸ்ரீமதி விசாலம்	...	32
நீரும் நிழலும்	...	ஆர். சரஸ்வதி	...	40
காளி கோயில்	...	'பாசரசு'	...	47
இயற்கை அன்னை	...	ஸ்ரீமதி ஜயா	...	55
ஒரே ஒரு நாள்	...	எஸ், வி. எஸ்	...	56
சிலப்பதிகாரம்	...	சர். சண்முகம் செட்டியார்	...	61
புத்தன்	...	'கம்ப தாசன்'	...	68
புத்தக ஆராய்ச்சி	...	... ...	...	69
கலைக் கோயில்	...	சுத்தானந்த பாரதி	...	70
சூரிய காந்தி	...	சி. எஸ். ஆர்	...	78
நமது ரசனை	...	ஸ்ரீமதி சாஸ்திரி	...	79
மலர் மணம்	...	... ...	...	81

விளம்பர அட்டவணை

டாடா எஃகு	...	...	I
கொச்சின் டெக்ஸ்டைல்	...	...	II
கே. ஆர். & சன்ஸ்	...	...	III
கந்தன் & கோ, காசிநாத் & கோ, வி. கே. வெள்ளையப்ப செட்டியார்		...	IV
ஏ. பி. ஆர், உம்முடியார்		...	V
சிமெண்ட்		...	VI
புரூக் பாண்டு	...	...	VIII
க்ளூகோனேட், ஓவர்ஸீஸ் ரெப்பிரசன்டேஷன்		...	IX
நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்	...	...	X
குப்பு ராஜ், பீமைய செட்டி, ஆர்ய வைத்தியர், வசந்தா டையிங் ஒர்க்ஸ், கே. பீ. ஆர்.		...	XI
ஸ்ரீ ராமவிலாஸ்	...	...	xII
சென்டிரல் பாங்கி, கவர்னயுத்தநிதி	...	...	XIII
பர்மாஷெல், கோயமுத்தூர்	...	...	XIv
அரவிந்த் மில்ஸ்	...	...	XV



இரண்டு இலைகளும் ஒரு தளிரும்...

'இரண்டு இலைகளும் ஒரு தளிரும்' உள்ளபடி பார்த்துத் தேயிலை கொய்வதுதான் உயர் ரகத் தேயிலைக்கு அடையாளம். இந்த முறைப்படி, மிகவும் இளசான, தளிர் போன்ற மெல்லிய தேயிலைகளே சேகரிக்கப் படுகின்றன.

ப்ரூக் பாண்ட் கம்பெனியார் தங்கள் விற்பனை அதிகாரிகள் மூலம் எல்லா வியாபாரிகளுக்கும் அடிக்கடி புதிய சரக்குகள் சப்ளை செய்கிறார்கள். இந்த ஏற்பாட்டின் பயனாய் 'இரண்டு இலைகளும் ஒரு தளிரும்' உள்ள தேயிலை புது மணங் கமழ உங்களுக்குக் கிடைக்கிறது.

எங்கள் பாக்டரிகளிலிருந்து புத்தப் புதிய தேயிலை இந்தியாவில் எல்லா முக்கியமான ஊர்களிலும் உள்ள எங்கள் டிப்போக்களில் ஸ்டாக் செய்யப் படுகிறது. இந்த டிப்போக்களிலிருந்துதான் எங்கள் விற்பனை அதிகாரிகள் அவ்வப்பொழுது சரக்குகள் எடுத்து விநியோகிக்கிறார்கள்.

மணமும் சுவையும் மிகுந்த புத்தப் புதிய தேயிலை வேண்டுபவர்களுக்கு எங்கள் டார்ஜீலிங் பிளெண்ட் மிகவும் உகந்தது.



ப்ரூக் பாண்ட்

நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான்

—கம்பர்

அட்டைச் சித்திரம் :

நெட்டைப் பனை

பனை மரத்தில் பாளை சீவிப்
பதனி வடித்துத் தாறேன் ;
தினமும் பத நீருண்டால்த்
தெம்பு பெருகு மடா

காலைப் பதனி காய்ச்சிக்
கருப்பட்டி பண்ணித் தாறேன்
ஆலைச் சீனி தோற்றுப் போகும்
அத்தனையும் அமுதமடா

கறுவலாங் கொங்கை போலக்
காய்த் தடரும் நொங்கு வெட்டி
உறுஞ்சிக் குடித்து விட்டால்
உள்ளங் குளிருதடா !

பத நீரும் நொங்குமுண்டு
பலசாலியா யிருப்போம்
மதிமயக்குஞ் சனியான
மதுபானம் ஏதுக்கடா ?

— கதிரவன்

அனுபவ உண்மை:

நோயும் டாக்டரும்

(ரா. நா)

பொது விஷயங்கள் சம்பந்தமாக எங்கள் ஊர் டாக்டரிடம் சென்றிருந்தேன். என் வேலே முடிந்தவுடன் வீட்டுக்குப் புறப் பட்டேன். "இன்னும் சற்று இருங்கள் போகலாம்" என்று சொல்லி ஒரு 'கப்' காபி கொடுத் தார். அதை சாப்பிட்டுவிட்டு அங்குவரும் நோயாளிகளேக் கவ னித்தேன். ஒருவருக்கு வயது 30 இருக்கும். பார்வைக்கு நோய் வாய்ப் பட்டவராகத்தெரியவில்லே. உள்ளே வந்து டாக்டரைப் பார்த் தவுடன், "என்ன, டாக்டர் உடம் பே சரியாயில்லே. என்னமோ செய்கிறது" என்ருர். டாக்டர் சிரித்துக்கொண்டே, "உங்களுக்கு ஒன்றுமில்லே. ஜமீந்தார் வியாதி. இந்த மருந்தை சாப்பிடுங்கள் சரி யாகப் போய்விடும்" என்று சொல்லி ஒரு காகிதத்தில் மருந்து எழுதிக் கொடுத்தார்.

இதென்ன நூதனமாயிருக்கி றதே இந்த ஜமீந்தார் வியாதி என்று எனக்குத் தோன்றிற்று. நோயாளி போனவுடன், "என்ன டாக்டர் புது நோயாயிருக்கிறதே" என்று கேட்டேன். இது "தெரி யாதா? இந்த ஜமீந்தார்கள் இரு ந்த இடத்தைவிட்டு அசையாமல் இருப்பதால் கைகால்களில் ஒரு வித வலி ஏற்பட்டுவிடும். அவர் களுக்கெல்லாம் நான் ஒரு ஷர் பத்தை எழுதிக்கொடுத்து அந்த மருந்தைச் சாப்பிடச் சொல்லு வது வழக்கம். இந்த ஆசாமி ஜமீந்தாருடன் எப்பொழுதும் இருந்து இவருக்கும் அந்த வியாதி வந்துவிட்டது" என்ருர்.

* * *

இதைக் கேட்டவுடன் எனக்கு "தலேவர் வியாதி" என்கிற நோய் ஞாபகத்திற்கு வந்தது. அரசியல் தலேவர்களில் மோதிலால்நேரு, ராஜாஜி, ராஜன்பாபு முதலியோ ருக்கு 'ஆஸ்த்மா' சங்கடம் உண்டு. அதனுல் அரசியலில் ஈடு பட்டவர்கள் கொஞ்சம் இருமல் கண்டாலும், "என்ன ஸார் சதா அலேவதில் எனக்கும் ஆஸ்த்மா வந்துவிட்டது" என்பார்கள். 'எனக்கும்' என்றவுடன் மோதி லால், ராஜாஜி, ராஜன்பாபு முதலி யவர்கள்போல் என்று நாம் உண ர்ந்து கொள்ள வேண்டும்.

* * *

காந்திஜிக்கு ரத்தக் கொதிப்பு உபத்திரவம் என்றவுடன் சில அரசியல் ஊழியர்களுக்கு சாதா ரண தலேவலி ரத்தக் கொதிப்பின் முக்கியத்துவம் பெற்றுவிடும்.

நோயாளிகளில் மட்டும்தான் சாந்த மனிதர்கள் இருக்கிருர்கள் என்று எண்ணவேண்டாம். டாக் டர்களிலும் விசித்திரப் பேர்வழி கள் இருக்கிருர்கள். எனக்குத் தெரிந்த ஒரு டாக்டரிடம் ஒரு ஆசாமிபோய், "எனக்கு மலே ரியா டாக்டர், ஏதாவது மருந்து

கொடுங்களேன்'' என்று கேட்டான். டாக்டருக்கு அடங்காத கோபம் வந்து விட்டது. "உனக்கு மலேரியா எப்படி ஐயா தெரியும். நீ என்ன டாக்டரோ'' என்று கேட்டார். "இல்லை, டாக்டர். ஜுரம் வந்தவுடன் குளிர் நடுங்குகிறது. அதனால்.........'' என்று முடிப்பதற்குள் "குளிர் ஜுரம் வந்தால் மலேரியா என்று எந்த முட்டாள் சொன்னான்'' என்று கடிந்து கொண்டார்.

அதே டாக்டரின் குணம் தெரிந்த ஒரு மலேரியா நோயாளி சுலபமாக மருந்து வாங்கிச் செல்ல பின்வரும் உபாயத்தைக் கையாண்டான்.

"டாக்டர்! உடம்பெல்லாம் கொதிக்கிறது.'' என்றான். "அப்புறம்'' என்றார் டாக்டர். "உடனே குளிர் நடுங்குகிறது'' "ஓஹோ உனக்கு மலேரியா ஜுரம் இந்த மருந்தைச் சாப்பிடு'' என்று கொய்னா கஷாயம் கொடுத்தார்.

* * *

நோயாளியின் கஷ்டம் டாக்டருக்குத் தெரிவதில்லை. சமீபத்தில் என் நண்பர் ஒருவரின் மனைவிக்கு திடீரென மயக்கம் வந்து மூர்ச்சையானாள்; வாயில் நுரை ஏற்பட்டது. கணவர் ஓடோடியும் சென்று ஒரு டாக்டரை அழைத்து வந்தார். டாக்டர் பார்த்துவிட்டு, "ஒன்றுமில்லை' 'ரெஸ்ட்' பண்ணினால் சரியாகப் போய்விடும்'' என்று சொல்லிவிட்டு தம் 'பீசை' வாங்கிக்கொண்டு போய்விட்டார். ஆனால், கணவன் தம் மனைவியைப் பற்றி எப்படிக் கவலைப்படாமலிருக்க முடியும்? ஒரு மணி நேரமாயும் மனைவி எழுந்திருக்கவில்லை. மறுபடியும் சென்று ஒரு பெரிய டாக்டரை அழைத்து வந்து காட்டினார். அவர் சிகிச்சையின்பேரில் ஸ்மரணை வந்தது.

* * *

சுலபமாகத் தயாராகக்கூடிய அதிக செலவு ஆகாத மருந்தை எழுதிக் கொடுத்தால் அந்த டாக்டருக்கு ஒன்றுந் தெரியாது, என்பது சிலருடைய எண்ணம். மலச்சிக்கல் தீருவதற்கு காலையில் எழுந்தவுடன் கொஞ்சம் உப்பு ஜலம் சாப்பிட்டால் போதும் என்று ஒரு டாக்டர் கூறினார். அவர் வார்த்தையை யாரும் கேட்கவில்லை. அந்த ஊரிலிருந்தால் இனி பிழைக்க முடியாது என்று டாக்டர் அடுத்த ஊருக்குப் போய் வேறு வழியைக் கடைப் பிடித்தார். மலச்சிக்கல் என்றவுடன் உப்பு சலத்தில் ஒரு வர்ணத்தைக் கலந்து புட்டியில் போட்டு அவுன்சுக்கு நான்கு அணா வாங்கினார். உப்பு ஜலத்தின் மூலம் உப்பரிகை கட்டினார்!

★

8-NOV 1944

காதலும் கவிதையும்

கி. ரா.

முன்னொரு காலத்திலே ஒரு அழகான தேவதை இருந்தது. பச்சைப் பசேலென்ற புதருக்குள்ளே செக்கச் செவேலென்ற ரோஜா புஷ்பங்கள் பூத்திருந்தால் பார்ப்பதற்கு எவ்வளவு அழகாயிருக்கும்? அவ்வளவு அழகாயிருந்தது. ஆனால், அதற்கு மனசு மட்டும் மகா கெட்டது: நாகப் பாம்பின் விஷத்தைப் போல் அவ்வளவு கெட்டது. அந்தத் தேவதை ஒரு சமயம் ஒரு ஊரில் உள்ள சனங்களை யெல்லாம் கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்று மனதில் நினைத்து விட்டது. அந்த ஊர் எங்கே யிருந்தது? அந்த தேவதைக்கு அவ்வளவு கோபம் வரும்படியாக அந்த ஊர் சனங்கள் என்ன தவறு செய்து விட்டார்கள்? அதை யெல்லாம் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. ஒரு வேளை அந்த ஊர் சனங்கள், ராஜாவுக்குப் பெண் பிறந்த கொண்டாட்டத்தின் போது அந்த தேவதைக்குப் பூஜை போட மறந்து போயிருக்கலாம்; அல்லது, வேறு என்ன குற்றம் செய்தார்களோ தெரியாது. தேவதைக்கு என்னவோ பிரமாத கோபம் வந்து விட்டது; அது மட்டும் நிச்சயம்.

அந்த ஊருக்கு எந்த விதமான சாபத்தைக் கொடுக்கலாம் என்று தேவதை ஆலோசித்தது. தன்னுடைய பூதங்களை ஏவி ஊர் முழுவதும் தீ வைத்துப் பொசுக்கி விடலாமா என்று முதலில் யோசித்தது: அல்லது ஊரிலுள்ள மலர்கள், மல்லிகை, முல்லை, ரோஜா, அவ்வளவையும் வாடி வதங்கிப் போகும்படி சபித்து விட்டால்! அல்லது ஊரில் உள்ள அழகான இளம் பெண்கள் எல்லாரையும் ஓரே நாளில் குரூபிகளான கிழவிகளாய்ப் போகும் படி செய்து விட்டால்? அது என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும். அது மனது வைத்தால் ஊர் முழுவதையும் பாலைவனமாகச் செய்ய முடியும். ஆனால், இதையெல்லாம் அது செய்ய வில்லை. இவை யெல்லாவற்றையும் விட மிக்க கொடூரமான ஒரு வேலையைச் செய்தது. இரவோடு இரவாக, ஒரு திருடன் மிகவும் விலை உயர்ந்த ஆபரணத்தைத் திருடிப் போவதைப் போல், அந்த ஊர் சனங்களுடைய மனத்திலிருந்து தெய்வீகமான ஒரு வார்த்தையைத் திருடி விட்டது. "காதல்'' என்ற அந்த வார்த்தையை ஆண்களும் பெண்களும் அடியோடு மறக்கும் படி சபித்து விட்டது.

இவ்விதம் மகா பயங்கரமான இந்தச் செய்கையைச் செய்து விட்டு அது திருப்தியுடன் மறைந்து விட்டது.

முதலில் ஆண்களும் பெண்களும் தங்களுக்கு இழைக்கப்பட்ட தீங்கை சரியானபடி உணரவில்லை. ஏதோ ஒன்று குறைவாக இருப்பதாகத்தோன்றிற்றே தவிர, அது என்ன என்பது தெரியவில்லை. பூஞ்சோலைகளில் சந்தித்துக் கொஞ்சும் காதலர்களும், வீட்டுக்குள்ளே திரை மறைவில் சம்பாஷிக்கும் தம்பதிகளும் திடீரென்று தங்கள் சல்லாபங்களை நிறுத்தி ஒன்றும் புரியாமல் ஒருவரை யொருவர் பார்த்து விழித்தனர். ஏதோ வழக்கமாகச் சொல்ல

வேண்டிய ஒரு வார்த்தையைச் சொல்ல வேண்டும் என்று மட்டும் நினைத்தார்களே தவிர, அந்த வழக்கமான சொல் என்ன என்பதை உணரவில்லை. அவர்கள் திகைத்தார்கள்; ஆனால் அதைப் பற்றி வாய்திறந்து ஒன்றும் பேசவில்லை; அந்த அருமையான பதத்தை அவர்கள் அடியோடு மறந்து விட்டார்கள். ஆனாலும் அவர்கள் இதனால் அதிகமாகக் கஷ்டப்படவில்லை; இன்னும் எத்தனையோ வார்த்தைகள் இருக்கின்றன அல்லவா பரஸ்பரம் கொஞ்சிக் குலவுவதற்கு?

ஆனால் போகப் போகத்தான் கஷ்டம் தெரிந்தது. அவர்களுடைய நெஞ்சிலே ஒரு வித சோகம் படரத் தொடங்கியது. ஒருவரை யொருவர் நெஞ்சாரத் தழுவிக் கொண்டனர்; தங்களுக்குத் தெரிந்த இனிமையான பெயர்களைச் சொல்லிக் கொஞ்சிக் குலவினர்; "என் உயிரே, என் கனவே, கற்பகமே" என்று என்னென்னவோ சொல்லி விட்டனர்; ஆனால், அவர்கள் நெஞ்சு நிறையவில்லை. இன்னும் ஏதோ ஒன்று, ஏதோ ஒரு தனித்த மந்திரச் சொல் தேவையாயிருந்தது. அதன் இனிய நாதத்தைக் காதால் பருக விரும்பித் துடித்தனர்; அதை உச்சரிக்க நாத் துடித்தது. ஆனால் பாவம்! எங்கே கிட்டப் போகிறது! அவர்கள் மனங் கசந்து வெதும்பினர்.

இந்த மனக் கசப்பிலே சண்டைகள் உதித்தன. உள்ளம் நிறையாத காதலர் ஒருவரை யொருவர் குற்றம் சாட்டிக் கொண்டு பிரிந்தனர். கட்டுக் கட்டாக் காதலர் உலவும் பூங்கா வனங்கள் பாழடைந்தன; திரை மறைவில் தாம் பத்ய சல்லாபங்கள் மறைந்தன. காதல் இல்லா விட்டால் சந்தோஷம் ஏது! யுத்தத்தினல் நாசமடைந்திருந்தாலும் அல்லது பயங்கர நோய் வந்து அழிந்து போயிருந்தாலும், அந்த ஊரில் இவ்வளவு துயரம் குடி கொண்டிராது; புனிதமான அந்த ஒரு சொல் மறைந்ததினல் அவ்வளவு பாழடைந்து போய் விட்டது அந்தப் பட்டணம்.

அந்த ஊரில் ஒரு கவிஞன் இருந்தான். அவனுடைய நிலைமை தான் எல்லோரையும் விடப் பரிதாபமாகி விட்டது. அவன் யாரையும் காதலிக்க வில்லை; அதனால், கஷ்டப் படவில்லை. கவிக்கரசியான வாணியைத் தான் அவன் காதலித்தான். அந்த துஷ்ட தேவதை சாபம் கொடுத்ததே அதற்கு முதல் நாள் தான் அவ்ன் ஒரு கவி எழுதத் தொடங்கியிருந்தான். அந்த அழகான கவிதையை அவனல் பூர்த்தி செய்ய முடியாமல் தவித்தான். ஏனெனில், அந்தக் கவிதை "உன்மேல் எனக்குக் காதல்" என்ற வார்த்தைகளுடன் முடிய வேண்டும். வேறு எந்த வகையிலும் முடிக்க முடியாது; வேறு எந்த வார்த்தையும் அங்கே பொருந்தாது.

கவிஞன் நெற்றியை விரலால் தட்டிக் கொண்டான். இரு கைகளாலும் தலையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டான். "எனக்கு என்ன பைத்தியமா?" என்று தானகவே கேட்டுக் கொண்டான். ஏற்கெனவே அந்தக் கடைசி அடிக்கு முந்திய அடிகளை அவன் எழுதி விட்டான். அந்த அடிகளின் கடைசிப் பக்கத்துடன் இசைந்து ஒலிக்கும் மந்திரச் சொற்கள் மாயமாய் மறைந்து விட்டன. மூளியான பாட்டின் சொற்கள் அவனைக் கூவி அழைத்

தன. அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இதென்ன மர்மம்! அவன் சிந்தித்தான். அந்தக் கானகத்தின் கோடியிலே, இன்னிசை பாடிக் குதித்து ஓடும் ஓடையின் அருகே, தேவதைகள் வந்து குளித்து நடமாடும் அந்த இன்பமயமான மாலை வேளையில் அவன் உட்கார்ந்து சிந்தித்தான். அவன் உள்ளம் வேதனையில் வெடித்து விடும் போல் இருந்தது.

ஒருநாள் காலையில் குளிர்ந்த மரத்தடியில் கவிஞன் உட்கார்ந்திருந்தான். நம்முடைய பொல்லாத தேவதை அவனைக் கண்டாள். கண்டதும் காதல் கொண்டு விட்டாள். தேவதை என்றால் சாமான்யமா? மனிதர்களைப்போல் தேவதைகள் சம்பிரதாயங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்குமா? தேன் வண்டு ரோஜாப் புஷ்பத்தை முத்தமிடுவதைப் பார்த்திருக்கிறீர்களா? அதைவிட வேகமாகப் பறந்து வந்து அவனுடைய வாய்க் கோணத்திலே தன் கோவையிதழ்களை வைத்துப் பொருத்தி விட்டாள். தன்னுடைய மூளியான பாட்டையே எண்ணி ஏங்கிக் கொண்டிருந்த போதிலும் அவளுடைய தெய்வீகத் தழுவலின் சுகத்தைக் கவிஞன் உணர்ந்தான்.

வைரம் பதித்த ரோஜப் புஷ்பங்களும் நீலாம்பரங்களும், பூத்துச் சொரியும் மாயச் செடிகள் பூமியிலிருந்து முளைத்து எழுந்தன. அவைகளில் தோன்றிய ஒளிக்குவியல் வானத்து மீன்களைப் போல் மின்னி மயக்கி வசீகரித்தது. பஞ்சகல்யாணிக் குதிரைகள் பூட்டிய சுவர்ண ரதத்திலே கவிஞனும் தேவதையும் ஆரோகணித்து அந்த மாயப் பூங்காவிலே உலவினர். அவர்களுடைய காதல் களியிலே உலகத்தையே மறந்து விட்டனர். ஆயிரம் ஆயிரம் வழிகளிலே இன்ப போதையை நுகர்ந்து திளைத்தனர். கண்ணுக்குத் தெரியாத வாத்தியங்கள் தேவ கானத்தை முழக்கின; மெய்மறக்கச் செய்யும் இன்னிசை காற்றுடன் கலந்து வந்து தழுவியது. நட்சத்திரம் பதித்த நிலாக்கதிரினால் நெய்த ஆடைகளை உடுத்திய தேவதைகள் ஆனந்த நர்த்தனம் புரிந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக கவிஞன் தன் கற்பனையில் ஊற்றெடுத்துப் பெருகும் அதிசயக் கவிதைகளைப் பொழிந்தான்.

அந்தத் தேவதை இந்தப் புதிய இன்பத்தை இதுவரையில் உணர்ந்ததேயில்லை. இளமையும் அழகும் ததும்பும் வாலிபன் நிமிஷத்துக்கு நிமிஷம் புதிய புதிய பாட்டுக்களை சிருஷ்டித்துப் பாடும் ஆனந்தத்தை அவள் அறிந்ததேயில்லை. வாலிபனின் வார்த்தைகள் ஓய்ந்தன. ஆவல் நிறைந்த அவனுடைய மூச்சுக் காற்று, அன்பு ததும்பும் அவனுடைய ஜீவத்துடிப்பு அவளுடைய வெறிகொண்ட முகத்தின் மேல் வருடிச் சென்றது. அவளுடைய சுருண்டு நீண்ட கூந்தலுக்கிடையே புகுந்து கிளர்ச்சி செய்தது. இன்ப வெள்ளத்தில் மூழ்கிய அவள் பாகைப் போல் கசிந்து தன் நிலையிழந்தாள்; தன் நினைவிழந்தாள்.

அவர்களுடைய ஆனந்தத்திற்கு ஒரு முடிவில்லை போல் தோன்றிற்று. நாட்கள் பறந்தன. அநேகம் நாட்கள். வாழ்க்கை அவர்களுக்கு முடிவில்லாத ஒரு இன்பக் கனவாய்ச் சென்றது. ஆனால், அவளுடைய நெஞ்சிலே ஓரோர் சமயம் துளி சோகம் படர்ந்தது. கன்னத்தைத் தாங்கிய கையுடன், அவளுடைய

நீண்ட கூந்தல் பிரிந்து சுருண்டு முதுகின் மேல் புரண்டு இடை வரையில் தொங்க, யோசனையில் மூழ்கி, அவள் சில சமயம் உட்கார்ந்திருப்பாள்.

"என் இதயத்தின் ரமணியே! உனக்கு என்ன நேர்ந்தது? இடைவிடாத ஆனந்தத்தை நாம் அனுபவிக்கிறோம். அழகுக்கே உறைவிடமான நீ, சகல வல்லமையும் படைத்த நீ துயரப்படக் காரணம் என்ன?" என்று அவன் கேட்டான்.

முதலில் அவள் பதில் சொல்லவில்லை. மீண்டும் மீண்டும் அவன் வற்புறுத்தவே ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள். பிறகு, "பிறருக்கு ஒரு தீங்கு செய்தால் அதன் பலனை நாமே அனுபவிக்கும் படியான காலம் வந்துவிடுகிறது! இதுவரையில் நீ 'உன் மேல் எனக்குக் காதல்' என்று சொல்லவேயில்லை. அதனால் என் மனத்தில் துக்கம் புகுந்தது" என்று சொன்னாள்.

அவன் உடனே அந்த மந்திர வார்த்தையைச் சொல்லவில்லை. தன்னுடைய கவிதைக்கு முடிவு கிடைத்து விட்டது என்ற ஆனந்தத்தில் துள்ளி எழுந்தான். அவனை அங்கேயே நிறுத்தி வைக்க அந்தத் தேவதை செய்த முயற்சிகளெல்லாம் பலிக்கவில்லை. அந்த அதிசயப் பூங்காவனமும், நட்சத்திரங்களைப் போல் பூத்துச் சொரியும் மலர்க் கூட்டமும் அவனை மயக்க முடியவில்லை. அவன் பூலோகத்திற்குத் திரும்பினான். தன்னுடைய கவிதையை எழுதி முடித்துப் பிரசுரித்தான். சாபத்திற்காளான, நகரத்தின் ஆண்களும் பெண்களும், தாங்கள் மறந்து போன மந்திரச் சொல்லை மீண்டும் கண்டு பிடித்து அனுபவித்தனர்.

காதலர் மீண்டும் நந்தவனங்களில் சந்தித்துக் குலாவினர். திரை மறைவிலே தாம்பத்ய சல்லாபங்கள் குசு குசு வென்று கேட்கத் தொடங்கின.

கவிதையினால்தான் காதல் இன்பம் தருகிறது. கவிஞர்கள் பாடாத சொற்கள் எதுவும் காதலர் நாவில் உதிப்பதில்லை.

[காத்துலே மெண்டிஸ் என்ற ஸ்பானிய ஆசிரியர் எழுதியதின் மொழி பெயர்ப்பு]

இன்பம்

காதலினா லுயிர் தோன்றும்; — இங்கு
காதலினா லுயிர் வீரத்தி லேறும் ;
காதலினா லறி வெய்தும்; — இங்கு
காதல் கவிதைப் பயிரை வளர்க்கும்;
ஆதலினா லவள் கையைப் — பற்றி
அற்புத மென்றிரு கண்ணிடை யொற்றி
வேதனை யின்றி யிருந்தேன்; — அவள்
வீணைக் குரலி லோர் பாட்டிசைத் திட்டாள்.

— பாரதி

இலக்கிய ஆராய்ச்சி:

எழுத்தாளர் சங்கம்

"வில்லன்"

இன்று தமிழ் மொழியானது நாளுக்கு நாள் புது வனப்பும், புது வளமும், புது வலுவும் பெற்று விரைந்து மறுமலர்ச்சி யடைந்து வருவது வெள்ளிடை மலை. எழுத்தாளர் என்னும் மதிப்பிற்குரிய கவிஞர், கட்டுரை யாளர், சிறுகதையாளர், நாவலாசிரியர், நாடகாசிரியர், பத்திரிகாசிரியர் ஆகியோர் பலர் இன்று நம்மிடையே உள்ளனர். பல பதிப்பகங்கள் பலவகை நூல்களை அழகுற வெளியிட்டு வருகின்றன. பத்திரிகைகளும் பெருகி மக்களிடையே பெருவாரியாக வழங்கி வருகின்றன.

இவ்வளர்ச்சியுடன் மொழியைப் பற்றிய சண்டைகளும் தலை காட்டி வருகின்றன. மறுமலர்ச்சி எழுத்தாளன் தமிழின் தொன்மைத் தூய்மைக்குக் கேடு சூழ்வதாகத் தனித்தமிழ் எழுத்தாளர் கூறுகின்றனர். புது எழுத்தாளர் எளிமை என்னும் பெயரில் இலக்கணப் பிழைகள் மலிந்ததும் பாமரத்தன்மை பொருந்தியதுமான மொழியைக் கையாண்டு வருவதாகப் பண்டைத் தமிழ் நூல்களையும் மொழியின் பழைய மரபுகளையும் கற்ற புலவர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். இக்குற்றச் சாட்டுகள் நியாயமானவையா என்னும் பிரச்சனையில் நாம் இப்போது இறங்கத் தேவையில்லை. மொழியின் மூலாதரமான கொள்கைகள், மரபுகள் என்னும் அடிப்படையின் மீது உறுதியாக நின்று, இலக்கியமானது காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப எந்தப் போக்கில் வளர்ச்சியடைய வேண்டும் என்பதை அவ்வப்போது ஆராய்ந்து நிர்ணயிக்க வல்லதும், அனைவரின் மதிப்பிற்குரியதுமானதொரு ஸ்தாபனம் நம்மிடைய இல்லாதிருப்பதின் குறையையே இச்சண்டைகள் வலியுறுத்துகின்றன என்பதை மட்டும் நாம் இப்போது மனதிற் கொள்ளவேண்டும்.

மொழியானது கால மாறுபாடுகளுக்கொப்ப வளர்ச்சியடைதல் இயல்பு. சங்கத் தமிழின் வளர்ப்பிலேயே அது என்றென்றும் இருக்கவேண்டுமென வற்புறுத்துவோரைப் பத்தாம் பசலிகள் என்றே கூறவேண்டும். தமிழ் மொழி உலக நிலைக்கும் மக்களின் நிலைக்கும் தக்கபடி உயிர்த்துடிப்புடன் வளர்ந்து கொண்டே செல்ல வேண்டும். உறுதியான அடிப்படையை நழுவவிடாமல் இவ்வண்ணம் வளர்ச்சியடையும் பொருட்டு மொழியின் தனியியல்பைப் பாதுகாக்க வல்லவராயும் அதைப் புது வழியில் நடத்திச் செல்லக்கூடியவராயுமுள்ள எழுத்தாளர்களும், அறிஞர்களும் வாழ்க்கையின் பல துறைகளிலும் ஈடுபட்டு மக்களிடையே நெருங்கிய தொடர்புடைய பொதுஜனத் தலைவர்களும் அடங்கிய கழகமொன்று அமைக்கப்படுவது இன்றியமையாததாகும். சுருங்கக் கூறின், பிரெஞ்சு அகாடமியைப் போன்றதொரு மதிப்பு வாய்ந்த கழகம் தமிழகத்தில் நிறுவப்பட வேண்டும். அதற்குப் பூர்வாங்கமாக தமிழ் எழுத்தாளர்களின் சங்கமொன்று உடனே நிறுவப் படவேண்டும்.

இன்று எழுத்தாளர் என்றழைக்கப் படுவதற்குரியவர் பலர் நம்மிடையே இருந்துவருகின்றனர் எனக் கூறினேம். இவர்களிற் பலர் எழுதுவதையே தம் தொழிலாகக் கொண்டு சீவனம் நடத்துகின்றனர். ஆயினும் நம்மிற் பலர் எழுத்து ஒரு கலையே என்றும், அதற்குரிய மதிப்பு கலை மதிப்பைத தவிர வேறென்று மில்லை என்றுங் கருதி அதன் படியே எழுதி வருகின்ருேம்.

வளர்ந்து வரும் நம்முடைய சமூகத்தில் எழுத்தானது கலையாயிருப்பதோடு ஒரு தொழிலாகவும் உள்ளது என்றும், அதற்குக் கலை மதிப்போடு வியாபார மதிப்பொன்றும் உள்ளது என்றும் நாம் இன்னும் போதிய அளவு உணராமல் இருந்து வருகின்ருேம் சிறப்பாக, எழுத்தாளனின் எழுத்தைக் காசாக்கிப் பொருளீட்டும் பத்திரிகைச் சொந்தக்காரர்களும் பிரசுராலயங்களும் இதைப் பெரும்பாலும் உணராமலேயே இருந்து வருகின்றனர். இம் மனப் பான்மை நம்மிடையே இப்படியே இருக்குமானல், எழுத்தாளர்களுக்குப் பெயரும் புகழும் கிடைக்கலாமே யொழிய, வயிறு கழுவுவதற்கு இன்றியமையாத பொருள் கிடைக்காது. அவர்கள் வறுமை வாய்ப்பட்டு அகால மரணமடைய வேண்டியதே. ஆதலால், எழுத்தைத் தொழிலாகக் கொண்டவர்களுக்குப் போதிய பாதுகாப்பளிப்பது இன்றியமையாததாகும். எழுத்தாளனின் எழுத்து யாதாயினும், அதற்குக் 'காபி ரைட்டு' உரிமை உண்டென்பது மேலை நாடுகளில் போல இங்கும் அங்கீகரிக்கப்பட வேண்டும். பதிப்பகங்களும் பத்திரிகாலயங்களும் அவனது வறுமை நிலையைத் தமக்கனுகூலமாகக் கொண்டு சூறையாட விட்டு விடலாகாது. இவ்வண்ணம் எழுத்தாளரின் பல உரிமைகளைப் பாதுகாத்து அவனுக்குப் போதிய ஆதரவளிப்பதற்கும் சங்கம் இன்றியமையாததாகும்.

எழுத்தாளர்களின் சங்கம் கேவலம் எழுத்தாளர்களின் தொழிற்சங்கமாக மட்டும் இராது. அது எழுத்தாளர்களிடையே ஒற்றுமையை வளர்த்து, மொழியின் வளர்ச்சி விஷயமாக அவர்கள் நடந்து கொள்ள வேண்டிய ஒழுக்கத்தையும் விதிகளையும் நிர்ணயித்து நடைமுறையில் கொண்டு வரச் செய்யும். எழுத்தாளர்கள் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளையும் அது வலியுறுத்தும். நெருக்கடியான காலங்களில் அது மக்களுக்குச் சரியான வழி காட்டும். பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், நாட்டின் சுதந்திரம், நியாயம், தருமம், மானம் ஆகிய மகத்தான தேசிய நலன்களுக்கு ஆபத்து நேரிடும் நெருக்கடியான காலங்களில், அவற்றின் பொருட்டு எழுத்தாளர் அறப் போர் தொடங்குமாறு தூண்டும். எழுத்தாளர் இவ்வழியில் தங்கள் கடமையைச் சரிவர ஆற்றுவதற்கு ஆதரவளிக்கும் சங்கமொன்று இருப்பதும் இன்றியமையாததாகும்.

இங்ஙனமாக, மொழியின் பாதுகாப்புக்கும் அதன் வளர்ச்சிக்கும், எழுத்தாளரின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதற்கும், தேசிய நலன்களுக்கும் பொதுமானிடச் சுதந்திரங்களுக்கும் ஆபத்து நேரிட்ட காலை அவற்றின் பொருட்டு அறப்போர் தொடுப்பதற்கும் தமிழ் நாட்டில் எழுத்தாளர்களின் சங்கமொன்று விரை

வில் ஏற்பட வேண்டியது அவசிய மாகும்.

இச்சங்கத்தின் அவசியத்தைப் பற்றி மேலும் விரித்துக் கூறுவது மிகையாகும். தமிழ் எழுத்தாளர் கள் ஒரு சங்கம் நிறுவிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் சில ஆண்டுகளாக நம்மிடையே இருந்துதான் வருகின்றது. எழுத் தாளர்களின் வாழ்க்கைப் பிரச்னை களும், மொழி வளர்ச்சியின் போக்குகளைப் பற்றிய பிரச்னைக ளும் நாளுக்கு நாள் வலுத்து வரு வதால், எழுத்தாளர்கள் ஒரு சங்கமாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்னும் ஆர்வம் மீண் டும் தோன்றியுள்ளது. உண்மை யில் சில எழுத்தாளர்கள் இவ்விஷ யமாகக் கவனஞ் செலுத்தி தமிழ் நாட்டு எழுத்தாளர் மகா நாடு ஒன்றைக் கூட்ட முன் வந்திருப்ப தும், யாழ்ப்பாணத் தமிழர்கள் தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்க மொன்று நிறுவிக் கொண்டிருப்ப துடன், தமிழ் நாட்டின் மீதும் தமிழ் மொழியின் வளர்ச்சியின் மீதும் உள்ள பற்றுதலால், தமிழ் நாட்டு எழுத்தாளர்கள் விரைவில் ஒரு சங்கம் நிறுவிக் கொள்ள வேண்டும் என விண்ணப்பித்துத் தீர்மானமொன்று நிறைவேற்றி யிருப்பதும் நம்மிடையே பெருகி வரும் ஆர்வத்தின் வெளிப்பாடுக ளேயாம்.

தமிழ் எழுத்தாளர்கள் மகா நாட்டை யார் கூட்டப் போகிறார் கள்? எங்கே கூட்டப் போகிறார் கள்? என்பவை சிறு விஷயங் கள். காரியம் எப்படியாவது நடை பெற வேண்டும். வீண் வாதங்களில் இறங்கிக் காரியத் தைக் கெடுத்துவிடலாகாது. ஏற் கெனவே முன் வந்திருப்பவர்க ளுக்கு ஆதரவளித்து காரியம் நடைபெறுமாறு செய்வதே முக் கியமான விஷயமாகும். ஆதலின் தமிழ் நாட்டிலுள்ள எழுத்தாளர் அனைவரும் பெரிய மனசு பண்ணி சங்க மொன்றை அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதே நாம் செய்து கொள்ளும் தாழ்ந்த விண் ணப்பம்.

கட்டை வண்டி

கே. விஜயராகவன்

கட்டை வண்டி என்ற தலைப்பைப் படித்ததும் குண்டுங் குழியும் நிறைந்த கிராமப் பாதையின் ஞாபகம் வருகிறதல்லவா? நல்லது, இதோ, படித்துப் பாருங்கள். வாழ்க்கையைக் கட்டை வண்டியோடு ஒப்பிட்டு ஒரு பெரியவர் சொன்னார். அதில் எவ்வளவு உண்மை அடங்கியிருக்கிறது தெரியுமா? கட்டை வண்டி என்றால் வண்டியை மட்டும் குறிப்பிடவில்லை. அதில் பூட்டப்படும் காளைகளைத் தான் குறிக்கும். ஒரே வண்டியில் பூட்டிய இரண்டு மாடுகள் ஒற்றுமையாக நடந்தால்தான் வண்டி மேலே செல்லும். ஒன்று முன்னும், இன்னொன்று பின்னுமாக இழுத்தால் வண்டியின் கதி அதோ கதிதான்.

அதைப் போலவே தான் வாழ்க்கை யாகிய வண்டியை நடத்திச் செல்ல ஆண் பெண் இருவருடைய ஒற்றுமையும் அவசியம். குடும்பம் என்றாலே வண்டியைப் போல பாரத்தையும் சுமந்து செல்ல வேண்டும். உரலுக்குள் தலையை விட்டவன் உலக்கைக்கு பயப்பட்டால் ஆகுமா? வாழ்க்கை இன்ப துன்பங்கள் நிறைந்தது தான். இரண்டையும் சமமாகப் பாவித்து நடப்பது தான் மனித நீதி.

சாதாரணமாக எளிய வாழ்க்கையிலே தான் ஒற்றுமை நிலவுகிறது. எங்கு கஷ்டமிருக்கிறதோ அங்கே தான் சுகமிருக்கிறது. கஷ்டமில்லாத வாழ்க்கை சீக்கிரம் முடிவு அடைந்து விடுகிறது. படாடோபமான வாழ்க்கை, நாகரிக வாழ்க்கை வேகத்தின் உச்சஸ்தானத்தை அடைந்து ஒன்றிரண்டு வருஷங்களிலேயே கசந்து விடுகிறது. வெளிக்குத் தெரியாமல் இருக்கலாம்.........ஆனால்.

* * *

மாரிமுத்து, அருக்காணியைக் கண்ணலம் செய்து கொண்டு இன்றைக்கு எட்டு வருஷங்கள் முழுசாக ஆகிறது. இந்த எட்டு வருஷங்களும் அவர்களுடைய வாழ்க்கை கட்டை வண்டியைப் போல மெதுவாகத் தான் சென்றது. மோட்டார் வேகத்திலும், ஏரோப்பிளேன் வேகத்திலும் சென்று எங்கும் மோதிக் கொள்ளவே இல்லை!

'இருந்தால் அருக்காணியைப் போலவும் மாரிமுத்தைப் போலவும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் சாக வேணும்' என்று எல்லோரும் சொல்லுவார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் சண்டை என்பது சர்வ சாதாரணமான

விஷயம்! ஒற்றுமையும் அப்படித்தான். இல்லா விட்டால் பத்துப் பேருள்ள ஒரு குடும்பத்துக்கு அவள் ராணியாக இருந்து நடத்த முடியுமா?

அவள் பெரிய ராங்கிக் காரி தான். அழுத்தமான நெஞ்சும் யாருக்கும் பயப் படாத உறுதியும் உடையவள் தான்.

வந்த பணத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்தி வந்தார்கள். மாரிமுத்து தான் குடும்பத்தில் பெரியவன். மற்றது எல்லாம் சின்னஞ் சிறுசுகள். அதோடு வயது சென்ற தாயும் தகப்பனும். இத்தனை பேரையும் வைத்து சம்ரக்ஷனை செய்வதில் அவனுக்கு இணை அவனே தான்.

அவள் அள்ளிச் சொருகிய கூந்தலும், வெற்றிலை மென்று காவியேறிய பல்வரிசையும் அவளுக்கு இயற்கையாகவே உள்ள அழகை அதிகப் படுத்தின.

அவளும் மாரிமுத்தும் மலங்காட்டில் விறகு வெட்டி விற்று

கணவனோடு கைகோத்துக் கொண்டு விறகு கட்டப் போவாள். மாரிமுத்து தான் அவளுக்கு உயிர். அவனை விட்டுப் பிரிந்திருப்ப தென்றால் அவளுக்குக் கஷ்டம்.

விறகு கட்டப் போவது என்றால் இரவு என்றும் பகல் என்

றும் கிடையாது. விடிய ஒரு ஜாமம், இருக்க கட்டுச் சோறு கட்டிக் கொண்டு புறப்பட்டு விடுவார்கள். நிலவு காலமாக இருந்து விட்டால் சொல்ல வேண்டியதில்லை. வீட்டு வேலை அத்தனையும் செய்து விட்டு கணவனோடு சீக்கிரமாகவே கிளம்பி விடுவாள். மாரிமுத்து அவளைப் போலவே கள்ளங் கபடு இல்லாதவன். உற்சாகமாக வேலை செய்வான், அவளுடைய அழகில் கட்டுண்டு கிடக்கும் இளங்காளை அவன்.

அவர்கள் வாழ்க்கையை நடத்த உதவியாக இருந்ததும் ஒரு கட்டை வண்டிதான். அவர்கள் வண்டியில் வேடிக்கையாகப் பேசிக் கொண்டு பிரயாணம் போகும் காட்சியைக்கண்டு யாரும் பொறாமைப் படாமல் இருக்க முடியாது.

கோடைக் காலம். வெயில் அதிகமாக இருந்தது. ஆகையால் அவளை மலை யடிவாரத்தில் ஒரு மரத்தின் நிழலில் இருக்க விட்டு மலையுச்சிக்குச் சென்று விட்டான். வெயிலில் வழி நடக்கச் சற்று ஆயாசமாக இருந்த படியால் அவளும் கீழே தங்கியிருக்கச் சம்மதித்தாள். ஆனால் அவளுடைய உத்திரவு என்ன? ஆமாம். அவன் சீக்கிரமே திரும்ப வேண்டும்.

அவன் சென்றதும் அவள் நாலாப் பக்கமும் தன் பார்வையைச் செலுத்தினாள். அந்தக் கோடையிலும் வாடாத இயற்கையின் பசுமை செறிந்த காட்சிகள் அவளைப் பரவசப் படுத்தியது. அடுக் கடுக்காக நின்ற மலைக் குன்றுகளின் கம்பீரமான தோற்றம் இன்று அவளைக் கவர்ந்தது.

திடீரென்று அவள் கனவைக் கலைத்தது ஆணும் பெண்ணுமாகிய இரண்டு காட்டுப் புறுக்கள். புரியாத பாஷையில் அவையே கொஞ்சிக் கொஞ்சிப் பேசிக் கொண்டிருந்தன, அவள் தலைக்கு மேலே மரக்கிளையில். அவற்றைக் கண்ட போதுதான் அவள் தனிமையையும், நேரம் வெகு தூரம் சென்று விட்டதையும் அறிந்தாள். பிறகு, மாரிமுத்து வந்ததும் சரமாரியாகச் சொரிந்து தள்ளினாள், தன் உள்ளத்தில் உள்ளதை. பெரிய சண்டேயே போட்டு விட்டாள்! மாரிமுத்து, "யாராச்சும் பாத்தா, என்ன நெனைப்பாங்க?" என்றான். அவளும், துடுக்கா, "அப்பத் தெரியுமல்ல!" என்றாள். ஆனால், கொஞ்ச நேரத்தில் இருவரும் சமாதானம் செய்து கொண்டதோடு, குதூகலமாக வீட்டிற்குத் திரும்பினார்கள்.

எதையோ நினைத்துக் கொண்டு, "அக்கரைக்கு இக்கரையே பச்சை" என்றான். அவள் சிரித்தாள்.

வாழ்க்கை வண்டி சரியாக ஓட வேண்டுமானால், சிரிப்பு மட்டும் போதாது, அழுகையுந் தான் வேண்டும்!

என்ன சிகிச்சை?

[கோமதி சுப்ரமணியம்]

மயக்கமாகப் படுத்திருந்த காந்திமதி, ஜன்னி வாக்கில் திடீரென்று பிதற்ற ஆரம்பித்து விட்டாள். அந்தச் சத்தத்தைக் கேட்டு ஓடிவந்த சபாபதி அவள் நிலையைக் கண்டு கலங்கினான். குற்றாலத்தில் டாக்டரை அழைத்து வர வேண்டுமானால் தென்காசிக்குப் போய்த்தானாக வேண்டும். அவளைத் தனியாய் விடுத்து எவ்வாறு செல்வதென்று குழம்பினான்.

மின்வெட்டுப் போல் ஒரு யோசனை பளீரென்று தோன்றியது. அன்று அருவிக் கரையில் ஒரு புது நண்பனை சந்தித்தது ஞாபகத்திற்கு வந்தது. அவன் ஒரு டாக்டர். அந்த டாக்டர் நண்பனை அழைத்துவர ஓடினான்.

டாக்டருடன் உள் நுழைந்த சபாபதி "காந்திமதி" என்று கூப்பிட்டான். பேச்சில்லை. சிறிது கஷ்டத்துடன் மூச்சு விட்டாள். மிரள மிரள விழித்தாள்.

"இதோ டாக்டர் வந்திருக்கிறார். பேசாமல் படுத்துக் கொள்" என்றான்.

அவள் சற்றுக் கண்ணைத் திறந்து பார்த்தாள். டாக்டர் அங்கு பூவேலை செய்யப்பட்ட படுதா ஒன்று தொங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தார். அது அவர் மனதை மிகவும் கவர்ந்தது. அதில் 'அன்பே கடவுள்' என்று போட்டிருந்தது.

"என்ன...! டாக்டரா? நர்ஸா? ஐயோ நர்ஸ்...அந்த பாவி இங்கு வர வேண்டாம்" என்று பெரிதாக அலற ஆரம்பித்து விட்டாள்.

அவள் குரலையும், அவளையும் கண்டதும் டாக்டரின் நெஞ்சம் துணுக்குற்றது. அவருடைய நினைவு மாலையில், ஒரு புஷ்பம் — ஒரு முள் நிறைந்த புஷ்பம் — ஆடி அசைந்தது.

எல்லா வாலிபர்களையும் போலவே, ஜன சமுதாயத்திற்கு பற்றற்ற தொண்டு புரிந்து, தன் வாழ்க்கையை புனிதமாக்க ரங்கராஜு நினைத்தான். அவன் அப்பொழுது டாக்டர் வேலைக்கு ஆரம்பித்த புதிது. இதே நோக்கம் கொண்ட காந்திமதி நர்ஸாக வந்து சேர்ந்தாள். அவள் வந்தது முதல் ரங்கராஜுவுக்கு நல்ல பெயர். எந்த இரவாயிருந்தாலும் சரி, யார் வந்து கூப்பிட்டாலும் காந்திமதியை அழைத்துக் கொண்டு அந்தக் கேஸைப் பார்த்து வருவான். அவர்கள் எங்கு சென்றாலும் சுகமாகவே முடியும். இவர்கள் புகழ் நாளுக்கு நாள் ஓங்க ஆரம்பித்தது. ரங்கராஜு பெரிய பணக்காரனாகி விட்டான்.

பருவத்திற்குத் தக்கபடி புத்தி தீக்ஷண்யம் ஏற்படும். காந்திமதியின் கோமள இதயத்தில், வானவில்லில் மழைத்துளி ஒளிந்திருப்பது போல காதல் ஒளிந்திருந்தது. இந்த நோயை டாக்டரோ அவர் ரப்பர் மாலையோ அறிந்து கொள்ளவில்லை.

அவளிடம் சொந்த சகோதர பாவத்துடனேயே பழகி வந்தான். காந்திமதி வந்தபின்னரே அவனது புகழ் பரவியது. அந்த ஒரு காரணத்தினாலேயே அவளிடம் அளவிலாத அன்புடனிருந்தான். ஆனால், அவன் உள்ளத்தில் எவ்வித

மான எண்ணமும் உதயமாக வில்லை. கபடமில்லா நெஞ்சுட னேயே பழகிவந்தான்.

ஒருநாள் ரங்கராஜு, "உனக் குத் தெரியுமோ காந்திமதி? நான் பங்கஜத்தின் வியாதிக்கு மருந்து கண்டு பிடித்து விட்டேன்" என் ருன்.

"எக்ஸரே எடுத்தும் பலன் இல்லையே"

"அவள் மன நோய்க்கு மாங் கல்யந்தான் மருந்து"

காந்திமதி அவ்விடத்திலேயே மூர்ச்சையா யிருப்பாள். டாக் டர் முன் அப்படிச் செய்யாது தைரியத்தோடு அவள் சமாளித் துக் கொண்டாள்.

ரங்கராஜுவுக்கும் பங்கஜத்திற் கும் கலியாணம் நடந்தது. காந்தி மதியின் மனக் கோட்டைகள் இடிந்து மண்ணுகி தரையோடு தரையாயின. கலியாணத்தின் போது அவள் சகோதரனுக்கு விவாகம் நடந்தால் எவ்வளவு ஆனந்த மாயிருக்குமோ அவ்விதம் நடித்து விட்டாள். ஆனலும் உள்ளத்தி லெழுந்த தீ மாத்திரம் அணையவில்லை. மேலும் புகைந்து கொண்டிருந்தது.

எவ்விதக் கிளர்ச்சியுடனே வரு ஷம் ஒன்று ஓடி மறைந்தது. காந்திமதி இப்பொழுது இவ்வளவு ஆனந்தமுள்ளவளாய்க் காணப் படுவானேன். ரங்கராஜு தகப் பன் ஸ்தானம் அடையப் போகி ருன் என்பதற்காகவா? இல்லை, இல்லை; உண்மை அதுவல்ல. டாக்டரின் மனைவி மிகவும் பல ஹீன மாயிருக்கிருள். பிரசவத் தில் அவள் பிழைக்காவிட்டால்? ஒரு சமயம் தன்னையே மறுபடி யும்......அப்படி ஏன் நடக்க முடியாது?

அவள் எண்ணத்திற்கு ஒத்துப் பாடியது போல் குழந்தை இறந்து பிறந்தது. பங்கஜம் உயிருக்கு மன்ருடிக் கொண்டிருந் தாள். ஜாக்கிரதையாகப் பார்த் தால் ஒருக்கால் பிழைக்கலாம் என்ற நிலைமையில் இருந்தாள். டாக்டர் நிலை கொள்ளாமல் தத்த ளித்தார். அப்பொழுது நர்ஸ் உண்மையுள்ளவள் போல் நடித் தாள். அவள் நடிப்பில் மயங்கி விட்டார் டாக்டர். மருந்து ஆகா ரம் முதலியவைகள் "டயப்" படி கொடுப்பதில் காந்திமதியை நம்பி ஞன். ஆமாம். கடற்கரையில் நின்று பார்த்தால் அடிவானத்தில் கடல் அமைதியாகத் தான் தோன் றும். அங்கே சென்ருல் கொந்த ளிப்பும் குமுறலும் வெளிப்படும்.

காந்திமதியின் பொருமைக் காதல் அலைகள் பேராசை யென் னும் காற்ருக அலைபட்டது. கால் வலிக்குத் தடவ வைத்திருந்த விஷ மருந்தில் ஒரு சொட்டு உள் ளுக்குக் கொடுத்து விட்டாள். பங்கஜம் ஜன்னி வாக்கில் வாங்கி குடித்தும் விட்டாள். ஜன்னி ஒரே மூடு ஜன்னியாக மூடி விட்டது.

ரங்கராஜு நல்ல சமயத்தில் காந்திமதியின் கோரமான இதயத் துடிப்பை அறிந்து விட்டான். சந்தேகத்தைப் போல விரைவாக வளரும் விஷ விருக்ஷம் என்ன? சாவிற்கு ஊசலாடிக் கொண்டி ருந்த பங்கஜம் அவன் வைத்திய சிகிச்சை பெற்ருள். ஆனல் உயிர் பெறவில்லை.

காந்திமதி தனக்கு விரித்த வலை யில் தானே சிக்கிக் கொண்டாள். ரங்கராஜு கண்காணுத இடத்

திற்கு மறைந்து விட்டான். ரங்கராஜு பழிவாங்கும் தகுதியில் இருக்கிருன். அவன் உள்ளம் பழிக்குப் பழிவாங்கத் துள்ளியெழுந்தது. மெய் மறந்து கண்ணை மூடியபடி இருந்தான்.

"என்ன ரங்கராஜு ஒரு மாதிரியாக விழிக்கிருயே! ஐயோ என் மனைவி காந்திமதி பிழைப்பாளா? பிழைக்க மாட்டாளா? சொல்லேன். என் தயக்கம்? உண்மையைச் சொல்லிவிடு நண்பா! அவள் நிலை மோசமாக இருக்கிறதா? ஐயோ என் மௌனமாக நிற்கிருய்...ரங்கராஜு அவள் பிழைப்பாளாடா? சொல்லேன்" என்று துடிக்கும் நண்பனின் குரலைக் கேட்டு டாக்டர் சிந்தனை கலைந்தார்.

'அன்பே கடவுள்' என்று பூவேலை அமைந்த திரை ஆடிக்கொண்டிருந்தது. உள்ளத்திரையிலோ இருவித எண்ணங்கள் ஆடிக் கொண்டிருந்தன.

இந்தப் பொல்லாத மனசு என்னவெல்லாமோ பண்ணிவிடுகிறதே? இன்பத்தைத் துன்பமாகவும், துன்பத்தை இன்பமாகவும், மாற்றி அமைத்துப் படாதபாடு படுத்தி விடுகிறது. சில சமயம் வாழ்வின் போக்குகளே புரிவதில்லை. என்னவோ கும்பலோடு கும்பலாகப் போய்க் கொண்டிருக்கிருேம். எங்கெங்கு எந்த உள்ளத்தில் மர்ம வாதனையின் துடிப்பு நிறைந்திருக்கிறது? இதற்கெல்லாம் காரணம் என்ன என்பதைச் சிந்திக்க முடிகிறதா? காற்றில் ஆடும் இளந்தளிரைப் போல் உள்ளம் ஊசலாடி என்ன பயன்?

கொஞ்ச நேரம் தீவிரமாக யோசிப்பவன் போல் நின்ருன். கண் எதிரே சில காட்சிகள் விரிந்தன. ஆனல், தெளிவற்று புகைப் படலம் மாதிரி அவை தோன்றுவானேன்? மனதில் உள்ளது, எதிரே தெரிகிறதா? பொங்கி வரும் உணர்ச்சிகளை அடக்குவது கஷ்டமாகவே இருந்தது. அதிலே, "ஆகா என்ன செய்யத் துணிந்தோம். இவளைக் கொல்வதால் என் பங்கஜம் வரப் போகிருளா? எனக்குக் கிடைக்கும் லாபம் என்ன? உண்மை நண்பனின் இதயத்துடிப்பைக் கண்டு உள்ளம் மகிழ்வதா? நம்பினேரை மோசம் செய்வதா? ஈசுவரா! என்னை மன்னித்துவிடு. என் உள்ளத்தில் இவ்வித பைசாச எண்ணம் இனியும் தோன்ருதிருக்க அருள்புரி என்னப்பனே"

மற்ருென்று: "பழிக்குப் பழி ஏன் வாங்கக் கூடாது? உயிருக்கு உயிரை வாங்குவதே நியாயம்"

ஏறிட்டுப் பார்த்தான். "அன்பே கடவுள்" என்ற திரை அது பாட்டுக்கு ஊசலாடியது. சபாபதி, டாக்டர் மிகுந்த யோசனையின் பேரில், வியாதியை நிர்ணயிப்பதாக நினைத்தான். சில நிமிஷங்களுக்குப் பின்னல் ஒரு ஊசியைப் போட்டுவிட்டு டாக்டர் போய்விட்டார்.

அது 'விஷமா? அமிர்தமா?'

★

ஆசிரியர்
சரத் சந்திரசட்டர்ஜி

சாவித்திரி

மொழிபெயர்ப்பு.
ஆர். ஷண்முகசுந்தரம்.

"**வே**ண்டாம், வேண்டாம். அவசரப் படுத்தாதீர்கள். நான் குளித்துக் கொள்கிறேன். நான் காலையில் ஒன்றும் சாப்பிடுவதில்லை. ஆனால், எனது மத்தியானச்சாப்பாடு மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாகவே இருக்கும். டீ முதலிய அவசியமில்லாதவைகளை எல்லாம் குடித்து பசியைத் தணித்துக்கொள்வதில்லை. நீங்கள் டீ குடிக்கும் வரையிலும் நான் அந்த ஆர்மோனியத்தை வைத்துக் கொண்டு இரண்டு பாட்டுப் பாடுகிறேன்" என்றான். பாடப் போவதைக் கேட்டு சரோஜினி சந்தோஷமடைந்தாள். தலை நிமிர்ந்து, "ஆம், பாடுங்கள்" என்றாள். ஆனால் உடனே கீழே தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

அவளுடைய வார்த்தைகளே அவள் காதில் விரசமாகப் பட்டது. ஜோதிஷ் சிரித்துக்கொண்டு, "என் தங்கைக்குச் சங்கீதம் இருந்து விட்டால் வேறு ஒன்றும் வேண்டியதில்லை......இல்லை இல்லை, சதீஷ் பாபு நீங்கள் கொஞ்சம்......"

உபேந்திரன் இதுவரையில் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தான். இப்போது அவன், "அவன் குளிக்காமல் ஒன்றும், சாப்பிடமாட்டான். நாம் அவனை வேண்டிக் கொண்டிருப்பதற்குள் டீ ஆறிப்போய்விடும். சதீஷ், நீ உன்னுடைய பஜனை கிஜனை எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு வா. எனக்கு வேறு வேலை இருக்கிறது." என்று கூறிவிட்டு டீ கோப்பையை வாயில் வைத்துக் கொண்டார். ஜோதிஷ் இதைக் கேட்டுச் சிரித்தான்.

சதீஷ் அருகிலேயே ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். இதற்கப்புறம் அவனுக்கு பாடுவதற்கு உற்சாகமில்லை. சரோஜினி மௌனமாக டீயை ஊற்றிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

உபேந்திரன், "இவனால் எப்பொழுதும் எனக்கு நிம்மதி கிடையாது. ஏதாவது ஒன்றில் தலையிட்டுக் கொள்வான். காலையிலே பஜனைக்கு முதலிலே புல்லாங்குழல் வாசிக்க ஆயத்தம் செய்யவில்லையா ?" என்றான்.

இதில் ஒருவருக்கும் உண்மை புலப்படவில்லை. எல்லோரும் வேடிக்கை என்று சிரித்தார்கள். சதீஷால் பேசாமல் உட்கார்ந்து

கொண்டிருக்க முடியவில்லை. அவன் எழுந்து உலாவிக் கொண்டே சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மாலையில் சரோஜினி உபேந்திரனிடம், "காலையில் நீங்கள் எங்களைப் பாட்டுக் கேட்க விடாமல் பெரிய அநியாயம் செய்து விட்டீர்கள்" என்றாள்.

"சரி, இப்போது அதற்கு பழி வாங்கிவிடு. சதீஷை வரச் சொல்லு" என்றான் உபேந்திரன்.

ஜோதிஷும், "ஆமாம், இந்தக் குளிரில் வெளியில் போகவும் பிடிக்கவில்லை. கொஞ்சம் பாட்டுத்தான் கேட்கலாமே! சதீஷ் எங்கே? எங்காவது வைத்தியம் செய்யப் போய் விட்டாரா?" என்றான்.

"என்னவோ, யாராவது தெரிந்தவர்களைப் பார்க்கப் போயிருப்பான்."

சரோஜினி திடுக்கிட்டு, "சதீஷ் பாபு, டாக்டரா?" என்றாள்.

உபேந்திரன் சிரித்துக்கொண்டு, "ஆம்" என்றான்.

ஜோதிஷ், "பள்ளிக்கூடத்தில் படிப்பதால் மட்டும் டாக்டராகி விடமுடியாது. யாராவது ஹோமியோபதி டாக்டரிடம் வேலை பழகாதவரையிலும் அனுபவ ஞானம் உண்டாகாது. இல்லாவிட்டால் சனங்கள் பிராணனை வாங்க வேண்டியதுதான். நீ சொன்னால் நான் ஒரு நல்ல டாக்டரை அறிமுகப்படுத்தி வைக்கிறேன். ஆனால் இருவரும் ஒத்துப் போவார்களா என்பது தெரியாது நீ அம்மாதிரி சர்டிபிகேட் கொடுத்திருக்கிறாய்........."

"அவர் புத்திசாலியாக இருந்தால் ஒத்துப்போவான். இல்லாவிட்டால் மண்டையை உடைத்துக்கொள்வான்."

சரோஜினி திகைத்துப்போய் பார்த்துக் கொண்டிருந்தாள். ஜோதிஷ், "இல்லை, அவர் ரொம்ப புத்திசாலி" என்றான்.

"அப்படியானால் சரி. அவனைப் புரிந்துகொண்டு, அவனுடைய குணதோஷங்களை அறிந்து அவனை வசப்படுத்திக் கொள்பவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கும். ஆனால் அவன் மனதை வசப்படுத்துவது ரொம்ப கடினம். ரொம்ப முரடன் என்று நினைக்காதீர்கள். மிகவும் வெள்ளை மனம் படைத்தவன். இந்த வெள்ளை மனத்தால் தான் யாரும் அவனைப் புரிந்து கொள்ள முடிவதில்லை. நாம் எல்லாம் நாகரிகமாக மனதிலுள்ளதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் ஒருவர்மேல் ஒருவர் மனவருத்தப் பட்டுக் கொள்கிறோம். அதெல்லாம் அவனுக்குத் தெரியாது. சிறுவயதிலிருந்து நான் பார்த்துவருகிறேன். அவன் மனதிலொன்றும் வாக்கில் ஒன்றுமாகாக நடந்து கொண்டதே கிடையாது. இதனால் தான் அவன் பேரில் எனக்கு அவ்வளவு பிரியம்" என்றான் உபேந்திரன்.

ஜோதிஷ் சிரிக்கத் தொடங்கினான். "இதனால்தான் பத்து பேருக்கு முன் இவனைக் கூட்டிக் கொண்டு போகக்கூடாது என்றீர்களோ?" என்றான்.

உபேந்திரன் அவன் கூறியதை ஒன்றும் கவனிக்கவில்லை. தனது பால்ய நண்பனுடன் கடந்த இரவு நடந்த சம்பாஷணைகளைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். சிறு வயதிலிருந்து, விளையாட்டு

வேடிக்கைகள் சண்டை சச்சரவு கள் முதலியவைகளில் தன்னுேடேயே இணைபிரியாது இருந்திருக்கிறுன். இந்த நினைவுகள் எல்லாம் அவன் இதயத்தில் நிறைந்தன. உடனே உபேந்திரன், "இதனுல் தான் அவன் பேரில் எனக்கு அவ்வளவு அன்பு" என்றுன். இதைக் கேட்டு ஜோதிஷும், சரோஜினியும் ஆச்சரியத்துடன் உபேந்திரனைப் பார்த்தார்கள். அவர்களுக்கு இந்தப் பொறுத்த மற்ற பேச்சு விளங்கவில்லை. ஆனுல் வேறு கேள்விக்கும் சமயமில்லை. மௌனமாகத் திரையை விலக்கிக் கொண்டு சதீஷ் உள்ளே நுழைந்தான். சரோஜினிதான் முதலில் அவனைப் பார்த்தாள். மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றுக் கொண்டு, "நீங்கள் வந்தது ரொம்ப நல்லதாகப் போச்சு சதீஷ்பாபு" என்றுள். சதீஷ் மௌனமாக அனைவரையும் பார்த்துச் சிரித்தான். "என்னைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தீர்கள் போலிருக்கிறது? உபேந்திர அண்ணு, என்னை எங்கும் தலைகாட்டாமல் செய்துவிடுவார் போலிருக்கிறது" என்று கூறிக்கொண்டு ஒரு நாற்காலியில் உட்காரப் போனுன். உடனே உபேந்திரன் ஆர்மோனியத்தைச் சுட்டிக் காட்டி, "அங்கு போய் உட்கார். காலையில் என்னுல்தான் நீ பாடவில்லை என்று சரோஜினி என்னைக் குறை கூறுகிறுள்" என்றுன்.

சதீஷ் குறிப்பிட்ட இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டு, "அண்ணு, இப்போது பாடும் சமயமல்ல. இப்போது புல்லாங்குழல் வாசிக்கவேண்டிய சமயம்" என்றுன். அன்று இரவு சபை கலைந்த பிறகு படுக்கையில் படுத்துக்கொண்டு சரோஜினி, 'இவர் நமது உறவினராக இருந்தால், இவரிடம் கற்றுக் கொள்வேனே' என்று நினைத்தாள். சரோஜினிக்கு சங்கீதம் சொல்லிக் கொடுக்க ஒரு உபாத்தியாயரும் நியமிக்கப் பட்டிருந்தார். அந்த ஸ்தானத்திற்கு சதீஷை நியமிக்க பல உபாயங்களை யோசித்துக் கொண்டே நித்திரையில் ஆழ்ந்தாள்.

அத்தியாயம் பதினுன்கு

உபேந்திரனும், சதீஷும் சென்ற பிறகு கதவைத் தாளிட்டு விட்டு கிரணமயி அங்கேயே நின்று கொண்டாள். இருளில் அவளுடைய கண்கள் தணல் போல் பிரகாசித்தன. யாரையாவது கொல்ல வேண்டும்போல் இருந்தது. கையிலிருந்த விளக்கை உயர்த்திக்கொண்டு பைத்தியம் போல, "தீ வைப்பதற்கு வழி இருந்தால் வைத்து விடுவேன். தீ வைத்துவிட்டு இஷ்டமான இடத்திற்குச் சென்று விடலாம் ஐயோ! ஐயோ! எனக்கத்திக் கொண்டு கிழவி பிராணனை விட்டு விடுவாள். அப்பொழுது எல்லாம் சரியாகிவிடும். நான் விரோதியும் இல்லாமலிருப்பேன்" என்று பிதற்றினுள். குளிர்ந்த இரவில்கூட அவளுடைய தொண்டை வரட்சி அடைந்தது. நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பின. கையால் வியர்வையைத் துடைத்துக்கொண்டு, "நான் என் தகவல் கொடுத்தேன்? எனது கையாலேயே எனது காலுக்கு விலங்கு மாட்டிக் கொண்டேனே! ஆனுல் இவைகளெல்லாம் இந்தத் துர்ப்பாதகக் கிழவியால்தான் நடந்தது. தனது மகனுக்குப் போதனை செய்து இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறுள். ஆனுல் இந்த மாயக்காரியும் சரியான

பலன் அனுபவிக்கத்தான் போகி ருள்'' என்று நினைத்தாள்.

சதீஷின் வார்த்தைகள் ஞாப கத்திற்கு வரும்போதெல்லாம் அவ ளுக்குத் தேள் கொட்டுவதுபோலி ருந்தது. இந்த இருவர்களும் என்னைப் பற்றி ஏதாவது கேள்விப் பட்டிருப்பார்கள். ஆனல் எவ் வளவு தூரம் கேள்விப் பட்டார் கள் என்று அவளுக்குப் புரிய வில்லே. உபேந்திரன் நல்ல மனி தன். அவன் வந்த பிறகு கஷ்டம் ஒன்றும் இருக்காது என்று தாயும் மகனும் சொல்லி வந்தார்கள், அதை ஏன் இவள் நம்பினள்?

தன் கையாலேயே ஏன் கடிதம் எழுதவேண்டும்? அந்த இருண்ட கூடத்தின் ஒரு மூலேயில் நின்று கொண்டு இந்தப் பெண் அவர்களை மனதில் தோன்றியபடி திட்டி ஞள். ஆனலும் மன ஆறுதல் அடையவில்லே. கோபமும் துவே ஷமும் அவள் இதயத்தை விட்டு அகலாமல் போகவே அவள் கடை சியாக இந்த அரை உயிரோடிருக் கும் மனிதன் இறந்து போகட் டுமே என்று நினைத்தாள். "இப் போதே யமதூதன் வந்து.........'' இதைச் சொல்லச் சொல்ல அவள் குரல் நடுங்கியது. இந்த இருண்ட இரவிலே அவளுடைய வார்த்தை களே அவள் தேகத்தை முள் போலத் தைத்தன. மேலே அண் ணுந்து பார்த்தாள். எதிர்க் கூரை யில் வெகு நாளாக ஒரு செடி வளர்ந்து வந்தது. அதன் இரு கிளைகளும் காற்றில் அசைவது எமதூதனே கைநீட்டி அழைப்பது போலிருந்தது. அதே சமயம் அங்கே ஏதோ ஒரு உருவம் தெரி வது போலிருந்தது. அவள் வேறு எங்கும் பார்க்காமல் பயத்துடன் பூமியையே பார்த்துக் கொண்டு நேராக மேலே சென்று தன் மாமி யாரின் அறையைத் திறந்து ஒரு மூலேயில் படுத்துக் கொண்டாள்.

மாமி இன்று சற்றுக் குண மடைந்திருந்தாள். பசியினல் நித்திரையின்றி பொழுது விடியட் டும் என்று எதிர்பார்த்துக் கொண் டிருந்தாள். கிரணமயி உள் நுழைந்ததும் அவள் திடுக்கிட்டு "கிரண், ஏன்? ஹாரானுக்கு எப் படியிருக்கிறது?'' என்ருள்.

கிரணமயி அவள் பக்கம் திரும் பாமலேயே, "தெரியவில்லே, நன்ரு கத்தானிருக்கிருர்'' என்ருள்.

"தெரியவில்லே, நன்ருகத்தானி ருக்கிருர் என்ருல் என்ன அர்த் தம்? நீ ஏன் இப்படிப் பேசுகிருய்?'' அவளுடைய அழும் குரலேக் கேட்டு கிரணமயி உடனே, "நன்ருகத்தானிருக்கிருர். நான் பயந்து போய் விட்டேன்'' என் ருள்.

இந்த அபசகுனத்தைக் கேட்டு கிழவி மிகுந்த துக்கமடைந்தாள். துணிகளேச் சுருட்டிக் கொண்டு அவள் நடுங்கும் குரலில், "சரி, நீ ஏன் ஒரு மாதிரியாக இருக்கி ருய்? அவனைத் தனியாக விட்டு...'' கிரணமயி மாமியாரின் முந்தா னையை இழுத்துக் கொண்டு, "நான் பயந்துபோய் விட்டேன். என்னமோ கறுப்பாக......''

மாமியாருக்குக் கடைசி வரை யிலும் கேட்பதற்குப் பொறுமை யில்லே. உடனே 'அவள் மகனைப் பார்ப்பதற்காக நடுங்கிக் கொண்டே வெளியில் சென்ருள். உடனே கிரணமயி, காலிலிருந்து தலே வரையிலும் போர்த்திக் கொண்டு தூங்கத் தொடங்கினள்.

அடுத்த நாள் காலே கிரணமயி சமையலறையில் உட்கார்ந்து காய் கறி நறுக்கிக் கொண்டிருந்தாள்

அப்போது வேலைக்காரி வந்து, "டாக்டர் வந்திருக்கிறார்" என்றாள்.

கிரணமயி நிமிர்ந்து பாராமலேயே, "அம்மாவுக்குக் குணமாகி விட்டது என்று போய்ச் சொல்" என்றாள்.

வேலைக்காரி திடுக்கிட்டாள். சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்த பிறகு, "அவர் அந்த அறையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்" என்றாள்.

அவளுடைய இந்தக் குறிப்பைச் சிறிதும் கவனியாதவள்போல, "அவருடைய மருந்தை யாரும் சாப்பிடுவதில்லையே! பின் எதற்காகத் தினசரி வருகிறார்? நீ உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ. அவர் தானாகவே போய் விடுகிறார்" என்றாள்.

இந்த டாக்டர் மருந்து ஒன்றுக்கும் பிரயோசனமில்லை. இது வேலைக்காரிக்குத் தெரியாததல்ல. ஆகையால் இதைப்பற்றி அவள் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால் அவன் ஏன் வருகிறான் என்றது தான் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. நேற்று மாலைதானே வீட்டுக்குப் போனோம். அதற்கிடையில் என்ன சம்பவம் நேர்ந்து விட்டது; டாக்டர் இந்த வீட்டிற்கு வருவதுகூட அவசியமில்லையாம்! என்று யோசிக்கத் தொடங்கினாள். என்னவானாலும் ஆகட்டும் என்று துணிந்து, "காய்கறிகளைக் கொடு. நான் அறிந்து கொடுக்கிறேன். நீ அவரிடம் போய்விட்டுவா" என்றாள்.

கிரணமயி மிகுந்த கோபத்துடன், "போ, போ! உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ. ஒரு நாளைக்குச் சமையல்கூட செய்து வைக்கிறேன் என்று சொல்லுவாய் போலிருக்கிறது" என்றாள்.

இந்த காரணமற்ற கோபத்தைக் கண்டு வேலைக்காரி திடுக்கிட்டுப் போனாள். அவள் பழைய வேலைக்காரி அல்லவானாலும் ரொம்பப் புதியவளுமல்ல. இதற்கு முன் எத்தனையோ தடவை இம்மாதிரி அகாரணமான கோபத்திற்கு ஆளாகியிருக்கிறாள். ஆனால் இன்றைய நடத்தை அவளுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. வேறு சமயமாயிருந்தால் அவளும் கோபமடைந்திருப்பாள். ஆனால் இன்று அவள் திகைப்புடன் பேசாமலிருந்து கொண்டாள். சிறிது நேரம் பேசாமல் நின்று கொண்டிருந்து விட்டு, அப்புறம் சென்று விட்டாள். அவள் நேராக டாக்டர் இருந்த அறைக்குச் சென்று, "அம்மா, வேலையாக இருக்கிறார்கள். நீங்கள் போகலாம்" என்றாள்.

டாக்டர் காலடியில் பையை வைத்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர் உடனே, "வேலை இருக்கிறதென்றால் என்ன அர்த்தம்? எனக்குக் கூடத்தான் வேலை இருக்கிறது" என்றார்.

வேலைக்காரி: உங்களை யார் தடுக்கிறார்கள்?

டாக்டர்: ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றிப் பேச வேண்டுமென்று போய்ச் சொல்.

வேலைக்காரி: உங்களுக்குத் தெரியவில்லையே! நான் எவ்வளவோ சொன்னேன். இனி ஒன்றும் சொல்ல முடியாது. இன்று நீங்கள் போய் வாருங்கள்.

இதைக் கூறிவிட்டு வேலைக்காரி சென்றுவிட்டாள்.

முதலில் அவமரியாதையாக நடத்தப்பட்டதிற்கு வியாகூலப் பட்டார். ஆனல் அடுத்த கணமே மனதிற்குள் ஒரு முடிவுக்கு வந்த தால் சிறிது ஆறுதலடைந்தார். அவளை எதிர்பார்த்து உட்கார்ந்து கொண்டிருப்பதில் டாக்டருக்கு ஒன்றும் ஆக்ஷேபணை கிடையாது. ஆனல் யாராவது வந்து விட்டால்! அங்கு நின்றபடியே எவ்வளவோ யோசித்துப் பார்த்துவிட்டுக் கடைசியாக போவதிற்குத் தயாராக கீழே இருந்த பையை எடுத்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தார். எதிரே வாசற்படி முன்னல் கிரணமயி நின்று கொண்டிருந்தாள். டாக்டர் கோபத்தை வெளிக்குக் காட்டாமல் சாந்தமாக, "சற்று விலகு; ரொம்ப நேரமாகி விட்டது. இன்னும் பல நோயாளிகள் வழி பார்த்துக் கொண்டிருப்பார்கள். அம்மா, இன்று நன்ருக இருக்கிருர்களா?" என்ருர்.

"நன்ருகத் தானிருக்கிருர்" என்று கூறிவிட்டு ஒரு ஓரத்தில் ஒதுங்கி நின்று கொண்டாள்.

ஆனல் டாக்டர் கால் எழ வில்லை. பேசிய விஷயத்தையே பேசுவதற்கும் இல்லை.

கிரணமயி புன்சிரிப்புடன், "போகவில்லையா?" என்ருள்.

டாக்டர் நிமிர்ந்து பார்த்தார். புருவத்தை உயர்த்திக் கொண்டு, "எனக்குப் போகத் தெரியாதென்று நினைக்கிருயா?" என்ருர்.

"நான் என்ன பைத்தியமா அப்படி நினைப்பதற்கு? சரி, உங்களை குறைந்தது எத்தனை நோயாளிகள் வழி பார்த்துக் கொண்டிருப்பார்கள்?" என்று கேட்டுவிட்டு அவர் முகத்தைப் பார்த்துச் சிரித்தாள்.

அவள் கழுத்தைப் பிடித்து நசுக்கிக் கொன்றுவிடலா... டாக்டர் நினைத்தார். ஆ... மாதிரி செய்யாமல், "போ... புறம்" என்ருர்.

"நான் எங்கு போவது?... வீடு என்னுடையது. ... வேண்டியவர் நீங்கள்தான்"... ருள்.

டாக்டர் கல்கத்தாவாசி. எவ்வளவு கோபம் வந்தாலும் அடக்கிக் கொள்ளத் தெரிந்தவர். "சரி, நானே போகிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்படவும், கிரணமயி இருகரங்களையும் அகல விரித்து வாயிற்படி முன் நின்று கொண்டு தடுத்தாள். பிறகு "போகும்போது இதையும் கூறி விட்டுப் போங்கள். இனித் திரும்பப் போவது கிடையாதா?" என்ருள்.

அவள் குரல் முகம் எல்லாம் ஒரே அடியாக மாறிப்போய் விட்டது. இதைப் பார்த்து டாக்டர் சிறிது பயமடைந்தார். "ஆம், திரும்புவது இல்லை" என்ருர்.

உண்மையாகத் திரும்பப் போ... தில்லைதான். வந்ததே வந்து வி... டீர்கள், எல்லாவற்றையும் கேட்... விட்டுப் போங்கள். சரி, அங்... உட்காருங்கள் எல்லாவற்றையும் விபரமாகச் சொல்கிறேன்" என்று கூறிவிட்டுக் கிரணமயி பையை எடுத்து மேஜைமீது வை... தாள். பிறகு நாற்காலியைச் காண்பித்து விட்டு, "சமையல் செய்ய வேண்டும். அதிக நேரம் தாமதிக்க முடியாது. சொல்லுகிறேன் கேளும்......"

அதற்குள் வேலைக்காரி வந்து இரண்டு பாபுக்கள் வந்திருக்கிருர்கள் என்று சொன்னுள்.

கீழே காலடி ஓசையும் கேட்டது. இதைக் கேட்டு கிரணமயி திடுக்கிட்டாள். உடனே பரபரப்புடன் அங்கிருந்து ஓடினாள். இதைக்கண்டு டாக்டரும், வேலைக்காரியும் திகைப்படைந்தார்கள்.

சிறிது நேரத்திற்குள் காலடி ஓசை அறைக்கு முன்னால் வந்து நின்றது. இரண்டு அறிமுகமில்லாத கனவான்கள் நிற்பதை டாக்டர் கண்டார். அவர்களும் டாக்டரைப் பார்த்தார்கள். டாக்டருடைய கழுத்தில் இதய ஆராய்ச்சிக் கருவி தொங்கிக் கொண்டிருந்தது. டாக்டர் முகம் மிகவும் விசனமடைந்திருப்பதை உபேந்திரன் கவனித்தான். உபேந்திரன் கவலையுடன், "நிலைமை எப்படியிருக்கிறது, டாக்டர் சார்?" என்றான்.

டாக்டர் ஒன்றும் பேசவில்லை.

அவருடைய முகம் இன்னும் சற்று அதிகமாகக் கறுத்து விட்டது. உபேந்திரன் அதிகக் கவலையடைந்தான். "இப்போது ஹாரான்பாபு எப்படியிருக்கிறார்?" என்றான்.

இதற்கும் டாக்டர் ஒன்றும் பதில் அளிக்கவில்லை. பைத்தியம் போல உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

வேலைக்காரி, "போகவில்லையா டாக்டர் இன்னும் ஏன் நின்று கொண்டிருக்கிறீர்கள்?" என்றாள்.

டாக்டர் துக்கத்துடன், "நான் போகிறேன். எனக்கு ரொம்ப வேலையிருக்கிறது" என்று கூறிக் கொண்டு வேகமாக கீழே இறங்கிப் போய் விட்டார். வேலைக்காரியும் அவரைப் போலவே அரைக்கணத்தில் மாயமாக மறைந்துபோய் விட்டாள். அந்த இருண்ட வீட்டிற்குள் சுமார் காலை ஒன்பது மணிக்கு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு சதீஷும், உபேந்திரனும் நின்றனர்.

சிறிது நேரத்திற்குப் பிறகு சதீஷ், "அண்ணா, ஹாரான் தாயார் பைத்தியமா?" என்றான்.

"அவள் ஹாரான் தாயார் அல்ல. யாராவது வேலைக்காரியாக இருப்பாள். ஆனால் டாக்டர் ஏன் அப்படிப்போனார் என்பதுதான் எனக்குப் புரியவில்லை"

"ஆமாம், யாராவது திருடனாயிருப்பான். பிடிபட்டுப் போவோமோ என்று பயந்துகொண்டு ஓடியிருப்பான்."

உபேந்திரன் இதைக் கவனியாமல், "யாரையுமே காணோமே! இந்த அறை ஹாரான் பாபுவுடையதல்லவா?" என்றான்.

"ஆமாம், வா"

"திடீரென உள்ளே நுழைவதற்கு எனக்குப் பயமாக இருக்கிறது. ஏதாவது நடந்திருந்தால்?"

"அப்படி நடந்திருந்தால் அழுவதற்குச் சனங்கள் கூடியிருப்பார்கள். அந்தப் பயம் வேண்டாம்"

இந்தச் சமயத்தில் மேல் கூடத்தில் கிரணமயி வருவது தெரிந்தது. இது வரையிலும் அழுது கொண்டிருந்து விட்டுக் கண்ணைத் துடைத்துக்கொண்டு வருபவள் போல் தெரிந்தது. நேற்று தீப ஒளியில் சுந்தரமாக விளங்கிய முகத்தை இன்று சூர்ய ஒளியில் நன்கு பார்த்தார்கள். அம்மாதிரி அழகியை இதற்கு முன் அவர்கள் படத்தில் கூடப் பார்த்ததில்லை.

(தொடரும்)

சித்தக் கடல்:

அன்பின் அழைப்பு

(வெ. ராமராவ்)

சீதாபாயும் ஊர்மிளேயும் கூடப் பிறந்த சகோதரிகள். ஆனால் கடந்த ஐந்தாறு வருஷங்களாக ஒருவரை ஒருவர் சந்தித்துப்பேச சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. சீதா பாய் தாய் வீடு வந்தபோது ஊர் மிளா வரமுடியாமல் இருக்கும்; ஊர்மிளா வரும்போது சீதா வர முடியாமலிருக்கும், இந்த நிலைமை யில் அவர்கள் பரஸ்பரம், ஒன்று சீதாபாயின் வீட்டிலோ, அல்லது ஊர்மிளாவின் வீட்டிலோ சந்தித் திருக்கலாம். ஆனால் திவான் பக தூர் ராயரின் சுபாவம், வெகு அகம்பாவமும், கண்டிப்பும், தான் போனபோக்காகவும் இருந்ததால் அத்தகைய சந்தர்ப்பத்தை நிர் மாணிக்க அனுகூலமாக இருக்க வில்லை. இருந்தாலும் தன் சகோ தரியை வெகு நாட்களாகச் சந் திக்காத காரணத்தை முன்னிட்டு எப்படியாவது எந்த வகையிலா வது 'அவருடைய' சம்மதத் தைப் பெறவேண்டும், ஊர்மிளையை குடும்ப சகிதம் தன் இல்லத்திற்கு வரவழைக்க வேண்டும் என்று சீதாபாய் தன் மனத்தில் ஒரு திட் டம் போட்டிருந்தாள். என்ன தான் ஒரு திவான் பகதூரின் மனே வியாக இருந்தாலும், "இந்து பெண்ணுக்கு" சகோதரி பாசம் இருக்காதா?

திவான் பகதூர் ராயர் பெரிய செல்வ வந்தர். இருந்தாலும் சமீ பத்தில்தான் அவர் ரிடையராகி பென்ஷன் வாங்க ஆரம்பித்திருந்த தால் அவருடைய சுபாவத்தில் எப்பொழுதையும்விட சிக்கன புத்தி வெகு தீவிரமாக தலையோங்கி நின்றது. எந்த விதமான அதிகச் செலவு என்றாலும் அவர் கண்ணில் சிகப்பேறி விடும். அதற்கு மேலா கத் தன் அந்தஸ்துக்கும் கௌர வத்துக்கும் சரிசமான மானவர் களாகவோ மேலானவர்களா கவோ இருந்தாலொழிய, உற்றார் உறவினர்களில் எவரையும் அவர் ஏறெடுத்தும் பாரார். அப்படி யிருக்க ஏழை உறவினர்கள் வீட் டில் வந்து சில நாட்கள் தங்குவது எப்படி? ஏழைகள் என்றால் மட் டும் என்ன? அவரவர்களுக்கு "சுய கௌரவம்" இருக்கத் தான் செய்கிறது. ஆகையினால் தான் வருஷக் கணக்காக ஊர் மிளேயின் கணவர் சக்காராம ராவ், திவான் பகதூர் ராயரை சந்திக் கவேயில்லை. ராயரின் இறுமாப் பும் அகந்தையும் சக்காராம ராவு க்குக் கட்டோடு பிடிக்க வில்லை. அவர் சற்று அடக்கம் ஒடுக்கமான சுபாவமுடையவர். ஏழை, நல்ல படிப்பாளி; இப்படிப்பட்ட குண முள்ள சகலைகளிடையில் எத்த கைய உறவும் அன்னியோன்னிய மும் எப்படி நிலவும்?

சீதாபாய் தன் மனசில் இருந்த விஷயங்களைச் சொல்ல ஆவல் கொண்டாள்.

"போதுமே பரிகாசம்! ராணீ ஸாஹேப் ராணீசாகேப் என்று பேச்சிலேத்தான் கொஞ்சல். (சந் தோஷம் பீரிட்டால் அவர் மனே வியை இப்படித்தான் கூப்பிடுவது வழக்கம்) காரியத்துலே ஒண் ணுமே இல்லே. இந்த வீட்டிலே நான் சொல்லி எந்த காரியம் என் இஷ்டப்படி நடக்கிறது?" என்று விஷயத்திற்கு முன் பீடிகை ஒன்

றைப் போட்டு, கையிலிருந்த வெற்றிலைத் தட்டத்தை மேஜைமீது வைத்தாள்.

சரிதான், 'சும்மா ஆடுமோ சோழியன் குடுமி?' ஏதோ விசேஷம் இருக்கக் கொண்டுதான் அகமுடையானுக்கு இத்தனை ஆசார உபசாரமோ! கிடக்கட்டும் விஷயத்தைதான் சீக்கிரம் சொல்லேன் மூடுமந்திரம் இல்லாமல்."

சீதாபாயிக்குத் தன்னையும் மீறி சிரிப்பு வந்துவிட்டது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

"ஒண்ணுமில்லே ஊர்மிளையை...

"வரச்சொல்லலாமே? பேஷா வரட்டுமே. இங்கே பிள்ளை இல்லாத சொத்து. வீணாக போரது. ஊர்லே இருக்கிறவங்க எல்லாரும் வந்து கொம்மாளம் கொட்டட்டும்."

"ஊர்லே இருக்கரவா எல்லாரும்ணா? ஊர்மிளை தெருவில் கிடக்கிறவளா? அவள் என் தங்கை அல்லவா? எங்கம்மா செத்தப்பறம் நான்தானே வீட்டுக்குப் பெரியவள்? அம்மா உசிரோடே இருந்த மட்டும் எண்ணிக்காவது ஓங்களை நான் இந்தமாதிரிக் கேட்டதுண்டா? தயவு செய்து பெரிய மனசு பண்ணுங்கள். நம் வீட்டிலே வேலைக்காரன் ஸத்வாஜி, கூட்ரவள் ராமாயி, டிரைவர் ராம்ஸிங் இவர்கள் சாப்பிடாத சாதத்துக்குக் கூடவா உரிமை இல்லாமல் போச்சு என் உடன் பொறப்புக்கு?" சீதாபாயின் கண்கள் ஊற்றெடுத்து கண்ணீர் மள மளவென்றுப் பொங்கியது, மத்தாப்புக் குச்சி எரியும்போது உருகி கீழே சிந்தும் தீப்பொறியைப் போல.

திவான் பகதூரின் கல்நெஞ்சமும் சற்று கரைந்தது.

"அட, அசடே அதுக்குச் சொல்லல்லேடி. ஒன் நன்மைக்காகத்தான் சொன்னேன். நான் ஏதாவது இப்ப சேத்து வைச்சாத்தானே நாளைக்கு நான் கிருஷ்ணராமான்னு கண்ணை மூடிண்டால் ஒனக்கு உதவியாய் இருக்கும். இருக்கிறதை கண்டபடி......"

"போதுமே பேச்சு, இப்படி அச்சான்னியமா ஏதாவது......"

"அடே, நெருப்புண்ணா வாய் வெந்துவிடுமோ?" சரி ஒன் இஷ்டப்படியே ஊர்மிளை வரட்டும், கீர்த்தி வரட்டும், மாண்டவி வரட்டும், வரட்டும்."

"ஆமாம், இருக்கரது ஒரு தங்கை, அதுக்கே இவ்வளவு சிரிப்பு!"

"சரி, சரி என் கோபத்தைக் கிளப்பாதே. நான்தான் ஊர்மிளை வரட்டும் என்று சொல்லிவிட்டேனே, இன்னும் எதுக்கு தொந்தரவு?"

"அப்படி இல்லை. ஊர்மிளை மட்டும் எப்படி வருவாள். இப்போ பள்ளிக்கூட 'லீவ்' இருக்கிறதே. அவர்களுக்கு சாப்பாடு?"

"அவள் குழந்தை குட்டிகளையும் அழைச்சு வரட்டுமே! நான் வேணும்......"

"இல்லை. அவள் புருஷர்..."

"சக்காராம ராயரா? அவர் வராவிட்டால் என்ன முழுகிப் போச்சாம்? ஊர்மிளாதானே உன் உடன் பிறப்பு?"

"நீங்கள் ரிடையர் ஆகி அவர்கள் ஊருக்கு இவ்வளவு சமீபத்தில் வசிக்கிறீர்கள். ஒருதரமாவது நீங்கள் இருவரும் சந்திச்சு......"

"ஹா! ஹா! ஹா! அவர் கேவலம் ஒரு ட ஆனு! நான் ஒரு திவான் பகதூர்! நாங்கள் இருவரும் சந்திக்கிறதாம், சந்திக்கிறது! என்ன பெருமை அதிலே எனக்கு? டிஸ்டிரிக்ட் ஜட்ஜா, டெபுடி கலெக்டரா, தாசில்தாரா, போகட்டும் ஒரு வக்கீலாகவாவது இருக்கக் கூடாதா!"

"நான் சொல்லரேன் என்று வ்ருத்தப் படக்கூடாது. வீவு நாளில் அவர்களைப் பிரித்து வைக்கும் பாவம் நமக்கெதற்கு? அது மாத்திரம் இல்லை. அவனை மட்டும் வரச்சொன்னால் நன்னு இருக்குமா? அவள்தான் வருவாளா? நமக்காக இல்லாவிட்டாலும் ஊராருக்காகவாவது......"

"தொலையட்டும், உன் இஷ்டப்படியே ஆகட்டும், திருப்திதானே. எனக்குத் தூக்கம் வர்ரது. சத்வாஜியைக் கூப்பிட்டு படுக்கை போடச் சொல்லு."

"அப்போ நாளைக்கு நீங்கள் சக்காராம் ராவுக்குக் கடுதாசி எழுதரேயளா?"

"அடே எழவே, 'புளிய மரத்தைப் பிடிச்ச பிசாசு பிள்ளையாரையும் பிடிச்சுதாம்." அதெல்லாம் என்னால் முடியாது. நீயே எழுதிக்கொள்."

"நான் அவருக்கு எப்படி எழுதரது? நான் கடுதாசி எழுதரேன், நீங்கள் கையெழுத்தாவது அடியில் போடுங்கள்."

"அதெல்லாம் முடியாது."

"போகட்டும் நான் ஊர்மிளைக்கு எழுதும்போது நீங்கள் அனுமதி தந்து எழுதியதாகவாவது சொல்லுகிறேன். அதற்கு ஆக்ஷேபணை இல்லையே?"

"எதுடா இது சனியன் உடும்பு மாதிரி. சரி அப்படியே எழுது போ."

சந்தோஷமும் சமாதானமும் வெளியிடும் பெருமூச்சு ஒன்றை எறிந்தபடி சீதாபாய் தன் அறைக்குத் திரும்பிச் சென்றாள். கையோடு கையாய் கடிதத்தை எழுதி முடித்து ஸ்டாம்பும் ஒட்டி, தெருக் கோடியில் உள்ள தபால் பெட்டியில் போட்டு வரும்படி சத்வாஜியிடம் கொடுத்தனுப்பிய பிறகு தான் சீதாபாயின் உள்ளத்தில் கவலை நீங்கி பாரம் சற்று குறைந்தது.

சீதாபாய் உள்ளே நுழைந்து "உங்கள் பேருக்குத் தந்தி வந்திருக்கு. என்ன சமாச்சாரமோ தெரியவில்லை. அந்த மாதா துளசாபவானிதான் காப்பாத்தனம். வெங்கடரமணா உனக்கு சனிக்கிழமை அன்று மாவிளக்கு வைக்கிறேன். ஒண்ணுமில்லாமே காப்பாத்துராப்பா" என்றாள்.

"அடி அசடே, ஒண்ணும் இருக்காது பயப்பட. இப்பெல்லாந்தான் எழுந்தால் தந்தி. உக்கார்ந்தால் தந்தி. ரயிலுக்குப் புறப்படரச்சே தந்தி; ஊர்சேர்ந்ததும் ஒரு தந்தி, பரீக்ஷை பாஸ் ஆனால் தந்தி, ஆகாவிட்டாலும் தந்தி, சர்வம் தந்தி மயம் ஜகத்தாக இருக்கே."

ராயர் உறையைக் கிழித்து தந்தியைப் படிக்கலானார். நெற்றியில் லேசாகக் கோடுகள் விழ ஆரம்பித்தன. மறுபடியும், மறுபடியும் உற்றுப் பார்த்தபடி படித்துக் கொண்டிருந்தார். சீதாபாயின் மனசில் சம்சயம் உண்டாயிற்று. கால்கைகள் வெலவெல என்று நடுங்க ஆரம்பித்தன. கண்ணில் நீர் நிறைந்தது.

"அந்த மூக்குக் கண்ணாடியைக் கொஞ்சம் கொடு இப்படி."

சீதாபாய் நடுங்கும் கைகளுடன் மூக்குக் கண்ணாடியை எடுத்துத் தந்தாள்.

"யாருக்கும் ஒன்றுமில்லையே ஆபத்து."

"பாண்டு ரங்கா!" — அவருக்கும் தெரியாமலேயே பகவான் நாமம் வாயிலிருந்து தானாக வெளி வந்தது. ஒரு பெரு மூச்சு விட்டபடி சாய்வு நாற்காலியிலிருந்து எழுந்து சரியாக உட்கார்ந்து கொண்டு "சக்கா ராமராயருக்கு நிமோனியா ஜுரம் கண்டிருக்காம். நிலைமை சற்று பயமாகத்தான் இருக்காம். உன்னை வரச் சொல்லி தந்தி அடிச்சிருக்கா ஊர்மிளா." என்றார்.

"ஐயோ, பகவானே. தலை மேலே இடி விழுந்துட்டதே. என்ன துர்பாக்கியசாலியடி ஊர்மிளா!" சீதாபாயின் கண்களில் நீர் பெருக்கெடுத்துக் கன்னங்களின் வழியாய் தாரை தாரையாய் வழிய ஆரம்பித்தது.

"சீதா எதுக்கு அழறே. அப்படி ஒண்ணும் ரொம்ப மோசமா இருக்காது. உன்னை அவசியம் வரவழைக்கரதுக்காக அப்படி அடிச்சிருப்பா."

"எப்படி வேணுண்ணா இருக்கட்டும். சீக்கிரம் புறப்பட்டுப் போக வழியைப் பார்க்க வேணுமா? டிரைவரைக் கூப்பிட்டு......"

"டிரைவர் என்னத்துக்காம் டிரைவர்? பஸ்ஸில் புறப்பட்டுப போய் வாயேன். இரண்டு மூணு ரூபாயுலே ஆயிடும்."

"என்ன அப்படிப் பேசரேள். நீங்க வரவேணாமோ?"

"என்னை வரச் சொல்லி யார் தந்தி அடிச்சிருக்கா?"

"இதோ பாருங்க, இந்த சமயத்திலா சண்டையையும், பூசலையும் வெச்சிக்கிறது? என்னமோ பெரிய ஆபத்து மலைபோல வந்திருக்கு இந்த சமயத்திலே தானா செலவைப் பற்றிப் பாக்கரது."

"ஐயோ என்வயித்திலே என்னமோ சங்கடம் பண்ணரதே உடனே வண்டியை எடுத்து புறப்பட ஏற்பாடு செய்யுங்களேன்."

"புறப்படரதைப் பற்றி ஆக்ஷேபணை கிடையாது. ஆனால் ஒரே கண்டிஷன்! அங்கே போன அப்புறம் திரும்பும்போது அவசியம் நீ என்னோடே வந்துடணம் பின்னால் தங்கி வருகிறேன் என்று சால்சாப் கீல்ஜாப் சொல்லக் கூடாது. கிளம்பு என்றால் கிளம்பிவிட வேண்டியது தான் சரிதானே?"

'சரி சீக்கிரம் கிளம்புவோமே'

திவான் பகதூர் ராயர் தன் குடும்ப சகிதம் சக்காராமராவ் வீட்டில் இறங்கிய பொழுது வீட்டில் ஏகப்பட்டக் கூட்டம். நிலைமை ரொம்ப மோசமாக இருந்தது.

பாவம் கண்ணீர் நிறைந்த கண்களுடன் ஊர்மிளா ஒத்தடம் தந்து கொண்டிருந்தாள் கணவனுக்கு. சக்காராம ராவுக்கு பிரக்ஞை தப்பி மூன்று நாட்கள் ஆகியிருந்தனவாம்.

தன் தமக்கையைக் கண்டதும் ஊர்மிளா ஓடிவந்து "ஹோ" வென்று கதறி அழுதாள். கட்டி அணைத்துக் கொண்டு, பக்கத்தில் இருந்தவர்கள் சமாதானப்படுத்தி சமையல் அறைக்கு அவ்விருவர்களையும் அழைத்துச் சென்று அப்புறப்படுத்தினர்கள்.

சற்றுக் கழித்து வந்த டாக்டர் நாடியைப் பரீக்ஷித்து "ஹோப்லஸ்" என்று உதட்டைப் பிதுக்கி விட்டார்.

மணி ஒன்பது அடித்ததும் ராயர் தன் மைத்துனன் ஹரிராவைக் கூப்பிட்டு வேலூருக்குத் தான் திரும்பிப் போக வேண்டும் என்று சொல்லி அவனுடைய தங்கையைப் புறப்பட துரிதப் படுத்தச் சொன்னார். ஹரிராவுக்குத் தன் காதுகளை நம்பமுடியவில்லை; ஆச்சரியம் உண்டாயிற்று. ஏதோ சொல்ல வாயெடுத்தார்; ஆனால் மைத்துனரின் கண்டிப்புக் குணத்தைப் பற்றி வெகு நன்கு அறிந்தவராகையால் "அக்கா மாத்திரம் இரண்டு நாள் தங்கி..." என்று சூசனையாக ஆரம்பித்தார்.

சீதாபாயிக்கு பூமி வெடித்துத் தன்னை அப்படியே கபளீகரித்துக் கொள்ளக் கூடாதா என்று தோன்றிற்று. கணவனிடம் தர்க்கம் செய்வது பிரயோசனம் இல்லை என்பதை அனுபவ பூர்வமாக அறிந்திருந்தாள். ஆகவே ஒன்றும் பேசாமல் பரிதாபகரமாக ஊர்மிளையை மௌனமாகப் பார்த்தாள். அவ்விருவர் கண்களும் பேசின. முடிவில் ஊர்மிளை பெரும் பொருமலின் இடையில் எப்படியோ சமாளித்துக் கொண்டு "அக்கா போய்வா. பரவா இல்லை. எனக்குச் சகலமுமான அவரே இதோ இன்னும் அரைக் கணத்தில் என்னைக் கதற விட்டுப் பறக்கப் போகிறார்."

அப்படி இருக்க வேறு யார் எனக்கு இருக்கிறார்கள்! நீதான்

"அதெல்லாம் சரிப்படாது. நீங்கள் எல்லாம் இல்லையா துணைக்கு. அவள் என்ன புரட்டி விடப் போறாள்? எமனுடன் சண்டை போட்டு சாகிற மனிதனைக் காப்பாத்தவா போறா?"

என்ன. உன் இஷ்டப்படி செய்ய எனக்கு சுதந்தரம் உண்டா. நாம் எல்லாம் என்ன வெறும் பட்டி மாடுகள் தானே! பெண் ஜன்மம் எடுத்தோமடீ அம்மா" என்று சொன்னாள்.

சற்றும் இஷ்டமின்றி சீதாபாய் கணவனின் அருகில் காரில் உட்கார்ந்தாள். திவான் பகதூரின் நடத்தை யாருக்கும் பிடிக்கவில்லை. கார் புறப்படுகையில் யாரும் அவருடன் ஒன்றும் பேசவில்லை.

ஆகாயத்தில் சூல் கொண்ட கருமேகங்கள் திரண்டு இருட்டின் பயங்கரத்தை அதிகப்படுத்தி மிதந்தன. சுற்று முற்றிலும், மேலும் கீழும், கண்ணெட்டிய மட்டும் எங்கும் இருள் பரவி தனி அரசு செலுத்திக் கொண்டிருந்தது. இத்தகைய இரவில் தன்னந்தனியாக பிரயாணம் செய்பவர்களின் நிலையைப் பற்றி கேட்க வேண்டியதில்லை. கூடுமான வரையில் அப்படிப் பிரயாணம் செய்ய யாரும் முன் வரமாட்டார்கள். அப்படியிருந்தும் திவான் பகதூர் பாலாஜி ராவ் ஸாஹேப் அவர்கள், குடும்ப சகிதம் தன்னுடைய சொந்த போர்டு காரில், ஒரே பிடிவாதமாக குடியாத்தத்திலிருந்து வேலூரை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்.

ஊரைவிட்டு ஐந்தாறு மைல் தூரம் வந்திருக்கலாம். பள்ளிக்கொண்டை கிராமத்தைக் கடந்து ஒரு மைல் ஆயிருக்கும். இடையில் பாதை சற்று சீர்கெட்டு மராமத்து செய்து கொண்டிருந்தார்கள். டிரைவர் புதியவனே ஆயினும், சமாளித்துக்கொண்டு, வண்டிக்கு யாதொரு இன்னலும் நேராமல் நடத்திக் கொண்டிருந்தான். அந்த ரஸ்தாவின் ஒவ்வொரு பர்லாங்கும் அவனுக்கு வெகு நன்றாகத் தெரிந்திருந்தது. ஏற்கெனவே அவன் வேலூருக்கும் குடியாத்தத்திற்கும் இடையில் ஓடும் வாடகை பஸ் ஒன்றில் நான்கு வருஷகாலம் டிரைவராக வேலை செய்திருந்தான். திவான்பகதூர் ராயருக்கு குஷி பிறந்தது. "சரி, இன்னும் ஒரு முக்கால் மணி நேரத்தில் ஊர் போய்ச் சேர்ந்து விடலாம்" என்று தனக்குள்ளாக சொல்லிக் கொண்டார். இன்னும் ஒரு இரண்டு பர்லாங்குகள் தூரம் கன வேகத்தில் சென்றது. இருந்தாற்போலிருந்து திடீரென்று நின்று விட்டது கார். இரு பக்கத்து தலைவிளக்குகளும், என்ஜின் நின்றதும் தாமாகவே அணைந்து விட்டன! கையில் ஹரிக்கென் லாந்தரோ, மின்சார டார்ச்சோ இருக்கவில்லை" இருந்தாலும் டிரைவர் கீழிறங்கி, தீக்குச்சியை கிழித்து தூரப் பிடித்தபடி தன்னாலான மட்டும் பழுதைச் சீர்திருத்தப் பார்த்தான். ஆனல் எல்லாம் வீண் பிரயாசையாக முடிந்தது.

சீதாபாய் மனத்தில், சிறுவயதில் பாட்டிகளிடம் கேட்டிருந்த தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் சம்பந்தமான கதைகள் மறுபடி நினைவுக்கு வந்து மயிர்க் கூச்செறியச் செய்தன. ஆறு வயது சிறுமி பிரமிளா வேறு, "அம்மா பசிக்குதடி" என்று அழத் தொடங்கினள். ஏதாவது தின்பதற்குத் தந்து அவளுடைய அழுகையை நிறுத்தலாம் என்றுல் வண்டியில் தின்பண்டம் ஒன்றும், கையோடு கொண்டு வந்திருக்கவில்லை. சிறு குழந்தையை ஏதோ கொஞ்சம் தன்னாலான மட்டும் தட்டிக் கிட்டிக் கொடுத்து, கொஞ்சிக்குலவி வயிற்றேடு வயிருக அன்புடன் அணைத்து, அந்தச் சிறுமியை சமாதானப் படுத்தினள் ஒருவாறு. என்ன இருந்தாலும் ஒரு அன்னைக்குத் தெரியாதா தன் குழந்தையை எப்படிச் சமாதானப் படுத்துவது என்பது?

திவான் பகதூர் ராயரின், கண்டிப்பான சுபாவமும், கடுகடுப்பும் டிரைவருக்கு நன்ருகத் தெரியும். அதனல் அவன் தன் வேலேயில் இரட்டிப்பு ஊக்கம் காட்டி முயன்று கொண்டிருந்தான். பாவம் அவன் உடல் முழுவதும் வியர்வையினல் தெப்பமாக நனேந்திருந்தது. ஆனல் அந்த யுகாந்தர ஊழிக்காலத்துப் பேய் இருட்டில் அவன் உடலின் வியர்வை யாருக்கும் தெரிந்திருக்க முடியாது. அந்தப் பிரயாணம் எத்தகைய அசந்தர்ப்பங்களுக்கிடையில் தொடங்கிற்று, என்பது சீதாபாயின் நினேவுக்கு மறுபடி மறுபடியும் வரத்தான் செய்தது.

முடிவில் அவளால் பொறுக்க முடியாமல் தன் உள்ளக் கிடக்கையை ஒளி மறைவில்லாமல் தெளிவாக வெளியிட்டுவிட்டாள். "ஊர்மிளேயின் மனக்கஷ்டம்தான் இப்படி இருட்டாக வியாபித்து, நம்மை இம்சிக்கிறதா? இப்பக் கூட என்ன முழுகிவிட்டது? கூடுமானல் திரும்பிப் போனல் என்ன குடியாத்தத்துக்கே? எனக்கென்னமோ நாம் ஊர்மிளயை விட்டுப் புறப்பட்ட நேரம் சரியானதாகத்தோணல்லே. அவள் என்னே என்னமோ 'அக்கா திரும்பிவா, அக்கா திரும்பிவா,'' என்று கையைப்பிடித்து இழுக்கருப்லே ரொம்ப பயமா இருக்கு.''

சுமார், அரை மணி கழித்து வேலூரில் இருந்து குடியாத்தம் நோக்கி ஒரு காலி சாமான் லாரி வந்து கொண்டிருந்தது. அதை திவான் பகதூரின் டிரைவர் சமிக்ஞை காட்டி நிறுத்தினன். இரண்டு டிரைவர்களுமாகச் சேர்ந்து, ராயரின் காரை எப்படியாவது நகரச் செய்ய முடியுமா என்று பிரயத்தனம் செய்து பார்த்தார்கள். முடிவில் பிரயாசைதான் மிஞ்சியது. அன்றிரவு ராயர் வேலூருக்குப் போக முடியாமல் தத்தளித்தார்.

இடையில் ஒரு வழியில் இப்படி திரிசங்கு சுவர்க்கமாக இரவெல்லாம் வேறு வழியின்றி ரஸ்தாவிலேயே இருக்க வேண்டிய நிலேமையை எண்ணி ராயருக்கு உள்ளுக்குள் அழுகை வந்துவிட்டது. "ஆனேக்கும் அடி சறுக்கும்" என்ற பழமொழி அவருடைய நினேவிற்கு வந்தது.

லாரி காலியாய் இருந்ததைக் கண்டு சீதாபாயிக்கு ஒரு யோசனே தோன்றிற்று. எப்படியும் லாரி குடியாத்தத்துக்குப் போக வேண்டியது தானே? அவர்களே யெல்லாம் ஏற்றிக் கொண்டு போனல் என்ன?

லாரி டிரைவர் தங்கமான மனுஷன். அவன் அவர்களேத்தன் லாரியில் ஏற்றிக் கொண்டு போகச் சம்மதித்ததுமன்றி, அவர்களுடைய காரையும் தன் லாரியுடன் பின்னல் பிணேத்துக் கட்டி இழுத்துச் செல்லத் தானகவே தயாராளுன். டிரைவர் ராமலிங்கத்தைத் தவிர்த்து அனேவரும் லாரியில் ஏறிக் கொண்டார்கள்.

லாரியும், காரும் குடியாத்தம் தாலூக்கா ஆபீஸ் காம்பௌண்டைத்தாண்டி, முனிசிபல் ஆபீஸ் கட்டிடத்தின் அருகில் வந்து, இரு குறுகிய வளேவுகளேத் தாண்டிக் கொண்டு அவர்கள் வீதியில் நுழையும் போதே தூரத்தில் இருந்தே, தெருவின் நடுவில் இருந்த சக்காராம ராயரின் வீட்டின் முன்னல் ஏகப்பட்ட ஜனக் கூட்டம் திரண்டிருந்ததைக் கண்டதும், சீதாபாயின் வயிற்றில் பகீரென்றது. "அடி அம்மா!'' என்று அவளுக்கும் தெரியாம

லேயே அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. மகா நெஞ்ச முத்தமுள்ள திவான் பகதூரின் கண்களில் கூட ஈரம் மின்னிற்று.

லாரி, வீட்டின் எதிரில் நின்று இரண்டு முறை, ஹார்ன் ஒலித்ததும் உள்ளிருந்து ஓடிவந்த ஹரி ராவ் தன் தமக்கையின் புருஷன் திவான் பகதூர் பாலாஜிராவ் சாஹேப் அவர்களைக்குடும்ப சகிதம் கண்டதும் ஒரே நாளில் இரண்டாம் முறையாக பேராச்சரியம் அடைந்தார்.

உள்ளே பிரவேசித்ததும், ஊர்மிளா கோவென்று அழுது கொண்டே, "அடீ அக்கா, என்னை ஆருமத்த பாவியா அலறவிட்டுட்டு போயிட்டாரேடீ" என்று பிரலாபித்து அவளடியில் வேரற்ற பனை மரம் போல் நெட்டுக் குத்தலாக விழுந்து மூர்ச்சித்தாள்.

துக்கத்தின் முதல் உத்வேகம் சற்றுத் தணிந்ததும் ஊர்மிளை தன்னைச் சுற்றிப் பார்த்தாள். திவான்பகதூரும் வந்திருந்ததைக் கண்டு ஆச்சரியம் அடைந்தாள்.

சக்கா ராம ராவின் மீது முகம் நீங்கலாக வேறொன்றும் தெரியாத படி போர்த்தி யிருந்தார்கள்.

பகதூர் கண் கொட்டாது தூங்காமல் தூங்கிச்சுகம்கண்டுகொண்டிருந்த அந்தப் பவித்திர தேகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவர் என்ன தோன்றிற்றோ என்னமோ மெதுவாக அதன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தார். புன்னகையுடனிருந்த அந்த முகத்தைக் கண்டதும் சக்காராம ராவ் இறந்ததை அவரால் நம்ப முடியவில்லை போலும்!

சற்று கழித்து ஊர்மிளா தன் தமக்கையை வினவினள். "அக்கா நீங்கள் எல்லாரும் ஒரே பிடிவாதமாக வேலூருக்குப் போய்க் கொண்டிருந்தீர்களே. உங்களுக்கு வழியில் எப்படித் தகவல் கிடைத்தது?"

சீதாபாயிக்கு துக்கம் நெஞ்சை அடைத்தது அவளால் பேச முடியவில்லை.

பாலாஜிராவ் அதற்கு விடை அளித்தார். "அம்மா, ஊர்மிளா பாய், நாங்களா வந்தோம்? இல்லையே. அக்காவும் தங்கையுமான உங்கள் இரண்டு பேருக்கும் நடுவில் உள்ள பாசமும் அன்புமல்லவா எங்களை மேலே செல்ல வொட்டாமல் தடுத்து இழுத்துக் கொண்டு வந்தது? அந்த தூய அன்பின் தெய்வீகப் பிணைப்புக்கு முன் என்னுடைய இறுமாப்பும் முரட்டுப் பிடிவாத குணமும் என்ன செய்ய முடியும்?"

"இத்தனை நாள் அசட்டுக் கர்வமும், அகம்பாவமும் என் கண்களை மறைத்துக் கொண்டிருந்தன. இன்றைய இந்த உங்கள் அன்பின் வெற்றி என் கண்ணின் முன்னிருந்த திரையை விலக்கி விட்டது. நாங்கள் இருக்கும் வரையில் உனக்கு யாதொரு குறையும் வராமல் பார்த்துக் கொள்ளுகிறோம். இதற்கு மேல் நான் வேறு என்ன சொல்வதற்கு இருக்கிறது" என்றார் திவான் பகதூர்.

மறுநாள் புறப்பட்ட காரில் திவான்பகதூர் பாளாஜிராவ் சாஹேப் மட்டும் தனியாக வந்து கொண்டிருந்தார். சீதாபாயும் குழந்தை பிரமிளாவும், அநாதையாகப் போய் விட்ட ஊர்மிளாவிற்குத் துணையாக நின்று, சில தினங்களுக்குப் பின் கூட்டி வர இருந்தார்கள்.

புதுக்கதை:

ஆசை

(ஸ்ரீமதி விசாலம்)

வசந்த காலம். மரங்களும், செடி கொடிகளும் பச்சைப் பசேலென்று, தம் தம் புதிய ஆடைகளை உடுத்திக் கொண்டிருந்தன. எங்கு பார்த்தாலும் கண் நிறைந்த காட்சிகளே. இதையெல்லாம் நான் என் அறையின் ஜன்னல் வழியாக, பார்த்து அனுபவித்துக் கொண்டிருந்தேன்.

நான் இங்கு ஜாகை எடுத்துக் கொண்டு ஒரு வருஷம் ஆகிறது.இந்த ஊர் கார்ப்பரேஷன் உபாத்தியாயினி நான். இன்னும் எனக்கு கலியாணமாகவில்லை. என் மனதும் பரிசுத்தமாகவே இருந்தது. ஆனல், இந்த மூன்று நாளாய் என் மனது அதிகம் மாறிவிட்டது. இதற்குக் காரணமில்லாம லில்லை.

நான் இருக்கும் அறைக்கு எதிர்த்தாப்போல் இருந்த அறையில் ஒரு வாரத்திற்கு முன் ஒருவர் குடிவந்தார். அவரும் என்னைப்போல் ஒரு ஆசிரியர்தான். அவர் வந்த புதிதில், அவர் இருந்த பக்கமோ அல்லது அவர் அறையில் இருக்கும் பொழுதோ, நான் அந்தப் பக்கம் செல்வது கிடையாது. அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலும் அப்பொழுது எனக்கில்லை.

2—3—44.

இன்று நான் மாடியிலிருந்து கீழே வந்து கொண்டிருந்தேன். அவர் அப்பொழுதுதான் வெளியே எங்கேயோ போயிருந்தவர், அந்தச் சமயம் வந்து கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும் அவர் தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு, நான் இறங்குகிற வரைக்கும் அவர் கீழேயே காத்துக் கொண்டிருந்தார். அவர் என்னைப் பார்க்காமல் வேறு பக்கம் பார்த்துக் கொண்டிருந்ததால், நான் அவரை நன்ருகப் பார்க்க முடிந்தது. ஆம், அவர் அழகுள்ளவர்தான் ; களை சொட்டும் முகம். அவர் மேலே ஏறிப் போவதை நான் கீழே இருந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் கடைசிப் படிக்கட்டுக்குப் போனதும் திரும்பி என்னைப் பார்த்தார். எங்கள் இருவர் கண்களும் ஒரே சமயத்தில் சந்தித்தன. அவர் என்னைப் பார்த்ததை, நான் பார்த்து விட்டேன் என்பதினலோ,

என்னமோ தெரியவில்லை; உடனே அவர் வேகமாகத் தன் அறைக்குச் சென்று விட்டார்.

3—3—44.

இரவு என் படுக்கையில் படுத்துக் கொண்டு, தூக்கம் வ்ராமல் புரண்டு கொண்டிருந்தேன். அவர் நினைவு இருக்கும் பொழுது, எனக்குத் தூக்கம் எப்படி வரும்? அவரை நினையாமலும் என்னால் இருக்க முடியவில்லை. நாளையே வேறு ஜாகை மாற்றிக் கொண்டு போக வேண்டும், என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் திரும்பவும் இந்த யோசனையை விட்டு விட்டேன்.

4—3—44.

இன்று ஞாயிற்றுக்கிழமை. இரவெல்லாம் எனக்கு சரியான தூக்கம் இல்லாததால், காலையில் நன்றாக தூங்கி விட்டேன். நான் எழுந்திருக்கும் பொழுது, சூரியன் தன் பொன் கிரணங்களை, நாலா பக்கமும் வீசி இறைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான். படுக்கையை விட்டு எழுந்தவுடன், ஜன்னலில் வந்து அவர் எழுந்து விட்டாரா என்று போய்ப் பார்த்தேன். கதவு மூடியிருந்தது. அறையிலிருந்து ஒரு சத்தமும் கேட்கவில்லை. இன்னும் தூங்குகிறார் போலும், என்னைவிட தூக்கத்தில் பெரிய கும்பகர்ணன்தான் என்று நினைத்துக் கொண்டேன்.

5—3—44.

அன்று என் சிநேகிதி பாமா, என்னைக் கட்டாயம் வந்து பார்க்கும்படி, முன் தினம் ஒரு வேலைக்காரப் பையனிடம் சொல்லி அனுப்பி இருந்தாள். அவள் சிறிய மகள் கமலா, என் வகுப்பில் படிக்கிறாள்.

காலை, பாமா வீட்டிற்குப் புறப்பட்டேன். வழியில் அவ்ர் அறையை தாண்டிக் கொண்டுதான் செல்ல வேண்டும். அவர் என்ன செய்கிறார் என்று பார்க்க எனக்கு ஆவலாய் இருந்தது. அவருடைய அறையின் ஜன்னல் வழியாக உள்ளே பார்த்தேன். ஆம், இன்னும் அவர் தூங்கிக்கொண்டு இருக்கிறார். ஆகையால் தைரியமாக அங்கேயே நின்றுகொண்டு, அவரைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன். அவருடைய அழகை அள்ளிப் பருகிவிடலாம் என்று என் மனது ஆசைப் பட்டது. அவர் புரண்டு படுப்பதைப் பார்த்து, போய் விடலாம் என்று திரும்பினேன். என் கை ஜன்னல் கதவின்மேல் பட்டது. என் வளையல்களின் ஓசையினாலோ, என்னமோ தெரியவில்லை; அவர் திடுக்கென்று எழுந்து என்னைப் பார்த்தார். ஹா! ஹா! அந்தப் பார்வையை நான் என்னவென்று சொல்வேன்? அந்தக் கண்களிலேதான் என்ன

அழகு, என்ன கனிவு, மெய் மறந்து அங்கேயே நின்றேன். அவர் கண்கள் முன் என்னால் நிற்க முடியவில்லை. பாமா வீட்டிற்கு, போக வேண்டும் என்ற நினைவு வந்ததும், அங்கு போகாமல் என் அறைக்கே திரும்பிச் சென்று விட்டேன். அவர் என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டாரோ? என் உடம்பு வெட்கத்தால் குன்றியது.

6—3—44.

"அம்மா, டீச்சர்மா வருகிறார்கள்" என்று கத்திக் கொண்டு கமலா என் கையைப் பிடித்து உள்ளே அழைத்துக்கொண்டு போனாள்.

"வா வா; உன்னைப் பார்த்து ரொம்ப நாளாச்சு. என்ன? முகமெல்லாம் வெளுத்திருக்கிறதே, உடம்பு சரியில்லையா?" என்று பாமா, என்னைத் தொட்டுப் பார்த்தாள்.

"உடம்பா? ஒன்றுமில்லையே, நன்றாகத்தானே இருக்கிறேன்."

"இல்லை, இல்லை இது உனக்கே தெரியாமலிருக்கலாம். உன் கண்கூட சிவந்திருக்கிறதே? ஏதாவது சினிமாவுக்கு போனாயா என்ன?"

"சினிமாவா? அதுதான் ஒன்று பாக்கி" என்று அலுப்புடன் சொல்லிக் கொண்டேன்.

"கண்டு பிடித்து விட்டேன்! கண்டு பிடித்து விட்டேன்!" என்று சிநேகிதி சிரித்துக் கொண்டே உரக்கக் கத்தினாள்.

"என்ன இப்படி தலைகால் தெரியாமல் கூச்சல் போடுகிறாயே, உன் கணவர் வீட்டில் இல்லையா?" என்றேன்.

"பயம் வேண்டாம் டீச்சர்மா, கணவர் வெளியே போயிருக்கிறார்," என்று தலையை ஆட்டிக் கொண்டே "தெரியும், தெரியும்" என்று சந்தோஷத்தோடு கூறினாள்.

"என்னது உனக்குத் தெரியும்? பிரமாதமான விஷயம் கண்டு பிடித்து விட்டேன் என்கிறாயே சொல்லு பார்க்கலாம்" என்றேன்.

"சொல்லவா? கோபிக்க மாட்டாயே? மாட்டேன் என்று சொல்லு" என்று என் அருகில் வந்து என் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

கோபித்துக்கொள்ள மாட்டேன் என்று என் தலையை அசைத்தேன்.

பாமா, என்ன சொல்லப் போகிறுள் என்று கேட்க எனக்கு அதிக ஆவலாயிருந்தது. பாமா, உள்ளே ஓடிப் போய் காகிதமும், பேனவும் எடுத்துக் கொண்டு வந்தாள்.

"பாமா, சீக்கிரம் சொல்லேன். இதெல்லாம் என்ன விளையாட்டு?" என்றேன்.

"ஆமாம், விளையாட்டுத்தான். முதலில் இந்தப் பேனவைப் பிடி" என்றுள்.

"எதற்காக? யாருக்கு எழுதச் சொல்லுகிருய்?" என்றேன்.

"யாருக்கா? உன் காதலனுக்கு" என்று சொல்லி இடி இடி என்று சிரிக்க ஆரம்பித்தாள்.

"நீ சொல்லா விட்டால் போ, நான் இதோ எழுந்து போகிறேன்" என்று கோபமாக இருப்பது போல் முகத்தை வைத்துக் கொண்டேன்.

"ஐயையோ, தேவிக்கு கோபம் வந்து விட்டது. கோபிக்க வேண்டாம் தேவி, சொல்லி விடுகிறேன்."

"சொல்லு சீக்கிரம்."

"உன் வேலையைப் பற்றி ஒரு சின்ன ராஜினமா."

"ராஜினமாவா? எதற்காக?"

"உனக்கு அடுத்த மாதம் கலியாணம். உனக்கு காதல் நோய் பிடித்து விட்டது. அதற்குத்தான் உனக்கு மருந்து கொடுக்க வேண்டு மென்று, உன் அம்மா அவர் களுக்கு கடிதம் எழுதப் போகிறேன்."

"நோயா? எனக்கா? உனக்கு யார் சொன்னது? இப்படியெல்லாம் விளையாடினல் நான் இதோ எழுந்து போய் விடுகிறேன்" என்றேன். என் கண்க்ளிலிருந்து, இரண்டு சொட்டுக் கண்ணீர் என் கை மீது விழுந்தது. நான் என் கண்ணீர் விட்டேன் என்பதே எனக்குச் சரியாகத் தெரியவில்லை.

நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்த விஷயங்களை ஒன்றும் அறியாத கமலா, என்னையே வியப்புடன் பார்த் துக் கொண்டிருந்தாள்.

எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்த பாமா, சட் டென்று என் பக்கம் திரும்பி, "அழாதே, உன் மனதை புண்படுத்தி விட்டேன். உன் மனதில் உள்ளதைச் சொல்ல மாட்டாயா? ஐயோ—சொல்லேன்."

"போடி பயித்தியக்காரி. அப்படியெல்லாம் ஒன்றும் இல்லே. நான் யாரையும் நினைக்கவில்லே" என்று சொல்லிக் கொண்டே, "நேரமாய் விட்டது, நான் போய் வருகிறேன்" என்று அங்கிருந்து புறப்பட்டு விட்டேன். மேலே நடந்த சம்பவங்களால், பாமாவோ கமலாவோ, என்னே இன்னும் கொஞ்ச நாழி, இருந்து விட்டுப் போகும்படி சொல்ல வில்லே.

7—3—44.

நான் பள்ளிக்கூடத்திலிருந்து அறையை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். அவர் அப்பொழுதுதான் வெளியே போய்க்கொண்டிருந்தார். நான் மேலே ஏறி வருகிற வரைக்கும், அவர் வீட்டுக் கூரையே பார்த்துக் கொண்டிருந்தார். நான் மேலே வந்ததும், அவர் கீழே இறங்கிப் போய் விட்டார். அப்பப்பா, என்ன கல் மனது இவருக்கு; திரும்பிக்கூடப் பார்க்காமல் கூரையையே பார்த்துக் கொண்டிருக்கிருரே. அவர்மேல் கோபம் கூட வந்தது. ஆமாம் நான் மாத்திரம் அசடு மாதிரி ஏன் நடந்து கொள்ள வேண்டும்.

8—3—44.

இன்று பௌர்ணமி. ஆகாயத்தில் சந்திரன் பவனி வந்து கொண்டிருந்தான். இவர் வருவதற்கு முன் தெருப் பக்கமாகப் பார்க்கும் ஜன்னலில் உட்கார்ந்து கொண்டு, சந்திரனைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருப்பேன். ஆனல் இப்பொழுது முழுதும் மாறிவிட்டேன். அவர் அறைக்கு நேராக உள்ள ஜன்னலில் உட்கார்ந்து கொண்டு கீழே இருக்கும் சந்திரனிடம் ஆசை, ஆம், இவர் பெயர் சந்திரன்தான். இது கீழ் வீட்டுக்காரர் சொல்லி நான் அறிந்தேன். எவ்வளவு நாழி இப்படி இருந்தேன் என்று எனக்கு நினைவு இல்லே. ஆம், அப்படியே ஜன்னல் கம்பிகளே பிடித்துக் கொண்டு, உட்கார்ந்தபடியே தூங்கி விட்டேன். மிருதுவான கைகள், என் கைகளேப் பிடித்தபோதுதான் நான் விழித்துக் கொண்டேன். என் கைகளே பிடித்துக் கொண்டு அவர்நின்றது அந் நிலவொளியில் நன்ருகத் தெரிந்தது. ஒரு நிமிஷம்தான் கழிந்து இருக்கும். மெதுவாக நான் என் கைகளே பின்னுக்கு இழுத்துக் கொண்டேன். ஆம், அவர் உணர்ந்து கொண்டார். அவர் கண்களே அகல விரித்து என்னே அன்புடன் நோக்கினர்.

"என்னே மன்னிப்பாயா" என்று அவர் சொன்னது எனக்கு மெதுவாகக் கேட்டது. நான் அவரை நிமிர்ந்து பார்க்கவில்லே. வெகு நேரத்திற்குப் பிறகு நான் நிமிர்ந்து பார்த்த போது, அவர் தன் அறையை நோக்கிச் சென்று

கொண்டிருந்தார். அவர் போய் விட்டார். படுக்கையில் போய் விழுந்து அழவேண்டும்போல் எனக்கு தோன்றியது.

9—3—44.

அவர் ஊருக்குப் போய் விட்டார். ஏதோ வேலையின் நிமித்தமாக இரண்டு நாள் ரஜா வாங்கி இருந்தார். அவர் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவரின்றி எனக்கு எதுவும் பிடிக்கவில்லை. அவர் என்னமோ என்னிடம் அடிக்கடி பேசிக் கொண்டிருப்பவரல்ல. ஆனல், அவர் இல்லாதது, எனக்கு மிகவும் வருத்தமாகவே இருந்தது. உண்மையில் அவர் என்னை காதலிக்கிருரா? இது எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது. அவருடைய மௌனம் என்னை துக்கத்தில் ஆழ்த்துகிறது.

11—3—44.

அவர் வந்து விட்டார். இன்று நான் பள்ளிக்கூடத்திலிருந்து வந்த கொஞ்ச நாழிக்கெல்லாம், கமலாவும், அவள் தாயாரும் வந்தார்கள். பாமாவைப் பார்த்ததும் என் துக்கம் நெஞ்சை அடைத்தது. "பாமா, இதற்கு நீதான் துணை செய்ய வேண்டும். நான் உனக்கு என்னவென்று சொல்வேன்? அவரைத் தவிர வேறு யாரையும் மணந்து கொள்ள முடியாது. இதைச் சீக்கிரம் நீ என் பெற்ருேர்களுக்குத் தெரியப் படுத்து" என்றேன்.

"ஆனல் நீ நினைக்கும் அவர் அல்ல. உன் கணவராக வரப்போகிறவர் ஒரு இஞ்சினியர்; பெரிய பணக்காரர். இதோ பார், உன் அம்மா எழுதியிருக்கும் கடிதத்தை. எங்கே? உன் முகத்தைக் காட்டு பார்க்கலாம்" என்ருள். எனக்கு உலகமே இருண்டு விட்டதுபோல் தோன்றியது. "பாமா...நீ எனக்கு இந்த உதவிதான செய்யப் போகிருய்? இவரின்றி யாரையும் நினைக்க என் மனம் இடங் கொடுக்காது. இதை நீ அம்மாவுக்குத் தெரியப் படுத்த வேண்டும்" என்றேன்.

"இல்லை மனதைத் தைரியப் படுத்திக் கொள். இதைப் பார், உனக்கு நான் இதைக் காட்ட மறந்து விட்டேன்" என்று பாமா, மஞ்சள் உறையிலிருந்து திருமணப் பத்திரிகையை எடுத்துக் கொடுத்தாள்.

ஆம், அது என்னுடைய திருமணப் பத்திரிகைதான். அதை என்னல் வாசிக்கக்கூட முடியவில்லை. அப்படியே சோர்ந்துபோய் படுக்கையில் படுத்துக் கொண்டேன். கமலாவும், பாமாவும் போனது எனக்குத் தெரியாது.

12—3—44.

இரவு மணி 10 அல்லது 11 இருக்கும். எனக்குத் தூக் கம் வராமல் படுத்துக் கொண்டிருந்தேன்' அப்பொழுது யாரோ என் அறையை நோக்கி நடந்து வருவதுபோல் இருந்தது. ஆம், அவர்தான். வெளியே நின்றபடியே ஏதோ சொன்னர். ஆனல் எனக்கு தெளிவாகக் கேட்க வில்லை. உடனே நான் எழுந்து மேஜைமீதிருந்த விளக்கை ஏற்றப் போனேன். ஏற்றி விட்டு திரும்பிப் பார்த்த பொழுது அவர் போய்விட்டார். உண்மையிலே இவர் என்னைக் காதலிக்கிருரா? அப்படி இருந்தால் இதை ஏன் இவர் வெளிப்படையாகச் சொல்லக் கூடாது.

13—3—44.

நேற்று இரவு நடந்த சம்பவத்தால் என் மனது கொஞ் சம் தைரியமடைந்தது. நான் அவர் அறைக்குச் சென்ற பொழுது, அவர் ஏதோ ஒரு நாவலைப் படுத்தபடி படித்துக் கொண்டிருந்தார். அவர் முகத்தைப் பார்த்தவுடன் என் வரவை அவர் எதிர்பார்க்கவில்லை போல், தோன்றியது. நானே அங்கு போட்டிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன். அந்த மங்கிய வொளியில் உண்மையில் அவரால் படிக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. அவர் கண்கள் மாத்திரம் புத்தகத்தில் இருந்ததேயொழிய மனம் வேறெங்கேயோ லயித்திருக்கிறது என்று அறிந்து கொண்டேன்.

"நான் போய் வருகிறேன்" என்று எழுந்து நின் றேன். அப்பொழுதுதான் அவர் புத்தகத்திலிருந்து தன் முகத்தை என் பக்கம் திருப்பி "இதற்குள்ளாகவா?" என் ருர். "நீங்கள் தான் என்னிடம் பேசவில்லையே" என் றேன். திரும்பவும் அவர் யோசனையில் ஆழ்ந்து விட்டார். மறுபடியும் நான் போகிறேன் என்றகுரலைக் கேட்டுத்தான் அவர் சரியாக எழுந்து உட்கார்ந்து கொண்டு, "என்னை மன்னித்து விடு; உன்னை அடையும் பாக்கியம் எனக் கில்லை" என்று சொல்லி விட்டு, படுக்கையில் குப்புறப் படுத்துக் கொண்டார். நான் வெகு நேரம் காத்திருந் தேன். அவர் விம்மும் சத்தம்தான் எனக்குக் கேட்டது. இவர் எதற்காக வருத்தமடைகிருர்? என்னை மணப்பதற்கு இவருக்கு என்ன தடை? நான் இதை என் அறைக்குச் சென்று கொண்டிருந்த பொழுது யோசித்துக் கொண்டேன்.

14—3—44.

விடிய இன்னும் இரண்டு மணி நேரம் இருக்கும். காரின் 'ஹாரன்' சத்தம் கேட்டு விழித்துக் கொண்

டேன். "இன்னேரத்தில் யார் வந்திருக்கக்கூடும்" என்று நினைத்து ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன்.

இதற்குள் என் அறையின் கதவைத் தட்டி, "அம்மா, தூங்குகிருயா?" என்று என் தாயாரின் குரல் கேட்டது. எனக்கு பகீரென்றது. உடனே என்னுல் கதவைப்போய் திறக்க முடியவில்லை. இரண்டு மூன்று தரம் கதவை இடித்த பிறகுதான் திறந்தேன்.

கார் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. அதை விட என் மனது பட்பட்டென்று, அடித்தது. வழியில் என் ராஜிநாமாவைப் பற்றியும், எனக்குக் கணவராக வரப் போகிறவரைப் பற்றியும் பேசிக் கொண்டு வந்தார். ஆனுல் இதில் ஒன்றிலும் என் மனது செல்லவில்லை.

15—3—44.

இன்று நான் படுக்கையை விட்டெழுந்திருக்க வில்லை. அவரை மணக்க முடியாததைப் பற்றியே எண்ணி வருத்தம் அடைந்தேன். எனக்கும் இங்கு கலியாணம் நிச்சயமாய் விட்டது. அவருக்கும் என்னை மணப்பதில் ஏதோ ஒரு தடை இருக்கிறது. ஆகையால் என் விருப்பப்படி எதுவும் நடக்காது. இதையே நான் பல தடவை கூறிக் கொண்டேன்.

16—3—44.

கலியாண வேலை மும்மரமாக நடந்துகொண்டிருந்தது. மண அறையை விதவிதமாக அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள். ஆனுல் என் ஏக்கங்கொண்ட கண்களுக்கு எதுவும் ரம்மியமாக இல்லை.

17—3—44.

இன்று அவரிடமிருந்து கடிதம் வந்தது. கடிதம் பின் வருமாறு எழுதியிருந்தது.

சகோதரி......

என்னை மன்னித்து விடு.

இரண்டு தரம் உன்னிடம் சொல்ல நினைத்தேன். ஆனுல், அது அப்பொழுது முடியாமல் போய் விட்டது. எனக்கு முன்னமே கலியாணமாகி, என் மனைவி இறக்கும் பொழுது அவள் விருப்பப்படி, மறு விவாகம் செய்து கொள்வதில்லை, என்று பிரதிக்ஞை செய்தேன். நான் சொன்ன சொல்லை காப்பாற்ற விரும்புகிறேன்.

என்னை மறந்து விடு. இதுதான் உன்னைக் கேட்டுக் கொள்வது.

சந்திரன்.

நீரும் நெருப்பும்

[ஆர். சரஸ்வதி]

கிருஷ்ணா நதியில் வெள்ளம் கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது. கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் பச்சைப் பசேலென்ற வயல்களும், தோப்புகளும் பார்ப்பதற்குக் கண் கொள்ளாக் காட்சியாயிருந்தன. வடக்கத்திக்காற்று மகிழம் பூக்களின் வாசனையை அள்ளிக் கொண்டு வந்தது. மாந்தோப்பினுள் குயில்கள் உல்லாசமாகப் பாடிக் கொண்டிருந்தன. நதிக்கு அக்கரையில் வெகு தூரத்தில் தெரிந்த மலைகளுக்குப் பின்னால் கதிரவன் மறைந்து கொண்டிருந்தான். மாலைப் பொன் வெயிலில் மாந்தளிர்கள் பொன் தளிர்களாக மின்னின.

நதியை ஒட்டினாற்போல் ஒரு அழகிய சிறு குடில். அதைச் சுற்றிலும் வசீகரமான பூந்தோட்டம் ஒன்று பயிராக்கப் பட்டிருந்தது. வித வித நறுமலர்களின் இன்ப வாசனைகள் கலந்த மனோகரமான ஒரு புது மணம், மூடு பனி படர்வதுபோல் எங்கும் பரவியிருந்தது. ஒரு சண்பக மரத்தின் அடியில் மான் தோலின் மேல் அமர்ந்திருந்தான் ஆனந்தன்.

சல சல வென்ற இன்னிசையோடு வீசிக் கொண்டிருந்த காற்று அவன் காதினுள் என்னென்ன கதைகளைச் சொல்விற்றோ? அவனுடைய அகன்ற பெரிய கண்கள் இதயத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்த ஒரு இன்பப் பெருக்கினால் அபூர்வமாய் ஜொலித்தன. ஆனால், அந்தக் கண்களில் ஒரு ஒளியில்லை, ஜீவனும் இல்லை. பிறவிக் குருடனான அவனுடைய கண்களில் ஒளியும், ஜீவனும் எங்கிருந்து வரும்? அவன் அடிக்கடி அங்குமிங்கும் திரும்பி ஆவலுடன் யாருடைய வரவையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

குடிசையின் கதவைத் திறந்து கொண்டு ஒரு அழகிய யுவதி வந்தாள். அவள் கையில் சிறிய வீணை ஒன்று இருந்தது. அவளுடைய மெல்லிய காலடி ஓசையைக் கேட்டதும் ஆனந்தனின் கண்கள் மலர்ந்தன. இனிமையான குரலில், "திஷ்யா! ஏனம்மா இவ்வளவு நேரம்?" என்று கேட்டான்.

சுந்தரி ஒரு மோகனச் சிரிப்புடன், "போ அண்ணா! உனக்கு இதே வேலையாகப் போய் விட்டது. நான் ராத்திரிக்குச் சமையல் செய்ய வேண்டாமா?" என்று சிறிது கோபமாகச் சொன்னாள். ஆனால் அவளுடைய குரலில் அன்பும் கொஞ்சலும் இருந்தது.

ஆனந்தன் எட்டி அவள் கையைப் பிடித்துக்கொண்டு,'திஷ்யா! நீ இருக்கும் வரையில்தானே என்னுடைய இன்பமெல்லாம்! நீ போய் விட்டால்......'' மேலே பேச முடியாமல் அவன் நெஞ்சு அடைத்தது. குரல் நடுங்கிற்று.

விழிக் கடையிலிருந்து பெருகும் நீரைத் துடைத்துக் கொண்டு அவனருகில் நெருங்கி வந்தாள் திஷ்யா. அவனுடைய இரு கைகளையும் பிடித்துக்கொண்டு "அண்ணா! நீ என்ன சொல்லுகிறாய்? உன்னை விட்டு நான் எங்கே போகப் போகிறேன்?'' என்று ஒரு வித திகிலுடன் கேட்டாள்.

தன் கைகளுக்குள்ளிருந்த மெல்லிய அம்மலர்க் கரங்கள் நடுங்குவதை ஆனந்தன் உணர்ந்து கொண்டான். மிகச்சிரமப்பட்டு சிரிப்பை வரவழைத்துக் கொண்டு அவளை நோக்கி, "பயப்படாதே திஷ்யா! உன்னுடைய விவாகத்தைப் பற்றித்தான் சொன்னேன். வேறு ஒன்று மில்லை!'' என்றான்.

திஷ்யா கலகல வென்று சிரித்தாள். வீணையை மீட்டிக் கொண்டே, "அண்ணா! அந்த எண்ணத்தை மட்டும் விட்டு விடு. இந்த ஜன்மத்தில் அது நடக்கப் போவதில்லை. இப்பொழுது பாடேன் அண்ணா!'' என்றாள்.

"நான் வாசிக்கிறேன் நீ பாடு'' என்று அவள் கையிலிருந்த வீணையை வாங்கிக் கொண்டான்.

அன்று ஆனந்தனின் கைகள் அறியாமல் வராளி ராகத்தின் சோக ரசத்தைப் பிழிந்தன.

* * *

வட பெண்ணைக் கரையிலிருந்த பல்லவ சேனைக்குத் தலைவனாக இருந்தான் நிகும்பன். அவனுடைய திரண்ட புஜங்களையும் அகன்ற மார்பையும் பார்க்கும் பொழுதே அவனொரு சிறந்த வீரனென்பதைத் தோற்றுவித்தன. உலகம் போற்றும் மன்னனாகத் திகழ்ந்த மகேந்திர பல்லவ சக்கரவர்த்தியின் உண்மை ஊழியனாக இருந்தான்.

வெகு நாட்கள் புத்திரப் பேறில்லாமல் வருந்திக் கொண்டிருந்த நிகும்பனுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். ஆனால் பிறக்கும்பொழுதே ஒளி இழந்த கண்களுடன் பிறந்த அப்புத்திரன் மேல் அளவற்ற வெறுப்பு கொண்டான் நிகும்பன். மகா அழகும், அற்புத தேஜஸும் திகழ்ந்த அக்குழந்தைக்கு கண்களில்லாத ஒரே குறையைத் தவிர வேறு ஒன்றுமில்லை. நிகும்பனுக்கு ஏனோ அதைக் காணவும் பிடிக்கவில்லை. தங்கள் வீர வம்சத்திற்கே தீராத அவமானம் ஏற்பட்டு விட்டதாக எண்ணினான். ஏதோ சாபத்தினால்தான் தனக்குப் பிறவிக் குருடான புத்திரப் பேறு சம்பவித்த தென்றெண்ணி அக்குழந்தையை தன் எதிரிலேயே கொண்டு வரக் கூடாதென்று உத்தரவிட்டு விட்டான்.

மூன்று வருஷங்களுக்குப் பிறகு அவனுக்கு மறுபடியும் ஒரு குழந்தை பிறந்தது. மகா அழகியான ஒரு பெண் பிறந்தாள். நிகும்பன் ஆனந்தத்தினால் பூரித்துப் போனான். மகன்மேல் தீராத வெறுப்புக் கொண்டிருந்த நிகும்பனின் இதயத்தை மகள் கவர்ந்து கொண்டாள். இருவரும் ஒரே வயிற்றில் பிறந்தவர்கள்தான். ஆனால் திஷ்யாவுக்குத் தங்கப் பாலாடையில் தான் பால் புகட்ட வேண்டும். ஆனந்தனுக்கு கிடைத்தது ஒரு ஓட்டை வெண்சங்குதான்.

தாயின் மெல்லிய இதயம் இதைச் சகியாமல் சீக்கிரமே உலக பாசத்திலிருந்து விடுதலை அடைந்தது. இளமையில் திஷ்யா வுக்கு இது ஒன்றும் அவ்வளவா கத் தெரியவில்லை. ஆனால் பால்யத்தில் தந்தையின் வேறுபாட்டை நன்கு உணர்ந்து கொண்டாள். இயற்கையிலேயே மென்மையான இதயம் படைத்தவள். சாதாரண பாசத்துடன்கூட தந்தையின் வேறுபாடு அவளை இன்னும் அதிகமாகக் குருட்டுச் சகோதரனிடம் இழுத்துச் சென்றது. ஆனந்தன் இருக்கும் இடத்தையே திஷ்யா மிதிக்கக் கூடாதென்று நிகும்பன் தடுத்துப்பார்த்தான். ஆனால், அவனுடைய முயற்சி ஒன்றும் அவளிடம் பலிக்கவில்லை.

ஆனந்தன் உலகத்தை திஷ்யா மூலம் பார்த்தான். திஷ்யா அவனுக்குக் கண்ணாகி விட்டாள். அவளுடைய அன்பு ஸ்பரிசம் பட்ட மாத்திரத்தில் ஆனந்தன் தன்னையும் தன்னுடைய இருண்ட உலகத்தையும் ஒருங்கே மறந்து விடுவான். தான் கற்ற கலைகளையெல்லாம் அவனுக்கும் பயிற்றுவித்தாள் திஷ்யா.

இளவேனிலின் இன்பக் காற்றில் அவ்விரு மலர்களும் ஊசலாடிக் கொண்டிருந்தன.

யௌவனத்தில் திஷ்யாவின் அழகு நாடெங்கும் பிரசித்தியாயிற்று. அவளை மணக்கப் பலர் போட்டியிட்டனர். ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் அவளை மணக்க முன் வந்தனர். நிகும்பன் விவாகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினான்.

திஷ்யாவின் மனம் கொதித்தது. தன் சுகத்தைப் பெரிதாகக் கருதும் தந்தை, அதே ரத்தத்தில் தோன்றிய ஆனந்தனிடம் இவ்வளவு வெறுப்புடன் இருப்பதைக் காண அவள் இதயம் சொல்லொணாத வேதனையால் வாடியது.

தந்தையிடத்தில் நேரில் வாதாட திஷ்யாவுக்குப் பயம். ஒரு நாள் இரவில் தன் குருட்டுச் சகோதரனை அழைத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி சிற்றப்பனிடம் அடைக்கலம் புகுந்தாள். பிறகு அவன் உதவியைக் கொண்டு கிருஷ்ணா நதியின் கரையில் ஒரு அழகிய குடிலைக் கட்டிக் கொண்டு அதில் குடியேறினாள்.

யாருக்காக உயிர் வாழ்ந்து வந்தானோ, யாரிடத்தில் தன் இதயத்தையே அர்ப்பணம் செய்திருந்தானோ, அந்தப் புத்திரிக்குத் தன்னிடத்தில் துளிக்கூட அன்பில்லையென்பதை உணர்ந்த பொழுது நிகும்பனின் இதயம் துகள் துகளாகச் சிதறிவிட்டது. சாந்தியை வேண்டி அவன் ஒரு புத்த பிக்ஷுவானான்.

* * *

இளவேனிற் காலம்.

புஷ்பங்கள் மலர்ந்தன. பூந்தோட்டத்தின் இன்ப வாசனை உயிரைக் கவ்வி இழுத்தது.

வீணையை முறுக்கி விட்டுக் கொண்டு மலய மாருதத்தில் ஒரு பண்ணை இசைத்துக் கொண்டிருந்தான் ஆனந்தன். கமகங்கள் அனாயாசமாக உதிர்ந்தன.

தளர்ந்த நடையுடன் அவன் எதிரில் வந்து நின்றாள் திஷ்யா. அவள் முகத்தில் விவரிக்க இயலாத பயம் குடி கொண்டிருந்தது. ஆனந்தன் வீணையை நிறுத்திவிட்டு மௌனமாக அவளை நோக்கினான்.

"அண்ணு! உனக்குச் செய்தி தெரியுமா?" என்று கேட்டாள். அவள் குரல் நடுங்கிற்று.

"என்ன சமாச்சாரம் திஷ்யா?"

"கொலைக்கு அஞ்சாதவனும், கொடூர சித்தம் படைத்தவனுமான ஒருவன் நம் பல்லவ சாம்ராஜ்யத்தின்மேல் படையெடுத்து இருக்கிருனும். அவன் படைகள் இந்த வழியாகத்தான் வருகின்றனவாம்" என்ருள்.

ஆனந்தன் கலகலவென்று சிரித்தான். "திஷ்யா! நிகும்பனின் பெண்ணு யுத்தத்தைக் கேட்டு அஞ்சுகிருள்! உன்னுடைய நரம்பில் வீர ரத்தம் ஓடுவதை மறந்து விட்டாயா?" என்ருன்.

ஆனல் உடனே எதையோ நினைத்துக்கொண்டு அவளை நோக்கி, "திஷ்யா! இந்தக் குருட்டுச் சகோதரனுல் உனக்கு ஒருவித உதவியும் கிட்டாது. வாஸ்தவம் தான். இன்றே புறப்படு, நாம் வேறு இடத்திற்குப் போய் விடுவோம்" என்ருன்.

திஷ்யா இயற்கையிலேயே ரோஷக்காரி. ஆனந்தனின் வார்த்தைகள் அவள் இதயத்தைத் தொட்டன. முகம் சிவக்க "அண்ணு! நான் நிகும்பனின் பெண் என்பதை சமயம் ஏற்படும் பொழுது உனக்கு நிரூபித்துக் காட்டுகிறேன்! அது வரையில் பொறுமையோடிரு" என்று சொல்லிவிட்டு வேகமாக மறைந்தாள்.

* * *

கிருஷ்ணு நதி தீரத்திலே வசந்த காலத்து எழில் சுரந்து கொண்டிருந்தது. துல்லியமான நீல வானத்தில் சந்திரன் களங்கமற்று பிரகாசித்துக் கொண்டிருந்தான். தோட்டத்திலிருந்து வாசனை வெகு சுகமாக வீசியது.

வீணையுடன் தன்னுடைய அபூர்வமான தீங்குரலிலே ரஞ்சகமான பாட்டை இசைத்துக் கொண்டிருந்தாள் திஷ்யா. ஆகாயத்தை நோக்கியவாறு படுத்துக்கொண்டு அதை ரசித்துக் கொண்டிருந்தான் ஆனந்தன்.

"திஷ்யா! உனக்குக் கொஞ்சம் கூட பயம் இல்லையா?" என்று கேட்டான் ஆனந்தன்.

"எதற்காக?"

"புலிகேசி அழகிய பெண்களை சும்மா விடமாட்டான் திஷ்யா!"

"நான் அழகி என்று உனக்கு யார் சொன்னுர்கள் அண்ணு?"

ஆனந்தன் பேசாமல் சிரித்தான். பிறகு, "திஷ்யா! அவனுடைய கூடாரங்கள் வெகு சமீபத்தில் தெரிகின்றன வென்று நீயே சொன்னுயே! உன்னுடைய தீங்குரல் ஒரு வேளை அவனுடைய பாம்புச் செவிகளில் விழுந்தால்?'

"விழுந்தால் என்ன? இவனைப் போல் ஆயிரம் புலிகேசிகள் வந்தாலும் என்னை என்ன செய்துவிட முடியும்? அவன் மட்டும் என்னெதிரில் தென்படுவானுனல் அவன் மார்பை என் காலால் உதைப்பேன்" என்ருள்.

ஆனந்தன் சிரிக்க முயன்ருன். ஆனல் அதற்குள் தோட்டத்துக்கு வெளியிலிருந்து ஒரு கடுமையான சிரிப்புச் சத்தம் கேட்டது. திஷ்யா பயத்தினல் நடுங்கினுள். ஆனந்தன் தன்னை மறந்து சிந்தனையிலாழ்ந்தான்.

* * *

இளந் தென்றலும் துல்லிய நில வொளியும் புலிகேசியின் மனதில் இன்ப உணர்ச்சிகளை மீட்டின. சிறிது உலாவி வரலா மென்று கிளம்பினன்.

நிர்மானுஷியமான அந்நதிப் பிரதேசத்தில் தென்றலில் மிதந்து வந்த இன்னெலி அவனை ஆச்சரியத்திலாழ்த்தியது. தான் வந்திருப்பது தெரிந்தும் நிர்ப்பயமாக இசைக்கும் பெண்மணி யாராக இருப்பாளென்பதை அறிய ஒரு தீராத ஆவல் அவன் மனதில் மூண்டது. ஒலி வந்த திசையை நோக்கி வேகமாகச் சென்ருன்.

பூந்தோட்டத்தில் தெய்வப் பெண்போல் அமர்ந்திருந்த திஷ்யா அவன் மனதில் அழியாத ஓவியமாகப் பதிந்தாள். பேச்சிலிருந்து அவள் ஆனந்தனுடைய சகோதரி என்று தெரிந்ததும் அவன் மனம் மலர்ந்தது.

ஆனல் அவளுடைய கடைசி வார்த்தை ?

அவன் நெஞ்சைக் கூறிய ஈட்டி போல் அது துளைத்தது. "அவன் மட்டும் என் எதிரில் தென்படுவானுனல் அவன் மார்பை என் காலால் உதைப்பேன்"

ஆச்சரியம்! ஒரு சுந்தரியின் வாயில் வரக் கூடிய வார்த்தைகளா இவைகள்! ஒரு வீர மகனைப் போலல்லவா பேசுகிருள்! அவளைத் தான் மனைவியாகப் பெற்ருல் எவ்வளவு பாக்யம்! அவன் மனம் குழம்பிற்று. அவளுடைய சகோதர பாசத்தை அவன் வியக்காமல் போகவில்லை.

ஒரு கொம்பில் இரு மலர்கள்.

ஒன்றை அடைய வேண்டுமென்ருல் மற்றென்றை அழிக்க வேண்டும்!

பளுவான இதயத்துடன் தன்னிருப்பிடம் ஏகினுன் புலிகேசி.

*　　*　　*

ஆனந்தனும் திஷ்யாவும் கைதியானுர்கள்.

மெல்லிய தங்கச் சங்கிலியினுல் திஷ்யாவின் உடல் பிணைக்கப் பட்டது.

முரட்டு இரும்புச் சங்கிலி ஆனந்தனின் உடலை அலங்கரித்தது.

புலிகேசியின் அன்புப் பேச்சுக்கள் ஒன்றும் அவள் செவியில் புகவில்லை. அவன் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவும் மறுத்து விட்டாள்.

தனது கடைசி ஆயுதத்தைப் பிரயோகிக்க புலிகேசி சிறிதும் தயங்கவில்லை.

அழகாக அலங்கரிக்கப் பட்ட ஒரு கூடாரத்தில் உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருந்தான் புலிகேசி. வலப் பக்கம் திஷ்யாவும் இடப் பக்கம் ஆனந்தனும் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தார்கள்.

தன் குருட்டுக் கண்களைச் சுழற்றிச் சுழற்றி திஷ்யா இருக்குமிடத்தை ஆராய்ந்து கொண்டிருந்தான் ஆனந்தன்.

இடி போன்ற குரலில் கடகடவென்று சிரித்தான் புலிகேசி. திஷ்யாவின் அருகில் வந்து அவளைக் கூர்ந்து நோக்கினுன்.

சகிக்க முடியாத அருவருப்பினுல் திஷ்யா தலையைக் குனிந்து கொண்டாள்.

"சீக்கிரம் சொல்! என்னை மணந்து கொள்வதாயிருந்தால் உங்களிருவருக்கும் நல்லது! இல்லாவிட்டால் உன்னை அடையும் வழி எனக்குத் தெரியும்!" என்ருன் கடுமையான குரலில்.

"உன்னுலானதை நீ செய்து கொள். உன்னை மணப்பதென்பது இந்த ஜன்மத்திலில்லை" என்று கண்களில் கனல் பறக்கக் கூறினுள் திஷ்யா.

"அம்படியா!" என்று கொடூரமாகச் சிரித்தான் புலிகேசி. அவன் கை உறையிலிருந்த வாளை உருவியது.

மின் வெட்டும் நேரத்தில் ஆனந்தன் உடல் வேறு தலை வேருக பூமியில் உருண்டான்.

திஷ்யா கண்களை ஒரு கணம் மூடித் திறந்தாள். அக்கூடாரம் முழுவதும் செக்கச் செவேலென்று அவளுக்குத் தோற்றமளித்தது. அவளுடல் சிகப்பாயிருந்தது. அவள் கைகள் சிவப்பாயிருந்தன. எதிரில் நிற்கும் புலிகேசி சிவப்பாய் தோற்றமளித்தான். கீழே பூமி சிவப்பாயிருந்தது. மேலே ஆகாயமும் சிவப்பாய்த்தான் தோன்றியது.

உடலை ஒரு நெறி நெறித்தாள். பொற் சங்கிலிகள் அறுந்து கீழே விழுந்தன. ஆவேசம் பிடித்தவள்

போல் ஓடி புலிகேசியின் மார்பை தன் காலால் உதைத்தாள். இதைச் சற்றும் எதிர் பாராத புலிகேசி நிலை தடுமாறி கீழே விழுந்தான்.

கூடாரத்தை விட்டு வெளியே ஓடினாள். ஓடிக் கொண்டேயிருந்தாள். அவள் வாய் "ஆனந்தா! ஆனந்தா!" என்று முணுமுணுத்தது.

வானத்தை மேகங்கள் சூழ்ந்து கொண்டு அடை மழை பொழிந்தது. மின்னல்கள் கண்ணைப் பறித்தன. இடியோ அண்டம் செவிடு படும்படியாக கிடுகிடுத்தன. கிருஷ்ணா நதி தீரத்தில் கார் காலத்தின் ஆவேசம் பிரவாகமாக கொந்தளித்துப் பொங்கிக் கொண்டிருந்தது.

ஒரு காலத்தில் அவள் கண்ட அற்புதக் கனவு என்ன? மாளிகைக்கு எதிரே ஒரு முல்லைக் கொடி இருந்தது. அந்த முல்லைக் கொடியிலே இருமலர்கள் பூத்து மணத்தைப் பரப்பிக் கொண்டிருந்தன. அந்த மலர்களைப் போலத் தானே தங்கள் வாழ்வும்? இனிமை கொழிக்கும் என்று நினைத்தது எல்லாம் வெறும் கற்பனைதானா? கனவுக்கும் வாழ்வுக்கும் சம்பந்தமில்லை என்றால் சுந்தரக் கனவுகள் எதற்காக உலகில் உதிக்க வேண்டும்? ஒய்யாரிகள் ஒய்யாரக் கனவுகள் கூட கைகூடாமல் போவதா? அடடா! படைப்புக் கடவுளே! பிரமனே, உனக்கு உண்மையில் இதயம் என்பதில்லையா? வாழ்க்கையில் நிழல் படிந்து போகிறதே? சத்தும் சீவனும் இல்லாத வாழ்வில் என்ன ருசி இருக்கப் போகிறது? தெளிந்த நீர் என்று நினைத்தது வெறும் நிழல்தானா? சீச்சி!

"ஆனந்தா! ஆனந்தா!" என்று முணகிக் கொண்டே நீரில் இறங்கினாள் திஷ்யா. அவளுடைய வனப்பு மிக்க உடலில் பிரவாகம் ஏறிக் கொண்டே வந்தது.

இடை......மார்பு......நெற்றி.... தலை மூழ்கியது.

அவ்விடத்தில் ஒரு பெரிய குமிழி தோன்றிற்று. சிறிது நேரத்தில் அதுவும் உடைந்தது.

கரையில் ஒரு புத்த பிக்ஷு தோன்றினார். அவர் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாய்ப் பெருகி ஓடிக் கொண்டிருந்தது. அவருடைய இதழ்கள் ஓதின.

ஆழம் ஏது மற்ற — வெளியில் அபலை ஆடுகின்றாள்



காளி கோயில்

"பாசரசு"

பொழுது விடிந்து கொஞ்ச நேரந்தானயிற்று. உலகம் கண் விழிக்க ஆரம்பித்தது. கீழ் வானத்தில் கதிரவன் புன்முறுவலோடு எட்டிப்பார்த்தான். குளிர்ந்த சுடர்களை நாலா பக்கமும் அள்ளி வீசினன். அவனுக்கு என்றுமில்லாத சந்தோஷம். இல்லாமலா அவனுடைய உடல் அவ்வளவு பெரியதாகப் பருத்திருந்தது. அவன் வந்த வேகமும் சந்தோஷமும் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் எங்கேயோ ஓடி ஒளிந்தன. அவன் வேகமும் குறைந்தது. அவன் உடல் சிறுத்தது. எதையாவது அற்புதத்தைப் பூலோகத்தில் காணவேண்டுமென்று ஆவலுடன் வருகிறவன் தினம் பார்க்கும் சம்பவங்களையே பார்த்தால் உற்சாகம் குன்ருமலா இருக்கும்? அதே மலைகள், அதே ஆறுகள், அதே வயற்காடு, தினம் சூரியோதயத்தின் போது வரப்பில் வேகமாக நடந்து செல்லும் அதே மங்கம்மா.

இன்றும் வழக்கம்போல் மங்கம்மா தலையில் பானையை வைத்துக் கொண்டு கால்வாய்க் கரைமீது நடந்து கொண்டிருந்தாள். பானையில் கஞ்சி இருந்தது. அவள் பானையைக் கையால் பிடித்துக் கொள்வதில்லை. பானையைச் சும்மாட்டில் பொறுத்திவிட்டு இரண்டு கைகளையும் வீசி வீசி நடப்பாள். வரப்புப் புல்லில் காலைச் சூரிய வொளியில் வைரங்களைப் போன்று பிரகாசித்துக் கொண்டிருந்த பனித் திவலைகள் மங்கம்மா கால் பட்டு நாலாபக்கமும் சிதறின. இவ்வளவு இயற்கை வைரங்களையும் சிதறவடிப்பதை மங்கம்மா சிந்திக்கவில்லை. அவளுடைய மனம் களத்து மேட்டில் காவலிருந்த தன் தகப்பன் மீதிருந்தது. தகப்பனைப் பற்றி நினைக்கும் பொழுதெல்லாம் அவளுக்குக் கவலையாகவே இருந்தது. அவனுக்குப் பத்துப் பதினைந்து தினங்களாக உடம்பு சரியில்லை. இரவானதும் அவன்மேல் தெய்வம் வந்து விடும். அவ்வளவுதான் ஒரே ஆட்டம், பாட்டு, கும்மாளம் இவ்வளவும் அந்தக் களத்து மேட்டில்தான். அவனை வயலுக்குப் போக வேண்டாமென்று எவ்வளவோ தடுத்துப் பார்த்தாள் மங்கம்மாள். இது காற்று சேஷ்டையென்றும், இது களத்து மேட்டில் தான் ஏற்படுகிறதென்றும் சொல்லிப் பார்த்தாள். ஆனல், அவன் அதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

"காற்று என்னை என்ன செய்யும்? அந்த மாரியம்மன்தான் என்னை என்ன செய்வாள்?" என்றெல்லாம் சொல்லுவான்.

மங்கம்மா இவ்வாறெல்லாம் யோசனை செய்துகொண்டே நடந்த பொழுது தனக்கு முன்னல் எதையோ கண்டு திடீரென்று நின்ருள். அவள் நின்ற இடத்திலிருந்து கொஞ்ச தூரத்திற்கப்பால் கால்வாய் நீரில் முருகன் முகத்தைக் கழுவிக் கொண்டிருந்தான்.

முருகன் அவ்வூர் பூசாரி. ஊரின் எல்லையில் ஒரு குறி வைத்திருந்தான். குறிமேடையில் ஒரு

பக்கத்தில் அவன் வீடு. வீட்டின் முன் பகுதியில் அம்மன் விக்கிரகத்தை அமைத்திருந்தான். தினந்தோறும் மாலை வேளைகளில் ஆண்களும் பெண்களுமாகக் குறிமேடைக்குக் கும்பல் கும்பலாக போவார்கள். முருகன் குறி சொல்வதில் உண்மை எவ்வளவு தூரம் என்பது தெரியவில்லை. ஆனால், கூட்டம் மட்டும் குறைவதில்லை. இவ்வளவு ஜனங்கள் போன போதிலும் மங்கம்மா மட்டும் குறிமேடைக்குப் போவதில்லை. அவளுக்கு மற்றவர்களைப் போல் குறி கேட்பதில் நம்பிக்கையில்லை. அதோடு அவளுக்கு முருகனைக் கட்டோடு பிடிக்காது. கூட்டம் அதிகமாக வருவதினால் முருகனுக்குச் சந்தோஷம் உண்டாகி விடுவதில்லை. மங்கம்மா வருவதில்லையே என்ற ஏக்கம் அவன் மனதில் சதா குடி கொண்டிருந்தது. மங்கம்மாவிடம் தன் மனதைப் பறி கொடுத்தவன் அவன். இன்று அவள் வாய்க்கால் கரைமீது நடந்து வரவும் அவனுக்குக் குதூகல முண்டாகி "மங்கா, யே மங்கா, யெங்கே போறே?" என்று கேட்டான்.

மருண்டு நின்ற மங்கம்மா பதில் ஒன்றும் சொல்லாமல் மேலே நடக்கலானாள். அவளை மேலே நடக்க வொட்டாமல் தடுப்பதற்காக முருகன் கால்வாயில் ஓடிக் கொண்டிருந்த தண்ணீரைக் கைகளில் வாரி வாரி அவள் வழியில் இறைத்தான். மங்கம்மா அதையும் சட்டை செய்யாது மேலே நடந்தாள். முருகன் அவள் முன் ஓடி வழி மறித்தான், மங்கம்மா ஸ்தம்பித்து நின்றாள்.

"ஐய! வழிவிடு" என்றாள் சற்று கோபத்துடன்.

"இதோ பாரு மங்கா, நாவழி விடறேன். நா கேக்கறதுக்கு மட்டும் பதில் சொல்லிவிட்டுப் போ"

"வழி விடுன்னா!"

"மங்கா, நீ யேன் குறிமேடைக்கு வர்ரதில்லே?"

"வழி விடு. எனக்குக் கோவம் வரும்."

"ஏதோ, கொஞ்சம் கோவி பாக்கலாம். நீ கோவிச்சுகிறது கூட அழகாத்தானிருக்கும்."

"நான் இப்பொ கத்துவேன்; அப்பறம் அப்பா வந்து ஒன்னை நைய புடைச்சிடுவாரு."

"கத்தேன். யாருக்கு நஷ்டம்? நீ கத்தறது ஒங்கப்பன் காதிலே விழுந்தாதானே! அவன்தான் ராத்திரியெல்லாம் ஆடிக்கிட்டிருந்தானே! ராத்திரி பூராவும் தூங்கலே. இப்போதான் களைச்சி போயி களத்து மேட்லே தூங்கறான். இடி முழக்கம்கூட அவனை எழுப்ப முடியாது. நீ கத்தியா அவனை எழுப்பப் போறே? ஊம்?"

மங்கம்மாவுக்கு என்ன செய்வதென்பது புரியவில்லை. அவள் ஏதேதோ யோசனை செய்து கொண்டிருந்தாள். இரவெல்லாம் தன் தகப்பன் கண் விழித்து ஆடின ஆட்டத்தைக் கற்பனை செய்து பார்த்தாள். அவள் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தாள்.

"இதோ பாரு மங்கா, நா ஒன்னை என்ன செய்துடுவேன்? நீயேன் குறிமேடைக்கு வர்ரதில்லெ அதைச் சொல்லேன், நா ஒன்னை உட்டுட்றேன்."

அவனுக்குச் சூடான பதில் கொடுக்க முடியாமல் போய்

விடவே மங்கம்மா கோபத்துடன், "உன் குறிமேடையை உடைப்பிலே கொண்டு போயி போடு. நீ ஊரையெல்லாம் ஏமாத்தற மாதிரி என்னையும் ஏமாத்தலாம்னு யோசிக்கிறியா?" என்று சொன்னாள். அவ்ளுக்கு ஆத்திரமாக விருந்தது. அவனைக் குத்திக் கொன்று விடலாமாவென்றுகூட அவளுக்குத் தோன்றிற்று.

"மங்கா, நீ இப்படி தெய்வத்தை இழிவு படுத்தித்தான் ஒங்கப்பனே அந்தத் தெய்வம் பிடிச்சுகிட்டு வாட்றது. உம்? இன்னும் என்னென்ன கஷ்டத்துக்கு நீ ஆளாகணுமோ? நான் சொல்றதைக் கேளு. நாளைக்கு வெள்ளிக்கிழமை, ஒங்கப்பனை அழைச்சுக்கிட்டு குறிமேடைக்கு வந்து சேரு. நா அந்தத் தெய்வத்தை ஓட்டிடறேன்" என்றான் அந்தப் பூசாரி.

"முருகா, நான் மரியாதையாகச் சொல்றேன், என் வழியை விடு" என்றாள் மங்கம்மா. இவளுடைய கண்கள் கோபத்தினால் கோவைப் பழம்போல் சிவந்து விட்டன.

"அப்பா, ஒன்னைப் பாக்கறதுக்கு அந்த ருத்ர காளியாட்டமே இருக்கு. என்ன பயங்கரமான கண்கள்! அந்த ருத்ரகாளியில்லே, அந்த ருத்ர காளியின் அம்மா வந்தாகூட நா பயப்பட மாட்டேன். ஆனா, ஒன்ன பாக்கற போதுமட்டும் என் குடல் நடுங்குது. என் மங்கா இல்லா நீ? நான் சொல்றதெ கேளு. ஒங்கப்பன் மேலே இருக்கிற தெய்வத்தை ஓட்டிடறேன், நீ என்னைக் கண்ணாலம் பண்ணிக்கோ. அந்தக் காளி என்ன சொல்றா தெரியுமா? நா ஒன்னைத்தவிர வேறு ஒருத்தரையும் கண்ணாலம் செய்துக்கக் கூடாதாம். நேத்து அந்தச் செங்கான்மேலே தெய்வம் வந்தபோது கூட அந்த மாரியம்மன் அதான் சொன்னாள்" என்று முருகன் சொன்னதும் மங்கம்மா பொறுமையை யிழந்து அவன் கன்னத்தில் ஓங்கி ஒரு அடி அடித்துவிட்டு ஒதுங்கி களத்து மேட்டை நோக்கி வேகமாக நடந்தாள். எதனாலேயோ அவளுடைய கண்களில் கண்ணீர் பலபலவென்று கொட்டியது.

தவடையைத் தடவிக் கொடுத்துக்கொண்டே, "மங்கா, உனக்கு அவ்வளவு கர்வங்கூடாது. இன்னையிலேருந்து ஒங்கப்பனே அந்த மாரியம்மன் அந்த ருத்ரகாளி ஆடாத ஆட்டம் ஆட்டி வைத்து, படாத பாடு படுத்தி வைக்கா விட்டால் நான் முருகனல்ல" என்று சொல்லி விட்டு விர்ரென்று ஊரை நோக்கி நடந்தான்.

முருகன் கடைசியாகச் சொன்னது மங்கம்மாவின் மனதைத் தாக்கியது. முருகன் வார்த்தைகளில் அவளுக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும், தன் தந்தையைப் பற்றி கடூரமான வார்த்தைகளைக் கேட்டபொழுது அவளுக்கு ஒரு வித அச்ச முண்டாயிற்று.

மங்கம்மா களத்து மேட்டையடைந்த பொழுது அவளுடைய தகப்பன் சித்திரை துணியால் நன்றாகப் போர்வையிட்டுக்கொண்டு அம்பாரத்தின் பக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்தான். அம்பாரத்தின் ஒரு பகுதியில் நெல் களவாடப்பட்டிருந்தது. இதைப் பார்த்ததும் மங்கம்மாவின் மனது திக்கென்றது. அவள் பரக்கப் பரக்க ஓடித் தகப்பனைத் தட்டி எழுப்பி, அம்பாரம் களவாடப்

பட்டிருப்பதை அவனுக்குக் காட்டினுள்.

சித்திரைக்கு மனத்தாக்குதல் உண்டாயிற்று. "ஐயோ, ஆண்ட கோவிச்சுக்குவாரே, நா யென்னத்தைப் பண்றது?" என்று அவன் அங்கலாய்த்துக் கொண்டான்.

"நெல்லே நாம்ப எடுத்துக்குனு போயிட்டோமுன்னு அல்லவா ஆண்ட சொல்லுவாரு" என்ருள் மங்கம்மாள்.

"மங்கா, நான் இங்கே படுக்கக் கூடாதுன்னு சொல்றியே; படுக்கும் போதே இவ்வளவு அக்குரமம் நடந்துச்சினு, நான் இல்லாத போனு அம்பாரம் அவ்வளவும் போயிடாதா?" என்ருன்.

மங்கம்மா கைகளேப் பின்னுக்குக் கட்டிக் கொண்டு ஏதோ யோசித்தவாறே களத்து மேட்டில் மேலும் கீழுமாக நடந்தாள்.

"எல்லாம் அந்தப் பூசாரியின் வேலேயாயிருக்கும்" என்ருள் மங்கம்மா சற்று நிதானத்துடன்.

"சே, அப்படி சொல்லாதே மங்கா, அவன் எனக்குத் துரோகம் செய்ய மாட்டான்."

"அப்பா, இங்கே அவன் கடைசியாக எப்போ வந்தான்?"

"நேத்து சாயந்திர வந்தான்"

மங்கம்மா மறுபடியும் யோசனேயிலாழ்ந்தாள்.

"அப்பா, நேத்து அவன் இங்கு வந்தபோது என்ன நடந்தது?"

"உனக்கேனம்மா அதெல்லாம்?"

"வேலேயாத்தான் கேக்கிறேன். அப்பா, எனக்கொரு சந்தேகம்.



உங்களேத் தெய்வமும் 'பிடிச்சாட்டல, பிசாசும் ஆட்டல. எல்லாம் அந்த முருகன் பிசாசுதான் உங்களே ஆட்டி வைக்கிருன். அப்பா உங்களுக்கு இப்படி புத்தி மாறிடும்னு நான் கனவிலேகூட நினேக்கில்லே."

"என்னம்மா பேத்தறே?"

தமிழ்நாடு ஆ... 19997 சென்னை-600 008

"நான் ஒன்னும் பேத்தலே. அந்தக்குடுவை இங்கு எதுக்கு வந்தது?" என்று கேட்டுக்கொண்டே அம்பாரத்தின் பக்கத்திலிருந்த கள் குடுவையைச் சுட்டிக் காண்பித்தாள்.

சித்திரை வெட்க மடைந்து முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

"நீங்க எவ்வளவு காலமா குடிக்க கத்துக்குனிங்க? அதான் எப்போ பாத்தாலும் வயல் காட்டிலேயே விழுந்து கிடக்கிறீங்க. சதா குடிச்சிட்டு கும்மாளம் போட்டு மனம்போன படியெல்லாம் ஆடுறீங்க. நீங்க குடிச்சுட்டு ஆடறதைத்தான் முருகன் உங்க மேலே தெய்வம் வந்ததாகச் சொல்லி தம்பட்டம் அடிக்கிருன்.

அப்பா அவன்தானே உங்களுக்குக் குடிக்கச் சொல்லிக் கொடுத்தவன்?'' என்று மங்கம்மா கேட்டாள். அவளுடைய குரலில் கோபம், அவமானம், ஏமாற்றம் எல்லாம் மாறி மாறி தொனித்தது.

சித்திரையால் அங்கு நிற்க முடியவில்லை. அவமானம் அவனைப் பிடுங்கித் தின்றது. அவன் 'ஆமாம்' என்று சொல்லிவிட்டு கொம்பை எடுத்துக் கொண்டு அந்த ஊர் மிராசுதார் வீட்டை நோக்கி நடந்தான். அவன் மறையும் வரையில் மங்கம்மா அவனையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு, 'குடிக்கிறவனுக்குக் கஞ்சி வேறு வேணுமா?' என்று சொல்லிக் கொண்டு வந்த கஞ்சியை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போய் விட்டாள்.

மிராசுதார் முன்னிலையில் சித்திரை கூக்குரலிட்டான். அவன் முறைப்பாட்டை மிராசுதார் காதில் ஏற்றுக் கொள்ளவில்லை. களவுபோன நெல்லின் கிரயத்தையாவது அல்லது அதற்கீடான நெல்லையாவது கொடுக்க வேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். முருகன் வீட்டைச் சோதனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். அதற்கும் மிராசுதார் இடம் கொடுக்கவில்லை.

விஷயத்தை மங்கம்மாவிடம் சித்திரை தெரிவித்தான். மங்கம்மா அவனுக்கு ஏதேதோ சில யோசனைகள் சொன்னாள்.

மறு நாள். வெள்ளிக்கிழமை, மாலை வேளை. விளக்கு வைத்தாகி விட்டது. கதிரவன் மேற்குக் கடலில் மூழ்கினான். குறி மேடையில் நடக்கப்போகும் சம்பவங்களைப் பார்க்க ஆவலோடு நட்சத்திரங்கள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. பூரண சந்திரன் குறி மேடையை நோக்கி ஜனங்கள் கூட்டங்கூட்டமாகச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களில் சித்திரையும் மங்கம்மாளின் தோளைப் பிடித்துக் கொண்டு மெதுவாக நடந்து வந்தான்.

தூரத்தில் வரும்பொழுதே இவர்களை முருகன் பார்த்து விட்டான். நிலவொளியில் மங்கம்மாவின் முகம் பிரகாசமடைந்திருந்தது. அவள் முகத்தில் என்றுமில்லாத சோபை வெளிப்பட்டது. அவள் முகத்தின் எழிலைக்கண்டு முருகன் புளகாங்கிதமடைந்தான். மங்கம்மாவின் முகம் அவ்வளவு வசீகரிக்கும் சக்தியையுடையதாயிருந்தது. மங்கம்மாவைக் கண்டு அற்பனை அந்தப் பூசாரி மனதைப் பறி கொடுத்ததில் ஆச்சரியமில்லை.

சிலம்பம், உடுக்கையடித்து காளி வர்ணனைகளையெல்லாம் பாடினான் முருகன். முதலில் முருகனுடைய சிஷ்யன் ஒருவன் மீது தெய்வம் வந்தது. அவன் தன் தலை மயிரை விரித்து விட்டுக் கொண்டு ஆடினான்.

"அம்மா தாயே, நீ யாரம்மா?" என்று ராகத்துடன் சிலம்பு உடுக்கைகள் முழங்கக் கேட்டான் முருகன்.

"நான்தாண்டா கொம்பேறியம்மன்"

"அம்மா, தாயே, உனக்கு வந்த கோபமென்ன?"

"அடே, அந்த முருகனுக்கு இன்னும் ஏண்டா கண்ணாலம் பண்ணலே?"

"வர வைகாசி மாதம் பண்ணிக்கிறேன் தாயே, கோவிச்சுக்காதே மாரியம்மா!"

"அடே, இந்த வைகாசி மாதமே அந்த சித்திரை பெண் மங்கம்மாவை நீ கண்ணுலம் பண்ணிக்கணும் தெரியுதா? உம்? என்னடா கேக்கறேன் ஊமையா போயிட்டியே?"

"அவன் பெண்ணைக் கொடுக்க மாட்டானே தாயே!"

"அடே, அவன் கொடுக்காவிட்டா நான் அவனைச் சும்மாவிட மாட்டேண்டா. அவனைக் கொள்ளை நோயிலே கொண்டு போவேண்டா......ம்ம்?..."

இதைக்கேட்டுக்கொண்டிருந்த சித்திரைக்கு வந்த கோபத்தையும் அடக்கிக்கொண்டு அவனருகே வந்து, "காளியாத்தா, நெல்லு களவு போச்சே, அதை யாரு எடுத்தா சொல்லேன்" என்று கேட்டான்.

"அதைத்திருடன் கொண்டு போனுண்டா"

'தாயே, அந்தத் திருடன் யாரு?,

"அடே, அவன் அகப்பட மாட்டாண்டா!"

இதற்குள் முருகன்மீது தெய்வம் வந்துவிட்டது.

"அடே யாருடா நெல்லைப் பத்திக் கேக்கறவன்?" என்ருன் முருகன் ஆடிக்கொண்டே.

"தாயே நீ யார்?" என்று கேட்டான் சித்திரை.

"நான் தாண்டா சேமாத்தம்மன் ... உன் நெல்லு அகப்படாதுடா..."

"தாயே, அதை முருகன் எடுத்துப் போனுனை கொஞ்சம் சொல்லேன்."

"அடே, நீ முருகனை என்னென்னு நினைச்சே, உனக்குக் கொள்ளை நோய் வரும்" என்று சொன்னதுதான் சித்தரை அவனை ஓங்கி ஒரு குத்து விட்டான். முருகன் அடியை வாங்கிக் கொண்டு, "அடே, யாருடா, ஒன்னை என்ன செய்யறேன் பார்! இந்த ஊரையே எரித்துச் சாம்பலாக்கிறேன்" என்று கோரமாகக் கத்தினுன். சித்திரை மேலும் மேலும் அவனை அடித்தான். அங்கு கூடின ஜனங்களெல்லாம் அவனைத் தடுத்தார்கள். "ஐயோ, தெய்வம் வந்திருக்கே, அடிக்காதே...பிறகு தெய்வத்துக்குக் கோபம் வந்துவிடும்" என்று பலவிதமாகக் கூக்குரலிட்டார்கள். ஆனுல், அன்று சித்திரை தன் வைராக்கியத்தை நிறைவேற்றுவதாகத் தீர்மானித்து விட்டான். அடிமேல் அடி அடித்தான். முருகனுல் அடிகளைத் தாங்க முடியவில்லை. "ஐயோ, அப்பா" என்று சொல்லிக் கொண்டு மேலும் மேலும் ஆடினுன். அவ்வளவு ஜனங்கள் முன்னிலையில் தன்னை அவமானப் படுத்துவான் என்று முருகன் எதிர்பார்க்க வில்லை. அவன் பொறுமையுடன் உதைகளையெல்லாம் வாங்கிக் கொண்டான். அவனுடைய பொறுமையைக் காணக் காண சித்திரைக்குக் கோபம் அதிகரித்தது. தன் முயற்சியில் தோல்வியடைந்தால் மங்கம்மா என்ன நினைப்பாள் என்று ஒரு நிமிஷம் எண்ணினுன். உடனே தன் முழுப் பலத்தோடு முருகனை இழுத்துச் சென்று ஒரு கம்பத்தில் கட்டினுன்.

அவன் வீட்டின் மூலையொன்றில் அம்பாரத்தில் திருடி வந்த நெல் இருந்தது. அதை வெளியே கொண்டு வந்து கொட்டும்படி

அங்கிருந்தவர்களுக்குக் கட்டளையிட்டான். மந்திரத்தால் கட்டுண்டவர்கள் போல் ஜனங்கள் அவனுடைய உத்திரவுக் கிணங்கினார்கள். ஆவேசம் வந்தவன்போல் சித்திரை உள்ளே சென்று அம்மனுடைய விக்கிரகத்தைப் பெயர்த்து வந்து வெளியில் வைத்துவிட்டு அருகில் எரிந்து கொண்டிருந்த அகல் விளக்கை எடுத்து வீட்டிற்குத் தீயிட்டான். வீடு நன்றாகப் பற்றிக் கொண்டு எரிந்தது. இன்னேரமாக ஆடிக் கொண்டிருந்த முருகன் மெதுவாகக் கண்ணைத் திறந்து பார்த்தான். வீடு எரிந்து கொண்டிருப்பதைப் பார்த்து கூக்குரலிட்டான். சித்திரை அவனருகே வந்து அவனை மேலும் துன்புறுத்தினான். அவன் தன் போலி வியாபாரத்தைப் பற்றி ஒப்புக் கொண்டான். சித்திரை அவனிடம் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து அந்தக் கணமே ஊரை விட்டு துரத்திவிட்டான். வீடு பற்றிக் கொண்டு பக்கத்து ஒன்றிரண்டு வீடுகள் மீதும் நெருப்பு பரவியது. நெருப்பை உடனே அணைப்பதில் எல்லோரும் ஈடு பட்டார்கள். நெருப்பு ஒருவாறு அணைக்கப் பட்டது.

மறு நாள் காலையில் சித்திரை மங்கம்மாவுடன் பேசிக்கொண்டிருந்தான். அவளிடம் அம்மன் விக்கிரகமும், முருகன் சேர்த்து வைத்திருந்த பணமும் இருந்தது. தான் ஒரு கோயில் கட்டி அதில் அந்த அம்மனுடைய விக்கிரகத்தை அமைக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்த பொழுது அவன் வீட்டிற்கு முன் இரண்டு போலீஸ் சேவகர்கள் வந்து நின்றார்கள்.

வீட்டிற்கு நெருப்பு வைத்து ஊரில் அமைதியைக் கலைத்ததற்காகச் சித்திரைக்கு மூன்று வருஷங் கடுங்காவல் கிடைத்தது.

கோவிலைக் கட்டும் பணியை மங்கம்மா ஏற்றுக் கொண்டு அதை ஆறு மாதங்களில் கட்டி முடித்து அன்று கும்பாபிஷேகம் செய்தாள். அன்று அந்த ஊர் ஜனங்களெல்லாம் அந்த வைபவத்தில் பங்கெடுத்துக் கொண்டார்கள். சித்திரை சிறையிலிருந்ததால் இந்தக் குதூகலக் கொண்டாட்டத்தில் அவனால் கலந்து கொள்ள முடியவில்லை. மங்கம்மா கோயில் கட்டியது அவனுக்குத் தெரியாது. ஆனால் அவன் தினமும் மனதில் கோயில் கட்டுவதுபோல் கற்பனை செய்து ரொம்ப சந்தோஷப் பட்டுக் கொள்ளுவான்.

சிந்தனைச் சித்திரம்:

இயற்கை அன்னை

[ஜயா]

பூமிக்கடியில் உயர்ந்து வளைந்த கூரையை யுடைய ஒரு பெரிய கோவிலுக்குள் நான் இருப்பதாகக் கனவு கண்டேன். கோவில் கண்கூசும்படி பிரகாசித்தது.

கோவில் நடுவில் பச்சை வர்ணத் தாலாகிய புடவையை உடுத்தியுள்ள கம்பீரமான மாதரசி யொருத்தி உட்கார்ந்திருந்தாள். கன்னத்தில் கைகளை வைத்து ஊன்றியபடி ஆழ்ந்த யோசனையி லிருந்தாள்

உடனே, அவள் இயற்கை யன்னைதான் என்று நான் தீர்மானித்துக் கொண்டேன். பயம் கலந்த பக்தி என் உள்ளத்தினூடே பரவி தேகத்தைச் சிலிர்க்கச் செய்தது.

நான் அவளை நெருங்கி பக்தியுடன் வணங்கி, "தாயே! எதைப்பற்றி யோசனை? மனிதனின் வருங்காலத்தைப் பற்றியா? அல்லது சந்தோஷத்தின் சிகரத்தை அவன் அடைவது எப்படி என்பது பற்றியா?" என்று கேட்டேன்.

தன்னுடைய கரிய பயங்கரமான விழிகளை அவள் மெதுவாக என் பக்கம் திருப்பினாள். அவள் உதடுகள் அசைந்தன. இரும்பை சம்மட்டி கொண்டு அடிப்பது போன்ற கணீரென்ற குரல் எழுந்தது.

"பூச்சிகளின் கால் தசை நார்களுக்கு இன்னும் அதிக சக்தி கொடுப்பது எப்படி என்பது பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். எதிரிகளிடமிருந்து அவைகள் இன்னும் இலகுவில் தப்பித்துக் கொள்ள வேண்டாமா? பாய்ச்சலும் குதிப்பதும் முன்போல் சரியாக இல்லை......அதைத்தான் சரிப்படுத்தப் பார்க்கிறேன்.'

"என்ன? இதைப்பற்றியா யோசனை செய்து கொண்டிருக்கிறீர்கள்? அப்படியானால் நாங்கள் — மனிதர்கள் — தங்களுடைய அபிமானக் குழந்தைகளல்லவா?" என்று நான் கேட்டேன். என் வாய் குழறியது.

அவள் சிறிது கோபங் கொண்டாள். "சகல ஜீவராசிகளும் என் குழந்தைகள் தான். அவை எல்லாவற்றையும் பற்றி எனக்கு ஒரே விதமான கவலைதான். எல்லாவற்றையும் நான் ஒரேவிதமாகத் தான் அழிக்கிறேன்."

"அப்படியானால் நியாயம்...... நீதி...கட்டுப்பாடு..." நான் மறுபடியும் குழறினேன்.

"அவையெல்லாம் மனிதர்கள் ஏற்படுத்திய வார்த்தைகள். எனக்கு நியாயமும் தெரியாது, அநியாயமும் தெரியாது. நியாயம் என்னைக் கட்டுப் படுத்தாது... நீதி யென்பது என்ன?...நான் உனக்கு உயிரைக் கொடுத்தேன். நான் அதை எடுத்து மற்றவர்களுக்கு...புழுக்களுக்கோ, மனிதர்களுக்கோ — கொடுக்கிறேன்...... அதைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை.....நீ உன் விஷயத்தைக் கவனி. போ என்னைத் தொந்தரவு செய்யாதே" என்று கணீரென்ற குரலில் பதில் அளித்தாள்.

நான் பதில் சொல்லியிருப்பேன். ஆனால், பூமாதேவி ஏதோ முனகினாள். நடுங்கினாள். நான் விழித்துக் கொண்டேன்.

[ரஷ்ய மூலத்திலிருந்து மொழி பெயர்த்தது]

நகைச் சுவை :

ஒரே ஒரு நாள்...

எஸ். வி. எஸ்.

நான் எத்தனையோ கலியாணங்களுக்குப் போயிருக்கிறேன். ஆனால், இந்தக் கலியாணத்தைப் போல், அதாவது என் நண்பன் கலியாணத்தைப்போல் வேடிக்கையாக இருந்ததைப் பார்த்ததே இல்லை. எத்தனை வகை நண்பர்கள்! எத்தனை பாஷைகள். சாப்பாட்டுக்கு, இலைமுன் உட்கார்ந்தால் ஒருவன் 'ஸாகு' என்கிறான். ஒருவன் 'வேண்டாம்' என்கிறான். மற்றொருவன் 'காவல' என்கிறான். 'நஹிங் நஹிங்' என்று இன்னொருவன் சொல்லுகிறான். இப்படி ஒரே வேடிக்கையும் குழப்பமும்—என் நண்பன் சாமியின் கலியாணத்தில்.

* * *

பலநாள், ஏன் நான்கு வருஷங்கள் கழித்து சென்னைக்குப் போனேன். என் நண்பர்களையெல்லாம் பார்க்க ரொம்ப ஆசையோடு போனேன். என் நண்பர்களில் எல்லாம், சிறந்த மனதுக்கினிய நண்பனான சாமியைத்தான் முதலில் பார்க்கப் போனேன். அவன் இருக்கவில்லை. இரண்டாவது தடவை அவன் வீட்டுக்குப் போனேன். அவன் இருக்கவில்லை. பத்துத் தடவை போனேன். பத்து தடவையும் அவன் வீட்டில் இருக்கவில்லை. எனக்கு அதிசயமாயிருந்தது!

சாமிநாதன் எனக்கு எவ்வளவோ நெருங்கிய நண்பன். அவனும் நானும் ஒரே பள்ளிக்கூடத்தில் படித்தோம். ஒரே காலேஜில் வாசித்தோம். இப்படி நாங்கள் எப்பொழும், இணைபிரியாது படித்தும் பழகியும் வந்தோம்.

ஏதோ துரதிருஷ்ட வசத்தால் எனக்கு அவனைவிட்டுப் பிரிய நேர்ந்தது. எங்களுக்கு அந்தப் பிரிவு தாங்கக் கூடியதாக இருக்கவில்லை. அப்போது அவன் என்னைப் பார்த்து, "மணி, கடிதங்களிலாவது ஒருவரையொருவர் சந்திப்போம்; தவறாமல் வாரத்துக்கு ஒரு கடிதம் போடுவாயா?'' என்று கேட்டான். இன்னும் அந்தக் காட்சி என் மனசில் அப்படியே பதிந்து கிடக்கிறது. நினைத்துக் கொண்டால் உள்ளம் பொருமுகிறது.

இப்படிச் சொன்னவன் முதலில் கொஞ்ச நாள்தான் கடிதம் எழுதிக் கொண்டிருந்தான். பிறகு நிறுத்திவிட்டான். நான் எத்தனையோ தடவை எழுதினேன். பதிலில்லை. இப்போது நேரில் அவனைப் பார்க்க வந்தும் அவன் கிடைக்கவில்லை, கிடைக்க மாட்டேன் என்கிறான்.!

ஊரார் எல்லாம், அவனைப் பற்றி என்னிடம் தூற்றினார்கள் அக்கிரமம் செய்து விட்டான்.. தலைகால் தெரியாமல் நடக்கிறான் என்றெல்லாம் சொன்னார்கள். அவன் பெற்றோர்களும், அவனைப் பற்றி என்னிடம் வைதார்களேயொழிய விஷயம் சொல்லவில்லை. சரி என்று நேரே எங்கள் ஹிந்தி உபாத்தியாயரிடம் போனேன்.

அவர் எங்களுக்கு வாத்தியார் மட்டுமல்ல — சினேகிதருங்கூடத் தான். எங்கள் உணர்ச்சிகளில் அவரும் பங்கு எடுத்துக் கொள்வார். சிறு பயல்கள் என்று காக்கைப் பார்வை பார்க்க மாட்

டார். எங்கள் உணர்ச்சிகளோடு ஒத்துப்போவார். அதனால் அவரைப்பார்க்கப் போனேன். அவர் சொன்ன விஷயத்தை என் பாஷையிலேயே சொல்லுகிறேன்.

* * *

நான் ஊரைவிட்டுப் போவதற்கும் சென்னையில் ஹிந்தி ஆர்வம் ஏற்படுவதற்கும் சரியாக இருந்திருக்கிறது.

மைலாப்பூரில் பிரபல வக்கீல் ஒருவர். ஆனால், அவருக்கு வயதான காரணத்தால் பிராக்டிஸ் எல்லாம் நிறுத்தி விட்டார். அவருக்கு ஒரு மகள். அவளை நன்றுகப் படிக்க வைத்தார். பீ. ஏவோ வேறு ஏதோ சர்வகலாசாலைப் பரிக்ஷையிலோ தேறி பட்டம் பெற்றிருந்தாள். பட்டம் பெற்று என்ன பயன். படிப்பு முடிவதற்குள் பெண்ணுக்கு வயதாகி விட்டது. வயதான பெண்களுக்கு நம் சமூகத்தில் கல்யாணம் ஆகி விடுமா? மேலும் படித்த பெண் வேண்டாம் என்றே சமூகம் வெறுத்து விட்டது. எவ்வளவோ சிரமப் பட்டுத் தேடிப் பார்த்தார். பெண்ணுக்கு வரன் அகப்படவில்லை. கவலை அவரைப் பிடுங்கித் தின்றது.

இதன் நடுவில் இந்த ஹிந்தி முழக்கம். தம் மகளுக்கும் ஹிந்தி சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தார். சபாக்காரர்கள் "உங்களுக்குத் தனியாக ஒருவாத்தியார் அனுப்ப முடியாது. உங்கள் வீட்டில் ஒரு வகுப்பு நடத்த அனுமதி தந்தால் ஒரு வாத்தியாரை அனுப்புகிறோம்'' என்றார்கள். அதற்கு வக்கீல் சம்மதித்தார். அவர் வீட்டில் இருபது பேர் வரைக்கும் கூடினார்கள். நம் சாமியை சபாக்காரர்கள் ஆசிரியராக நியமித்தார்கள்.

முதல் இரண்டு மூன்று மாதங்கள் வகுப்பு வெகு தீவிரமாகத் தான் நடந்தது. வாத்தியார் சொல்லிக் கொடுப்பதும் பிள்ளைகள் படிப்பதும் அடாடா, வெகு மும்மரந்தான். மூன்று மாதம் ஆயிற்றோ இல்லையோ பிள்ளைகளில் சிலருக்கு ஹிந்தி ஒன்றும் அவ்வளவு எளிதாக வரக்கூடியதாகத் தோன்றவில்லை. இன்னும் சில பிள்ளைகள் பள்ளிக்கூடப் பாடம் ஹிந்தி இரண்டையுங் கட்டி அழ முடியாமல் விட்டுவிட்டார்கள். இன்னும் சிலர் ஆபீஸ் வேலை அதிகமாக இருந்ததால் சொல்லாமல் கொள்ளாமல் நின்றுவிட்டார்கள். இப்படியெல்லாம் விட்டவர்கள் போக மிஞ்சியது அந்த வீட்டுப் பெண்தான்.

பெண் உத்சாகமாகத்தான் படித்தாள். படிக்கிறவர்கள் படித்தால், ஆசிரியருக்கு என்ன கஷ்டம்?

ஆனால் இருவருக்கும் மிகுந்த உத்சாகத்துக்கு அடிப்படையான காரணம் தெரிந்துதான் இருந்ததோ அல்லது தெரியவில்லையோ நமக்குத் தெரியாது. திடீர் என்று அவனுக்கு ஒரு நாள் பாடம் சொல்லிக் கொடுக்கப்போக முடியவில்லை. அவ்வளவு கடுஞ்சுரம் வந்துவிட்டது. தனக்கு ஜுரம் கண்ட செய்தியையும் தன் மாணவிக்குச் சொல்லி யனுப்பவில்லை

கமலா ஒருநாள், இரண்டு நாள் மூன்று நாள் பொறுத்துப் பார்த்தாள். அதற்குமேல் அவளால் பொறுக்க முடியவில்லை. சாமியைப்பற்றி விசாரித்தாள். விசாரித்து அவனுக்குச் ஜுரங்கண்டிருக்கிற செய்தியும் தெரிந்து கொண்டாள். பிறகு அவள் மனம் நிலை கொள்ளவில்லை. அவன்

தேக நிலைமையைப் பற்றி ஒவ்வொரு நாளும் விசாரித்து வந்தாள். நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிக் கொண்டு வருகிறது என்று தெரிந்ததும், அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. தூக்கம் பிடிக்கவில்லை. ஒரு நடை சென்று அவனைப் படுத்த படுக்கையிலேயே பார்த்து விட்டு வந்து விடுவோமா என்றுகூட எண்ணினாள். ஆனால் துணிவு ஏற்படவில்லை.

திடீர் என்று சாமிக்கு ஜன்னிக் கோளாறு வேறு ஏற்பட்டு விட்டது. அவன் பிழைப்பது அரிது என்றுகூட அவன் பெற்றோர் தீர்மானித்து விட்டார்கள். ஜன்னிக் கோளாறில் அவன் என்ன வெல்லாமோ உளறிக் கொண்டிருந்தான். டாக்டர்களுக்கோ, பெற்றோர்களுக்கோ, அந்தக் கடுங் காய்ச்சலில் அவன் மனத்திரையில் என்ன காட்சிகள் வருகின்றன என்பது ஒன்றும் தெரியவில்லை. மேலும் அவர்கள் அதை அறிய சிரத்தையும் காட்டவில்லை.

ஜன்னிக் கோளாறு என்ற தகவல் கமலாவுக்கும் எட்டி விட்டது கட்டாயம் போய்ப் பார்ப்பது என்று தீர்மானித்து விட்டாள். சாமி வீட்டுக்குச் சென்றாள். படுக்கை அறை வாயிலில் நின்று எட்டிப் பார்த்தாள். அப்போது ஜன்னியில் திணறிக்கொண்டு 'கமல்' என்று மெல்லிய குரலில் சொன்னான். இது அவள் காதில் விழுந்தது. இனி அவளுக்கு எல்லை கடந்த தைரியம் வந்து விட்டது. 'இந்தக் காய்ச்சலிலும், தன்னை நினைக்கிறானே' என்று நினைத்ததில் அவள் உள்ளத்தில் எழுந்த ஆனந்த அலைகள் சொல்லி முடியாது. கண்களில் முத்து முத்தாக நீர் துளித்தது.

உடனே, உள்ளே சென்று அவன் கையைப் பற்றிக் கொண்டாள். அவனுக்கு உணர்ச்சி வந்தது. முகத்தில் நல்ல களை தட்டியது. கண் திறந்து ஒரு தடவை அவளைப் பார்த்தான். அவ்வளவுதான்.

அன்றிலிருந்து கமலா கூடவே இருந்து, அவனுக்கு மருந்து கொடுப்பதும், படுக்கை தட்டிப் போடுவதும், ஆகாரம் கொடுப்பதும், ஐஸ் வைப்பதும் சகலமும் பார்த்து வந்தாள். இப்படிக் கமலாவே பணிவிடை செய்ததால் கை கண்ட பலன் ஏற்பட்டது. சீக்கிரத்தில் அவன் குணமடைந்தான். எல்லாருக்கும் கமலாவிடம் ஒரு நன்றியே யுண்டாயிற்று. சாமிக்கும், அவளுக்கும் ஏற்பட்ட நட்பு உறுதிப்பட்டது.

ஒரு நாள் சாமி, கமலாவைத்தான் கலியாணம் செய்து கொள்ளப்போவதாகத் தன் பெற்றோரிடம் சொன்னான். அவ்வளவுதான். அவன் மண்டை உருள ஆரம்பித்தது. அவனுடன் கமலாவையும் சேர்த்து வெளு வெளு என்று வெளுக்க ஆரம்பித்தார்கள். "கமலா, என்ன ஜாதிக்காரியோ, என்ன பாஷைக் காரியோ, என்ன பழக்க வழக்கங்களோ, எவளோ, ஒரு சிறுக்கி அவள். அவளைக் கலியாணம் பண்ணிக் கொள்கிறதாம் சாமி. அழகு தான்!"

ஆனால் சாமிக்கு எப்படியும் மனந்தளரவில்லை. ஒரே பிடிவாதமாக இருந்தான். இதைக் கண்டு உற்றாரும் ஊராரும் அவனைத் திட்ட ஆரம்பித்தார்கள். அதனலேயே அவன் யாருடனும் பேசுவதில்லை. பழகுவதில்லை. ஏன் அவனுக்கு ஊரிலேயே இருக்கப்

பிடிக்கவில்லை. எங்கேயாவது கண் காணாத தேசத்துக்குப் போய்விடலாமா என்று தோன்றும்.

இவ்விதமாக, என் ஆசிரியர் அவன் வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதல்களைச் சொல்லிக்கொண்டு வந்தவர் “இந்த விஷயங்களையெல்லாம் கேட்டு நீயும் அவனை வெறுப்பாயோ என்று பயந்துதான் உன்னை இப்போது நேரில் பார்க்கச்சங்கோசப் படுவான் என்று நினைக்கிறேன்'' என்று சொல்லி முடித்தார்.

“என்னை, அவன் அப்படி நினைக்கக் காரணமில்லையே. அவன் செய்தது ஒன்றும் தப்பாக நினைக்க காரணமில்லையே. என்னை ஊரா ரோடு எப்படிச் சேர்த்து எண்ணி விட்டான்?'' என்றேன்.

“அதெல்லாம், எனக்குத் தெரியாது. ஆனால், அவன் வாழ்க்கையில் ரொம்பவும் ஏமாற்றமடைந்து விட்டான். இது சம்பந்தமாகத் தன்னை வெறுக்க மாட்டார்கள் என்று நினைத்திருந்த நண்பர்கள் எல்லாரும், அவனை முகாலோபனங்கூடச் செய்வதில்லை என்று தீர்மானித்து விட்டார்கள். அதனால் உன்னிடமிருந்தும் இதே மரியாதைதான் அவன் எதிர்பார்ப்பான்'' என்றார். பிறகு அவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு வந்தேன்.

* * *

சாமி, கடையில் வெற்றிலை வாங்கிக் கொண்டிருந்தான். அந்த வழியாகச் சென்று கொண்டிருந்த நான் அவனைப் பார்த்துவிட்டேன். சரி, எப்படியாவது அவனைச் சந்தித்து விடுவது என்று கடை வாசலின் ஒரு மறைவில் நின்று கொண்டேன். அவன் வெளியில் வந்தான். நான் 'நமஸ்காரம்' என்று சொல்லிக்கொண்டு அவன் முன் நின்றேன். அவன் திடுக்கிட்டு விட்டான். 'எப்பொழுது வந்தாய்' என்று கேட்டான்.

'ஏன் கேட்கிறாய். உனக்குத் தான் தெரிந்திருக்குமே' என்றேன்.

'ஆமா, தெரியும்.'

'பின் ஏன் ஒளிந்து திரிகிறாய்!'

'உன்னை எதற்காகப் பார்ப்பது? உன்னிடமும் இரண்டு வசவுகள் வாங்கிக் கொள்ளவா?''

'என்னைப் பற்றி உன்னால் அப்படித்தான் நினைக்க முடிந்தது போலிருக்கிறது?'

'என்ன சொல்லுகிறாய் மணி?'

“உன்னை நான் எதற்காக அப்பா திட்டவேண்டும். நீ என்ன பாவம் செய்து விட்டாய். நீ என்ன பிழை செய்து விட்டாய். ஆமாம் உலகமே நீ ஏதோ பெரிய பாதகம் செய்து விட்டதாகத்தான் பேசுகிறது. ஆனால் எனக்கு அப்படிக் கொஞ்சங்கூடத் தோன்ற வில்லையே. நீ செய்தது சரி என்றே படுகிறது என்ன செய்யட்டும்?''

'மணியா பேசுகிறது! எனக்கு ஒன்றுமே நம்பமுடியவில்லையே. உலகத்தில் எனக்கு நண்பர்களே கிடையாது என்று நினைத்தேன். என்னுடன் அனுதாபப் படுபவர்களே இல்லை என்று நினைத்தேன். இந்த முட்டாள் உலகத்தைப் பார்க்கையில், எங்கேயாவதுகுளம் குட்டையில் விழுந்து விடுவோமா என்றுகூட நினைத்திருக்கிறேன். ஆனால் உன்னைப் பார்த்தவுடன் இப்போது, நான் எவ்வளவு பாக்கியசாலி' என்று எண்ணுகிறேன் என்று சொல்லிக்கொண்டே என்

கையை பிடித்து அழுத்தினான். அவன் உள்ளத்தில்ப் பொங்கும் வேகந்தான் அது.

“ஆமாம், உலகத்தின் முட்டாள்த் தனத்தோடு கடவுளே போராடுகிறார் பயனின்றி— என்று மேனாட்டுக் கவிஞர் ஒருவர் சொன்னார். அப்படி நீயும், உலகத்தை எதிர்த்து நிற்கிறாயே, இதைப் பார்க்கையில் உன் வீரத்தைக் கையெடுத்து வணங்கவே தோன்றுகிறது’’ என்றேன்.

என் வார்த்தைகளைக் கேட்ட அவன் அப்படியே பிரமித்து நின்றான். ஒரு விநாடி கழித்து ‘உனக்குத்தான் என்மேல் எவ்வளவு அன்பு’ என்றான்.

இதைக்காட்டிலும், வேறு புகழுரை எனக்கு என்ன வேண்டும்?

உண்மையான ஆனந்தம் இதுதான் என்று கண்டு கொள்ளும் போது உள்ளம் எப்படிப் பூரிக்கிறது தெரியுமா? அடடா! மனம் நிறைந்த இரண்டு நண்பர்கள் சந்திக்கையில்? ஆகா! கடந்த காலத்தின் இன்ப—துன்பந் தோய்ந்த அற்புத நாட்கள் என்ன? கோலாகலமாக வாழ்க்கைப் பூஞ்சோலையிலே அங்குமிங்கும் ஓடி அழகாக மலர் பறித்ததென்ன? தேனென இனிக்கும் தீங்கவிதைகள் சுவைத்துக் கூத்தாடியதென்ன? நினைக்க நினைக்க ஒரே பரவசந்தான். இன்பந்தான்.

இருவரும் அப்படியே தங்களை மறந்து கனவு உலகில் சற்று சஞ்சரித்தார்கள்.

அந்தச் சுந்தரக் கனவுகளை வார்த்தையில் வர்ணிக்க முடியுமா, என்ன?

கடைசியாக நாங்கள் பிரியும் சந்தர்ப்பம் வந்தது. “அப்பா, உலகம் என்ன வேண்டுமானாலும் தூற்றட்டும் நீ விமரிசையாகக் கலியாணத்தை நடத்து. உன் பழைய நண்பர்கள் எல்லாரு வெறுத்தாலும், கல்யாண அழைப்பை அனுப்பு’ என்றேன்.

‘நீ இருக்கையில் எனக்கு என்ன பயம்’ என்றான்.

* * *

முதலில் வெறுப்பாகப் பேசிய நண்பர்கள் எல்லாம், உத்சாகமாகக் கலந்து கொண்டு கலியாணத்தைச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். நடுவிலிருந்த ஒரு குறும்புப் பிரியர் ‘பெண்ணுக்கும் பிள்ளைக்கும் பேச்சு வார்த்தை எந்த பாஷையில்?’ என்று கேட்டார்.

‘ஏன் நம் பொது பாஷையில்தான்’ என்றேன்.

மாப்பிள்ளையும் பெண்ணும் உள்பட எல்லாரும் சிரித்தார்கள்.



சிலப்பதிகாரம்

சர்-ஆர்.கே. சண்முகம் செட்டியார்

6. கடலாடு காதை

(தொடர்ச்சி)

(111—174)

(111—133) இந்திரவிழாவின், முடிவு நாள் பௌர்ணமி. நகர மக்கள் எல்லோரும் அன்று நீராடிக் கழிக்கக் கடற்கரைக்குக் கும்பல் கும்பலாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கடல் விளையாட்டைக்காண, மாதவியும் கோவலனோடு புறப்படுகிறாள். காலம், நாலாஞ் சாமம். வானத்தில் வெள்ளி வெளிச்சம் தோன்றி, இருளை ஓட்டிற்று. பொய்கைகளில் உள்ள தாமரைப் பூக்களில் உறங்கும் பறவைகள் இசை பாடுகின்றன. கோழி கூவுகின்றது. இந்தக் குளிர்ந்த நேரத்தில் கோவலன் மாலையையும் அணிகளையும் அணிந்து, கோவேறு கழுதையின் மீது ஏறவும், மான் போன்ற கண்ணையுடைய மாதவி ஒரு பல்லக்கிலேறி, இருவரும் கடற்கரையை நோக்கிப் புறப்படுகின்றார்கள்.

இவர்கள் போகும் நகர வீதிகளின் காட்சிகளைப் பார்ப்போம். கொழுத்த செல்வத்தின் குவியல் நிறைந்த மாளிகைகள், தெருவின் இரண்டு பக்கங்களிலும் காண்கின்றன. இம்மாளிகைகள், திருமகளின் இருப்பிடமோ என்று தோன்றுகின்றன. கடைத் தெருவில், சேடிப் பெண்கள் மைவிளக்கையும், மாணிக்க விளக்கையும் எடுத்து, அருகம் புல்லையும் நெற்பயிரையும் தெளித்துக் கொண்டு, தாம் அணிந்திருக்கும் அணிகள் ஒலிக்கும் படியாகத் திரிகின்றனர். மருவூர்ப் பாக்கத்திலுள்ள வீதிகளில், கப்பலில் வந்து இறங்கிய செல்வங்கள் நிறைந்திருக்கின்றன. வெண் மணல் நிரம்பிய கடலோரத்தில், அயல் நாட்டார், தத்தம் நாடுகளிலிருந்து கொண்டு வந்த பல் சரக்குகளும் குவிந்து கிடக்கின்றன. இவற்றையெல்லாம் தாண்டிக் கடற்கரையை அடைந்தார்கள்.

கோவலனும் மாதவியும் நக்ர வீதி வழியாகக் கடற் கரைக்குப் போகுதல்

உருகெழு மூதூர் உவவுத்தலை வந்தெனப்,
பெருநீர் போகும் இரியல் மாக்களொடு,
மடல் அவிழ் கானல் கடல் விளையாட்டுக்
காண்டல் விருப்பொடு வேண்டினளாகிப்,
பொய்கைத் தாமரைப் புள்வாய் புலம்ப,
வைகறை யாமம் வாரணம் காட்ட,
வெள்ளி விளக்கம் நள்ளி இருள் கடியத்,
தார் அணி மார்பனொடு பேர் அணி அணிந்து,
வான வண்கையன் அத்திரி ஏற,
மான் அமர் நோக்கியும் வையம் ஏறிக்;
கோடிபல அடுக்கிய கொழு நிதிக் குப்பை
மாடமலி மறுகின் பீடிகைத் தெருவின்,
மலர் அணி விளக்கத்து மணி விளக்கு எடுத்து, ஆங்கு
அலர் கொடி அறுகும் நெல்லும் வீசி,
மங்கலத் தாசியர், தம்கலன் ஒலிப்ப
இருபுடை மருங்கினும் திரிவனர் பெயரும்,
திருமகள் இருக்கை செவ்வனம் கழிந்து;
மகர வாரி வளந்தந்து, ஓங்கிய
நகர வீதி நடுவண் போகிக்;
கலம்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்
வேலை வாலுகத்து விரிதிரைப் பரப்பின்,
கூலமறுகின் கொடியெடுத்து நுவலும்,
மாலைச்சேரி மருங்கு சென்று எய்தி;

பதவுரை

[உரு கெழு மூதூர் — பகைவர்களுக்கு அச்சத்தை உண்டாக்கும் மிகப் பழைய அவ்வூரில்; உவவுத் தலை வந்தென — பௌர்ணமி நாள் வந்தது என்று; பெருநீர் போகும் — கடலாடப் போகின்ற; இரியல் மாக்களோடு — விரைந்து செல்லும் மக்களொடு; மடல் அவிழ் கானல் — தாழை முதலிய பூக்கள் மடல்அவிழ்ந்த கடற்கரைச் சோலை யையுடைய; கடல் விளையாட்டு — கடலில் விளையாடுதலை; காண்டல் விருப்பொடு வேண்டினளாகி — காண்பதை மிகுந்த ஆசையுடன் விரும்பினவளாகி;

பொய்கைத் தாமரை — பொய்கைகளிலுள்ள தாமரைப் பூக்களில் இருக்கும்; புள்வாய் புலம்ப — பறவைகள் வாய்விட்டுக் கூவ; வைகறையாமம் — வைகறையாகிய நாலாஞ் சாமத்தை; வாரணம் காட்ட — கோழி கூவிக் காட்ட; வெள்ளி விளக்கம் நள்ளிருள் கடிய — வானத்தில் வெள்ளி வெளிச்சம் செறிந்த இருளைப் போக்க; தார் அணி மார்பனொடு — மாலை யணிந்த மார்பினையுடைய கோவலனோடு; பேர் அணி அணிந்து — பெரிய அணிகலங்களை அணிந்து; வான வண்கையன் — மழை போன்ற இகைவளமுள்ள கையை யுடைய கோவலன்; அத்தரி ஏற — கோவேறு கழுதை மீது ஏறிச்

கொள்ள ; மான் அமர் நோக்கியும் — மான் போன்ற விருப்பந்தரும் பார்வையை யுடைய மாதவியும் ; வையம் ஏறி — பல்லக்கில் ஏறி ;

கோடி பல அடுக்கிய — பல கோடியாக அடுக்கி எண்ணப்படுகிற; கொழுநிதிக் குப்பை — கொழுத்த செல்வத்தின் குவியலையுடைய ; மாடம் மலி மறுகின் — சரக்கு மாளிகைகள் நிறைந்த தெருவினை யுடைய ; பீடிகைத் தெருவின் — கடைத்தெருவில் ; மலர் அணி — பூக் கள் அணிந்த ; விளக்கத்து — மை விளக்கோடு ; மணி விளக்கு — மாணிக்கத்தாலான விளக்கையும் ; எடுத்து — ஏற்றி ; ஆங்கு — அவ் விடத்தில் ; அலர் கொடி அறுகும் — படர்ந்த கொடிகளையுடைய அறு கம் புல்லும் ; நெல்லும் வீசி — நெற் பயிரையும் தெளித்து ; மங்கலத் தாசியர் — அங்ஙனம் சிறப்புச் செய்த மங்கலத்தையுடைய தாசியர் ; தம் கலன் ஒலிப்ப — தாம் அணிந்த அணிகலங்கள் ஒலிக்கும் படியாக ; இரு புடை மருங்கினும் — தெருவின் இரண்டு பக்கத்திலும் ; திரிவ னர் பெயரும் — திரிந்து செல்லுகின்ற ; திருமகள் இருக்கை — திரு மகள் இருக்கும் இடமாகிய அத்தெருவினை ; செவ்வனம் கழிந்து — முழுவதும் கடந்து சென்று ; மகர வாரி — பெரிய மீன்கள் நிறைந்த கடலின் ; வளம் தந்து ஓங்கிய — செல்வமெல்லாம் கொண்டுவரப் பட்டு அதனால் உயர்ச்சியடைந்த ; நகர வீதி நடுவன் போகி — நகரத் துத் தெருவின் நடுவில் போய் ;

கலம் தரு திருவின் — கப்பல்கள் தந்த செல்வத்தையுடைய ; புலம் பெயர் மாக்கள் — தமது தேசத்தை விட்டு வந்த பிறநாட்டு மக்கள் ; வேலை வாலுகத்து — கடல் கொண்டு வந்து குவித்த வெள்ளிய மணலை யுடைய ; விரி திரைப் பரப்பின் — விரியும் அலைகள் வீசுகின்ற கரை யிடத்தில் அமைந்த ; கூல மறுகில் — பலவகைச் சரக்குகளையுடைய தெருக்களில் ; கொடி எடுத்து நுவலும் — அவ்வச் சரக்குகளுக்கும் தனித்தனியே கொடி எடுத்து அறிவிக்கின்ற ; மாலைச் சேரி மருங்கு சென்று எய்தி — வரிசையாக இருக்கும் பிறநாட்டவர் இருப்பிடத் தைப் போய் அடைந்து ;

புலம் — தேயம் ; வாலுகம் — வெண்மணல் ; கூலம் — பல சரக்கு ; அதற்குக் கொடி எடுத்தலாவது, இங்கு இன்னின்ன சரக்கு உள, அவற்றின் நயம் இவை என்று அறிவிக்கும் கொடிகளை எடுத்தல்.]

★

(134—151) கடற்கரை யோரத்தில் காணும் காட்சிகளைப் பார்ப் போம். இன்னும் சரியாகப் பொழுது விடியவில்லை. விழாக்காலமான படியால், இரவு முழுதும் விளக்குகள் ஒரு பக்கம் எரிந்து கொண்டி ருக்கின்றன. பொன் வேலை செய்கின்ற தட்டார்கள், விளக்குகளுக்கு முன், தங்கள் அருமையான வேலையைச் செய்து கொண்டிருக்கிறார் கள். கப்பல்களுக்குத் துறைமுகத்தின் வழி காட்டும் பெரிய விளக்கு கள், ஒளி வீசிக் கொண்டிருக்கின்றன. மீன்களைக் கவர்ச்சி செய்வ தற்கு வலையர்கள் கட்டுமரங்களில் விளக்கை ஏற்றி வைத்திருக்கிறார் கள். அயல் நாடுகளிலிருந்து வந்த வியாபாரிகளுடைய கடைகளில், விடி விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. பண்டசாலைகளைக்

காப்பவர்கள், விளக்குகளைக் கையில் ஏந்திக் காவல் செய்கின்றனர் எங்கு பார்த்தாலும் ஒரே வெளிச்சமும், மக்களின் கூட்டமும் கண்ணுக்குத் தெரிகின்றன. கடலோரத்திலுள்ள வெள்ளிய மணல், விளக்குகளின் ஒளியை அதிகப் படுத்திக் காண்பிக்கின்றது. மணல் நிரம்பிய கடற்கரையாயிருந்த போதிலும், அங்கேயுள்ள தாழம்பூச் சோலைகளைப் பார்த்தால், வளப்பம் மிகுந்த மருத நிலம் போல் தோன்றுகின்றது. இவ்வளவு அழகு நிறைந்த கடற்கரையில், மாதவி தன் தோழிகளுடனும், கோவலனுடனும் வந்து சேர்ந்தாள்.

விடியற்காலையில் கடற்கரைக் காட்சி

வண்ணமுஞ் சாந்தும் மலரும் சுண்ணமும்
பண்ணியப் பகுதியும் பகர்வோர் விளக்கமும்
செய்வினைக் கம்மியர் கைவினை விளக்கமும்
காழியர் மோதகத்து ஊழுறு விளக்கமும்
கூவியர் கார் அகல் குடக்கால் விளக்கமும்
கொடை நவில் மகடூஉக் கடைகெழு விளக்கமும்
இடையிடை மீன்விலை பகர்வோர் விளக்கமும்
இலங்கு நீர் வரைப்பின் கலங்கரை விளக்கமும்
விலங்குவலைப் பரதவர் மீன்திமில் விளக்கமும்
மொழிபெயர் தேத்தோர் ஒழியா விளக்கமும்
கழிபெரும் பண்டம் காவலர் விளக்கமும்
எண்ணு வரம்பு அறியா இயைந்து ஒருங்கு ஈண்டி,
இடிக்கலப்பு அன்ன ஈர் அயிர் மருங்கின்
கடிப்பகை காணும் காட்சிய தாகிய,
விரைமலர்த் தாமரை வீங்குநீர் பரப்பின்,
மருத வேலியின் மாண்புறத் தோன்றும்
கைதைவேலி நெய்தலங் கானல்,
பொய்தல் ஆயமொடு பூங்கொடி பொருந்தி ;

பதவுரை

[வண்ணமும் — எழுதப்படுகின்ற குழம்பும்; சாந்தும் — சந்தனமும்; மலரும் — பூக்களும்; சுண்ணமும் — வாசனைப் பொடிகளும்; பண்ணியப் பகுதியும் — பலவகைப் பண்டங்களும்; (ஆகிய இவற்றை) பகர்வோர் விளக்கமும் — விற்பவர்கள் வைத்திருக்கும் விளக்குகளும்;

செய்வினைக் கம்மியர் — வேலைப்பாடமைய அணிகளைச் செய்யும் தட்டார்; கைவினை விளக்கமும் — வேலை செய்யுமிடத்திலுள்ள விளக்குகளும்;

காழியர் — பிட்டு வாணிகர்; மோதகத்து — பிட்டு விற்பதற்கு எடுத்த; ஊழ் உறு விளக்கமும் — வரிசை வரிசையாக வைத்த விளக்குகளும்;

கூவியர் — அப்ப வாணிகர்களின்; கார் அகல் — கரிய அகல் விளக்குகளாகிய; குடக்கால் விளக்கமும் — குடத்தண்டில் வைக்கப் பட்ட விளக்குகளும்;

நொடை நவில் — பண்டங்களை விலை கூறுகின்ற; மகடூஉ — மிலேச்ச மகளிர்; கடைகெழு விளக்கமும் — தம் கடைகளில் வைத்த விளக்குகளும்;

இடையிடை மீன் விலை பகர்வோர் விளக்கமும் — ஆங்காங்கு, மீன்களை விலை கூறுவோர் எடுத்த விளக்குகளும்;

இலங்குநீர் வரைப்பின் — விளங்குகின்ற நீரையுடைய கடற்கரையில்; கலம் கரை விளக்கமும் — கப்பல்களுக்கு வழிகாட்டியழைக்கும் விளக்குகளும்;

விலங்கு வலைப் பரதவர் — குறுக்காக வலை வீசி மீன் பிடிக்கும் வலையர்களின்; மீன் திமில் விளக்கமும் — மீன் பிடிக்கும் கட்டு மரங்களில் வைத்த விளக்குகளும்;

மொழி பெயர் தேத்தோர் ஒழியா விளக்கமும் — மொழி வேறுபட்ட தேயத்தினின்றும் வந்த அயல் நாட்டார்; ஒழியா விளக்கமும்— பொழுது விடியுமளவும் ஏற்றி வைத்த விளக்குகளும்;

கழிபெரும் பண்டம் — மிக்க பெரும் பண்டங்களையுடைய; காவலர் விளக்கமும் — காவலாளிகள் எடுத்த பண்டசாலை விளக்குகளும்;

எண்ணுவரம்பு அறியா — எண்ணி எல்லை அறியப் படாதனவாய்; இயைந்து ஒருங்கு இண்டி — சேர்ந்து ஒன்றாகத் திரண்டு; இடிக் கலப்பு அன்ன — மாவைக் கலந்தாற் போன்ற; இர் அயிர் மருங்கின் — மிகவும் நுண்ணிய மணலின் மேல்; கடிப்பகை காணும் — வெண்சிறுகடுகை இட்டால், அதுவும் தெரியக்கூடிய; காட்சியது ஆகிய — அத்துணை விளக்கம் உடையதாயிருந்த; விரை மலர்த்தாமரை — மணம் வீசும் தாமரை மலர்ந்த; வீங்கு நீர்ப் பரப்பின் — மிக்க நீர்ப் பரப்பினையுடைய; மருத வேலியின் — மருத நிலத்தைப் போல; மாண்புறத் தோன்றும் — சிறப்பு மிகத் தோன்றுகின்ற; கைதை வேலி — தாழம் பூவை வேலியாகவுடைய; நெய்தல் அம் கானல் — அழகிய கடற்கரைச் சோலையில்; பொய்தல் ஆயமொடு பூங்கொடி பொருந்தி — விளையாடுகின்ற தன் தோழிமாரோடு பூங்கொடியைப் போன்ற மாதவி,தானும் சென்று சேர்ந்து;

ஊழ் — வரிசை, முறை, மா — இடிக்கப்பட்ட மாவின் தூள்; அயிர் — நுண்ணிய மணல்; கடி — பேய்; [பேயை வேப்பிலையால், ஓட்டுவது வழக்கு] வெண் சிறு கடுகும் பயன் படும்; இரண்டிற்கும் 'கடிப்பகை" என்பது பெயர்; அதாவது, பேய்க்குப் பகை.

★

(152—165) பலவகைப் பண்டங்களை விற்பவர் கூட்டம் ஒரு புறமிருக்கத், துறைமுகத்திலோ, பண்டங்களும் செல்வங்களும் நிறைந்த கப்பல்கள், நிறைந்திருக்கின்றன. புகார் நகரிலுள்ள எல்லா மக்களும் விளையாட்டுக் கோலத்துடன் எங்கு பார்த்தாலும் திரிந்து கொண்

டிருக்கிறார்கள். அரச மக்களும், அவருடைய ஏவலாளரும், வாணிப இளைஞர்களும், ஆடல் பாடல் செய்யும் மகளிரும் திரள் திரளாகக் கூடியிருக்கின்றனர். இதற்கென்று அமைக்கப்பட்ட மேடைகளில், ஆடல் பாடல்கள் நடக்கின்றன. காவிரியாற்றில் புதுநீர் வரும்போது, சோழன் கரிகாலன் கொண்டாடும் விழாவானது, எவ்வளவு சிறப்பாக இருக்குமோ, அவ்வளவு சிறப்பான காட்சி, கடற்கரை ஓரத்தில் விளங்குகின்றது. கடலின் ஓசையும் மக்கள் விளையாட்டின் ஓசையும் ஒன்றாகச் சேர்ந்து, ஒரே ஓசையாக ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

கடற்கரையில் நகர மக்கள் ஆடல் பாடலுடன் கழித்திருப்பது

நிரை நிரை எடுத்த புரைதீர் காட்சிய
மலைப்பல் தாரமும், கடற்பல் தாரமும்
வளந்தலை மயங்கிய துளங்குகல இருக்கை;
அரசிளங் குமரரும், உரிமைச் சுற்றமும்,
பரத குமரரும், பல்வேறாயமும்,
ஆடுகள மகளிரும், பாடுகள மகளிரும்,
தோடுகொள் மருங்கின் சூழ்தரல் எழினியும்
விண்பொரு பெரும் புகழ்க் கரிகால் வளவன்
தண்பதம் கொள்ளும் தலைநாள் போல,
வேறு வேறு கோலத்து வேறு வேறு கம்பலை,
சாறு அயர் களத்து வீறு பெறத் தோன்றிக்,
கடற்கரை மெலிக்கும் காவிரிப் பேரி யாற்று,
இடம்கெட ஈண்டிய நால்வகை வருணத்து,
அடங்காக் கம்பலை உடங்கு இயைந்து ஒலிப்ப,

பதவுரை

[நிரை நிரை எடுத்த — வரிசை வரிசையாகக் குவிக்கப்பட்ட; புரைதீர் காட்சிய — குற்றமற்ற காட்சியையுடையனவாகிய; மலைப் பல் தாரமும் — மலையில் விளைந்த பலவகைப் பண்டங்களும்; கடற் பல் தாரமும் — கடலில் விளைந்த பல வகைப் பண்டங்களும்; வளம் தலை மயங்கிய — செல்வங்கள் ஒன்றோடொன்று கலந்து கிடக்கின்ற; துளங்கு கல இருக்கை — அசைகின்ற பல கப்பல்கள் தங்கிய துறை முகத்தில்;

அரசிளங் குமரரும் — இளையவரான அரசமக்களும்; உரிமைச் சுற்றமும் — அவருடைய ஏவலாளரும்; பரத குமரரும் — இளையவரான வாணிப மாக்களும்; பல்வேறு ஆயமும் — பலவேறு வகைப் பட்ட ஆயமகளிரும்; ஆடுகள மகளிரும் பாடுகள மகளிரும் — ஆடல் பாடல் செய்து அங்கங்கிருக்கும் மகளிரும்; தோடு கொள் மருங்கில் — திரளாகவுள்ள இடத்திலெல்லாம்; சூழ்தரல் எழினியும் — சூழ்ந்து கிடக்கின்ற திரைச்சீலைகளும் (என்றது, ஆடல் பாடல் நடக்கு மிடங்களில் உள்ள அழகிய திரைகளை)

விண் பொரு பெரும் புகழ்க் கரிகால் வளவன் — வானத்தையளாவிய மிக்க புகழையுடைய கரிகாற் சோழன்; தண்பதம் கொள்ளும் — புதுப் புனல் விழாக் கொண்டாடுகின்ற; தலைநாள் போல — அம்முதல் நாளைப் போல; வேறு கோலத்து — வேறு வேறான கோலங்களோடு; வேறு வேறு கம்பலை — வேறு வேறான ஓசைகளும்; சாறு அயர் களத்து — திருவிழாக் கொண்டாடிய அவ்விடத்தில்; வீறு பெறத் தோன்றி — சிறப்பு மிகும்படியாகத் தோன்றி; கடற்கரை மெலிக்கும் — அலையை மோதி மோதிக் கடற்கரையை இடித்து மெலிய வைக்கின்ற; காவிரிப் பேர் யாற்று — காவிரியாகிய பெரிய ஆற்றினுடைய; இடம் கெட — இடமெல்லாம் மறையும்படியாக; (என்றது, ஆற்றில் சிறிதும் வெற்றிடம் இல்லாமற் போகும்படி) இண்டிய — திரண்டு வந்து கூடிய: நால்வகை வருணத்து — நால் வகைச் சாதியினரின்; அடங்காக் கம்பலை — அடங்காத ஓசைகளையெல்லாம்; உடங்கு இயைந்து ஒலிப்ப — ஒன்றாகச் சேர்ந்து ஒரே ஓசையாக ஒலிக்க;

சாறு — விழா; அயர்தல் — கொண்டாடுதல்; உடங்கு — ஒன்றாக;]

* * *

(*166—174*) நகர மக்களின் கூட்டம் நிறைந்த கடற்கரையில் உள்ள தாழம்பூச் சோலை ஒன்றில், ஒரு புன்னை மரத்து நிழலில், புது மணல் பரப்பி, அழகான திரைகட்டி, அதன் நடுவே ஒரு வெண்கால் அமளியில், மாதவி கோவலனுடன் இருக்கின்றாள். தன் தோழி வசந்த மாலையின் கையில் உள்ள யாழை, மாதவி தன் கையில் வாங்கி இசையை எழுப்புகிறாள்.

கடலோரத்திலுள்ள சோலையில் மாதவி கோவலனுடன் இன்புற்றிருத்தல்

கடல்புலவு கடிந்த மடல்பூந் தாழைச்
சிறை செய் வேலி அகவயின், ஆங்கு, ஓர்
புன்னை நீழல் புதுமணல் பரப்பில்,
ஓவிய எழினி சூழ உடன் போக்கி,
விதானித்துப் படுத்த வெண்கால் அமளி மிசை,
வருந்துபு நின்ற வசந்த மாலைகைத்
திருந்து கோல் நல்லியாழ், செவ்வனம் வாங்கிக்,
கோவலன் தன்னொடும் கொள்கையில் இருந்தனள்,
மாமலர் நெடுங்கண் மாதவி தானென்.

பதவுரை

[கடல் புலவு கடிந்த — கடலினது புலால் நாற்றத்தைப் போக்கிய; மடல் பூம் தாழை — மணம் மிகுந்த மடல் அவிழுகின்ற பூவையுடைய தாழையினால்; சிறை செய் வேலி — இயற்கையாகவே வேலி போலத் தடுக்கப்பட்டிருந்த; அகவயின் ஆங்கு — அந்த உட்பட்ட நடுவிடத்

தில்; ஓர் புன்னை நீழல் — ஒரு புன்னை மரத்து நிழலில்; புது மணல் பரப்பில் — புதிய மணலாகிய அப் பரப்பிடத்தில்; ஓவிய எழினி — சித்திரம் எழுதப்பட்ட திரைகளை; சூழ உடன் போக்கி — சுற்றிலும் நன்கு கட்டி; விதானித்து — மேலே மேற்கட்டியும் எடுத்து; படுத்த வெண்கால் அமளி மிசை — விரித்த வெள்ளிய காலையுடைய படுக்கை மீது; வருந்துபு நின்ற — வழி வந்த வருத்தத்தால் வருந்தி நின்ற; வசந்த மாலை கை — வசந்த மாலையின் கையில் உள்ள; திருந்து கோல் நல்யாழ் — செம்மையான நரம்பினையுடைய நல்ல யாழை; செவ்வனம் வாங்கி — மகிழ்ச்சியான உள்ளத்தோடும் வாங்கி; கோவலன் தன்னொடும் — கோவலனோடும்; கொள்கையின் இருந்தனள் — மகிழ்ச்சியுடன் இருந்தாள்; மா மலர் நெடுங்கண் — அழகிய மலர் போன்ற நீண்ட கண்ணையுடைய; மாதவிதான்—;

முன்னர், கடற்கரையை வந்து அடைந்ததும், பூங்கொடி போன்ற மகளிரோடு விளையாட்டை விரும்பிச் சென்றவள், இப்பொழுது கோவலனோடு வந்து கூடினாள்.

கடலாடு காதை முற்றுப் பெற்றது.

புத்தன்

அன்று பிறந்தனையே — அன்பு
அமுதம் கொணர்ந்தனையே
இன்று பிறவாயோ — புண்ய
இந்திய நாட்டினிலே!

ஆட்டின் துயர் கண்டு — பலிக்கு
ஆளாக நின்றனையே
கூட்டின் கிளி போலே — அடிமை
கொண்டு துடிக்கின்றோம்!

மலரின் வாட்டம் கண்டு — அரச
வாழ்வைத் துறந்தனையே
உலகம் உடையுதடா — கண்ணீர்
உததி பொங்குதடா!

பஞ்சமும் நோயுமென — மரணம்
பாரை அழிக்குதடா!
அஞ்சேலென வருவாய் — புத்தா
அருண ஒளியெனவே

"கம்பதாசன்"

★ புத்தக ஆராய்ச்சி

★

[பாரதஜோதி: ஆசிரியர்: எஸ். ஆர். வெங்கடேஸ்வரன். காரியாலயம்: திருச்சி ரோடு, கோயமுத்தூர். விலை அணா 3]

நமக்கு வந்திருக்கும் "பாரத ஜோதி"யில் பாரத நாட்டின் தூய்மையையும், புனிதத்தையும் பிரகாசப் படுத்தும் அருமையான கட்டுரைகளும், நல்ல சிறுகதைகளும் நிறைந்திருக்கின்றன. "இந்த இருபதாம் நூற்றுண்டில் பக்தியை ஞாபகப் படுத்திக் கொள்வதே அரிதாக இருக்கிறது" என்று தமிழ்ப் புலவர்கள் நிறைந்த ஒரு சபையிலே டி. கே. சி அவர்கள் சுவையுடன் சொன்னுர்கள். பாரத ஜோதி ஒரு நல்ல பணியை மேற் கொண்டிருக்கிறது.

'பாரத ஜோதி' ஆசிரியர் எஸ். ஆர். வெங்கடேஸ்வரன் தமிழ்ப் பண்பைக் கலைக் கண்களுடன் நோக்குகிருர். வாழ்க்கைக்கும் கலைக்கும் உள்ள சம்பந்தத்தை நன்குணர்ந்திருக்கிருர். அந்த முறையில் இந்த மாத சஞ்சிகை அரிய காரியத்தைச் செய்து வருகிறது. பல ரசனையையும் பூர்த்தி செய்யும் பொருட்டு 'கண் கவர்' சித்திரங்களுடன் பிரகாசமாக வெளி வரும் 'பாரத ஜோதி'க்குத் தக்க ஆதரவு கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

●

[பாப்பா: (மாத வெளியீடு) ஆசிரியர்: ராம தியாகராஜன். ராயவரம், புதுக் கோட்டை. விலை அணா 4]

பாப்பாப் பத்திரிகையின் அட்டையை ஒரு அழகிய சின்னப் "பாப்பா" அலங்கரிக்கிறது. குழந்தைக்குத் துணையாக வீற்றிருக்கிருர், பிள்ளையார். 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்' என்பது பழமொழி. அந்த பழமொழியை மெய்ப்பிக்க வேண்டுமானுல் பாப்பாவை அமோகமாக ஆதரிக்க வேண்டும். குழந்தைகளுக்கான அருமையான விஷயங்கள் பூத்துக் கிடக்கின்றன. இந்த மலர்களை அள்ளிச் சூடிக் கொள்ள வேணும் பெற்ருேர். இப்பேர்ப்பட்ட அற்புதமான சந்தர்ப்பம் பெற்ருேர்களுக்குக் கிடைப்பது அருமையிலும் அருமைதான்.

●

[புனிதபூமி: பதிப்பாசிரியர்: கே. எம். ஹனீப். வெளியிடுவோர்: பி. ஏ. எம். கமால். கமாலியா பப்ளிஷிங் ஹவுஸ், கோயமுத்தூர், விலை அணா 4]

'புனிதபூமி' பெயருக் கேற்ற விதம், புனிதமான கொள்கைகளைத் தாங்கி வெளிவரும் என்று ஆசிரியர்கள் சொல்கிருர்கள். அவர்கள் சொல்லுகிறபடியே, சீர்திருத்த வாதிகள், சிந்தனையாளர்கள், கவிஞர்கள் எல்லோரும் சிறப்பாக எழுதியிருக்கிருர்கள். முஸ்லிம் சமூகம் பெருமைப்பட வேண்டிய மலர் இது. பொதுவில், எல்லோரும் பாராட்டுவதற்கு ஏற்ப விஷயங்கள் அமைந்திருக்கின்றன.

கலைக்கோயில்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

சும்மா மசூதி பிறந்து, "அல்லாஹு அக்பர்" என்ற நாதம் வருகிறது. ஆனால் அதில் பழைய ராஜ கம்பீரமில்லை. திவானிகாஸ் ஹாலில் சலவைக்கல் பளிச்சிடுகிறது. 'இதுவே புவி—விண்' என்றபார்ஸி எழுத்துக்கள் காண்கின்றன. ஆனால் அங்கே விண்ணுமில்லை — மண்ணுமில்லை. ஹுமாயூன் கல்லறைகள் இருக்கின்றன. இவற்றைச் சூழ்ந்து புது டில்லி சர்க்கார் கட்டிடங்களால் நிரம்பி யிருக்கிறது. பழைய தில்லி சந்தும் பொந்தும் சாக்கடை நாற்றமுமாக நான்கு லக்ஷம் ஜீவர்களைக் கொண்டு எப்படியோ உயிர்க்கிறது. குளிர் காற்றும் சுழல் காற்றும் மண்ணை வாரித் தூற்றுகின்றன. வேனிலில் சூரியன் 118 டிகிரி சுட்டுப் பொசுக்குவான்; நான்கு மாதங்களில் 32 டிகிரி குளிர் நடுக்கும்.

இப்படிப் பட்ட தில்லியில் நமது தமிழர் ஏராளமாயிருக்கிறார்கள். பாலும் ரொட்டியும் சாப்பிடும் வட நாட்டாரிடையே சாதமும் குழம்பும் சாப்பிட்டுக் கொண்டு எத்தனையோ தமிழர் இங்கே அலுவல் பார்க்கிறார்கள். இவர்களுக்கென்று இங்கே தமிழ் பள்ளிக்கூடம் வைத்திருக்கிறார்கள். பாட்டுக்கூடமும் நடக்கிறது.

தில்லியின் குளிர் வெப்ப நிலையையும், ஊர்க் கோணல்களையும், கால வர்த்தமானங்களையும் இரண்டு மணி நேரமாவது மறக்கச் செய்வது ஆனந்த கான சபைதான். இதில் புகுந்தால் நாம் தமிழர், நாம் இந்தியர். நமது கலைகள் இன்னும் சுதந்தரமாகவே இருக்கின்றன. நமக்கென்ன குறை என்ற உணர்ச்சி பிறக்கும். இங்கே அடிக்கடி தென்னாட்டு வித்வான்கள் வந்து கச்சேரி செய்வார்கள். வட நாட்டு வித்வான்களும் விநிகை நடத்துவார்கள். தெற்கும் வடக்கும் சேர்ந்த சில பேர்வழிகளும் இரட்டை விருந்தளிப்பார்கள்.

அவர்களில் முன்னே நிற்பவர் மதன் பாபு. மதன் பாபு என்றால் வங்காளியோ குஜராத்தியோ

என்று சிந்திக்க வேண்டாம். அவர் அசல் தஞ்சாவூர்க்காரர். மதன கோபாலர் வடக்கே வந்து மதன் பாபு ஆய்விட்டார். ஆள் நல்ல முண்டா; பெரிய படிப்பாளி; தில்லியில் ரூ. 500 சம்பளத்தில் உத்தியோகம் பார்த்தவர்; மனித வியல்புகளைப் பதம் பார்த்த பக்காப் பேர்வழி. அவர் ஆங்கிலம் தமிழ், ஹிந்தி ஆகிய மூன்றிலும் இனிமையாகப் பேசுவார். சமஸ்கிருதமும் வரும்; சங்கீதத்தில் புலி; பாடுவார்; பாட்டை நுகர்வார். குரலும் செவியும் உண்டு. அவருக்குப் பரத நாட்டியத்தில் அபார மோகம். சம்பளம் கிம்பளம் இரண்டுடன் பிதுரார்ஜிதமும் சேர்ந்து அவர் ஐந்து லக்ஷத்திற்கு அதிகாரியானார். அவரே மேற் சொன்ன ஆனந்தகான சபையை நடத்தி வந்தார். நல்ல வித்வான்களையும் நடிகரையும் கொண்டு கச்சேரிகள் வைத்தார்.

பணம், படிப்பு, கலை—மூன்றும் நிரம்ப உண்டு— என்றாலும் மனிதன் திருப்தி யடைவதில்லை; ஏதோ ஒரு குறை விஷப்புழு மாதிரி அவனைத் துளைக்கிறது. குஷிப்பேர்வழியான மதன் பாபுவுக்கும் பலமான மனக்குறையுண்டு. பெரிய குறை மனைவியின் போக்குத்தான். அந்த அம்மாளுக்கு ஒரு வகைப் பித்தம்; யாரைக் கண்டாலும் எரிந்து விழுவதும் பொறாமைப் படுவதும் சண்டை போடுவதும் வழக்கம். இடையிடையே நரம்புத் தளர்வாலும் மூளைக் கோளாறாலும் பேய் பிடித்தது போல் அட்டகாசம் செய்வாள். தான் பிறந்த சீரும், இந்தக் கணவனிடம் படும் கஷ்டமும் ஒரு பிலாக்கணமாகப் பாடி ஊர் சிரிக்க வைப்பாள். நினைத்தால் தஞ்சாவூர்— அழைத்தால் பிகுபிலுக்கு— எனம்மா இப்படிப் பண்ணுகிறாய் என்றால் அன்று முழுதும் வாய் மாரி தான்— ஓயாது. உற்சாக புருஷரான மதன் பாபுக்கு இந்த மனைவி பிடிக்கவே யில்லை. சென்ற ஆண்டு அவளைப் பேசாமல் ஊரில் கொண்டு விட்டு வெண்ணாற்றில் ஒரு முழுக்குப் போட்டு எள்ளு நீர் இறைத்து வந்து விட்டார்.

அன்று முதல் அவர் வாய் வேதாந்தம் பொழியத் தொடங்கினார். விவேக சூடாமணியைத் தலை கீழே ஒப்பிப்பார். கீதை முழுதும் பாடம். ஆனால் இந்த வேதாந்தத்திற் கப்பால், மனதில் ஏதோ கவலை இருந்தது. அவர் வாழ்க்கையில் மீண்டும் மீண்டும் குறைதான். வெளிப்படையாகச் சொல்லி வருகிறேன். நண்பர் மதன் பாபு கோவித்துக் கொண்டாலும் சரி. தனக்கேற்ற கலை மோகங் கொண்ட பெண்ணை அவர் மனம் தேடிக் கொண்டிருந்தது.

அச்சமயமே பிஜிலி தனது நடன கோஷ்டியுடன் தில்லிக்கு வந்தாள். வட நாட்டார் அவளை வரவேற்று நாட்டியம் பார்த்தார்கள். அந்த நாட்டியக் கச்சேரிக்கு மதன் பாபும் போனார். பிஜிலி ஜிலுஜிலு வென்று அரங்கில் கால் வைத்ததுமே மதன் பாபுவை மதனன் பிடித்துக் கொண்டான்.

அவள் பாட்டும் நடனமும் இவரைக் கொண்டன. மறுநாள் அவர் தாமே சென்று காத்திருந்து பிஜிலியைப் பார்த்தார். தனது இசைத் திறமையைக் காட்டினார். இருவரும் தஞ்சாவூரார் என்பதை அறிந்து மகிழ்ந்தனர். மறு நாளே ஆனந்த கான சபையில் பிஜிலி நடனத்திற்கு மதன் ஏற்பாடு செய்து விளம்பரப் படுத்தினார். கூட்டம் தாராளம். அவர் தாமே

இரண்டு மணி நேரம் கச்சேரி. அதற்குள் இருவர் மனமும் பின்னிக் கொண்டன.

கச்சேரி முடிந்தது. பிஜிலி முன்பே தன் ஆள் மூலம் மதன் பாபுவின் நிலையை அறிந்திருந்தாள். பழைய தில்லியும் புது தில்லியும் சந்திக்கும் இடத்தில் மதன் பாபுவின் மாளிகையிருந்தது. மோட்டார் அதில் நுழைந்ததும் பிஜிலியும் மதனரும் இறங்கி மின்சார வெளிச்சத்தில் அங்கிருந்த மலர்ப் பொதும்பரைச் சுற்றிப் பார்த்தனர். இருவர் மனமும் உல்லாசமாயிருந்தது. மதனன் பிஜிலியை மேல் மாடிக்கு அழைத்துச் சென்றார். இருவரும் அலங்காரப் பளிங்கறையிற் புகுந்து சோபாவில் அமர்ந்தனர். உடனே மதனன் கிராமபோனில் ஒரு தட்டை வைத்தான். பாட்டு நடக்கும் போதே தட்டுகளில் உணவுகளும் கனிகளும் வந்தன. இருவரும் அருந்தினர். பிறகு சம்பாஷணை தான்.

மதன்: பிஜிலி, இன்று தங்கள் நடனம் அரம்பை ஊர்வசி தோற்றுப் போகும்படி இருந்தது.

பிஜிலி: தங்கள் பாட்டும் கர்ணாமிர்தமாயிருந்தது. கலையில் தங்களுக்கிருக்கும் மோகத்தைப் பாராட்டுகிறேன்.

மதன்: என் கலைக் கனவுகள் பல; என் ஆசைக்கு இந்த ஆனந்த கான சபை போதாது. பெரிய உல்லாச மாளிகை கட்டி நாளெல்லாம் ஆடல் பாடலுடன் வாழ்வை ஆனந்தமாகக் கழிக்க வேண்டும்.

பி: ஆவலாக எதிர் பார்க்கிறேன். பார்ப்பேன்.

பிஜிலி: அதுவே் என் எண்ணம். அதற்காகத்தான் முயற்சி செய்கிறேன்.

ம: அப்படியா? அதற்கு என்னால் ஆனதைச் செய்கிறேன்.

பி: தங்களைப் போன்றவர்களின் கூட்டுறவிருந்தால் காரியம் வெற்றி பெறும்.

ம: உறவுக்கென்ன பஞ்சம்.

பி: தங்கள் உறவு இன்றுடனே தானே. நாளை நான் கல்கத்தா; நீர் கச்சேரி. பிறகு ஒட்டுறவேது?

ம: பிஜிலி, நீ உறுதியாயிருப்பாதனால் கலா சேவைக்கே என்னை அர்ப்பணிக்கிறேன்.

பி: நான் உறுதியாயிருப்பேன். என் அலுவலே கலை. தங்களுக்கு உத்தியோகம் இருக்கிறதே.

ம: இதை உதறித் தள்ளி விடுவேன். ஒரு மாத முன்னறிக்கை தந்து ராஜிநாமாவை நீட்ட வேண்டியது தான்.

பி: அப்படிச் செய்யுங்கள். ஒரு மாதம் தங்களுக்காக நான் காசியில் காத்திருப்பேன். அங்கே சில நண்பருடன் கலந்து பேசி முடிவு செய்வேன். பிறகு கல்கத்தா சேர்வேன்.

ம: பிஜிலி உறுதி; இந்த உத்தியோகம், தில்லி வாசம் அனைத்தையும் விட்டு என் செல்வத்தைப் பாங்கில் கலைப் பணிக்கென்று போட்டு விட்டு நான் கங்கையில் ஒரு முழுக்குப் போட்டுக் கவலையில்லாமல் உன்னிடம் வருவேன். எதிர்பார்.

பல தமிழ்ப் பதங்கள் பாடி பிஜிலி அபிநயம் பிடிக்கச் செய்தார்.

இத்துடன் இருவர் சம்பாஷணை யும் முடிந்தது. இருவரும் பிரிந்தனர்.

மதனரை பிஜிலி மாயம் பலமாகப் பிடித்துக் கொண்டது. ஆனல் அவள் தன் ஆசையைத் தளுக்காகக் கலைப் போர்வையில் மறைத்து விட்டாள். எடுத்ததும் கண்ணு காதலா என்று கொஞ்சிக் குலாவுதல் அவள் இயல்பில்லை. படிப் படியாக ஆசை மோகம் முதிர்ந்தது. வெறி பிடிக்க வைத்து அவரே தன்னிடம் ஓடி வரச் செய்ய அவள் தனது சாகசங்களை யெல்லாம் பயன் படுத்தினள். அதன் முடிவென்ன?

மதன் சிங்கின் வேதாந்தம் கலானந்தமாய் பிஜிலி ஆனந்தமாக மாறி விட்டது. அவர் ரூ. 500 உத்தியோகத்தை விட்டார்; மாளிகையை விற்ருர். ஊரிலுள்ள நில புலன்களை யெல்லாம் ரொக்கமாக்கி பாங்கியில் போட்டார்.

இமயமலை சச்சிதானந்த சுவாமிகளிடம் யோகம் பழகச் செல்வதாக ஒரு புரளி பண்ணினர். ரிஷிகேசத்திற்குத்தான் புறப் பட்டார். பிறகு ஆளைக் காண வில்லை.

32. உல்லாச ஜோடிகள்

எங்கே மதன்? ஆள் ஹரித்வாரத்தில் சிலநாள் இருந்தார்; காரணம் அங்கே பக்தரும் துறவிகளும் பாடும் பாடல்கள் அவரை வசீகரித்தன. அவருள்ளத்தில் ஒரே போராட்டம் நடந்தது.

"நான் என் உயர்ந்த வேலையை விட்டேன்? ஐயோ என்னை நம்பிய மனைவியையும் கைவிட்டேனே; என்னை விடப் பாதகன் உண்டா? நான் யாரை நம்பி இப்படி வந்தேன்; ஒரு மின்னலை, மின்னிடையை; ஆயிரம் படித்தவளானுலும், உலகப்புகழ் பெற்றவளானுலும், அவள் ஒரு வேசை கணிகை, கூத்தாடிச்சி, எத்தனையோ ஆண்களைக் கெடுத்தவள்.

அவள் ஆசை பணத்தளவே; அவள் புன்னகை பொன்னல் தூண்டப்படுவது; அவள் பாசம் எமபாசம்; அவள் காதல் சாதலின் தூது. என் பணத்தை அவள் காலில் கொட்டுவானேன்? அவளிடம் என்ன சுகமிருக்கிறது; அங்கிருக்கும் நாற்றந்தானே இங்கும்? சாயம் பூசிய ஆபாசச் சட்டியை நானேன் விரும்பிச் செல்லுகிறேன். என் பணத்தை இங்கேயுள்ள சாதுக்களுக்குத் தந்து நானும் அவர்களுடன் ஜப தபம் செய்து கொண்டிருந்தாலென்ன? இந்த மின்னல் என்னிடம் நிலைக்குமா? மேகமிருக்கு மட்டும் மின்னல்; போகமிருக்கு மட்டும் மின்னிடை! எப்படியிருந் தாலும் வேசை வேசையே; நான் என் மறுபடி என் மனைவியிடமே செல்லக்கூடாது...அல்லது ஆசையை எல்லாம் ஒழித்து, சாதுக்களுடன் இருக்கவா?......"

இந்தமாதிரி ஹரித்வாரம் கங்கைக் கரையில் அவன் சிந்தனை சல சலத்துச் சஞ்சலங் கொண்டோடியது. இச் சஞ்சலம் சூரியனுடன் அஸ்தமித்து விட்டது. மணி ஆறு; மதன் ரயிலைப் பிடிக்க ஓடினர். இரண்டாம் வகுப்புச் சீட்டு வாங்கி ஏறினர்; வண்டி காசியை நோக்கிப் புறப்பட்டது. அடுத்த ஸ்டேஷனில் புதுக்கலியாண ஜோடிகள் அதே வண்டியில் ஏறினர். இருவரும் தேன் திங்கள் அன்றில்கள்: நவ நாகரிக ஜோடிகள். சட்டை தொப்பி சாப்பாடு குடி எல்லாம் மேற்படி—வசந்த மதியும் மன்மத பாணமும் சேர்ந்தால் சொல்ல

வேண்டுமா? எதிரிலிருக்கும் ஆள் கூடத் தெரியவில்லை. இருவரும் தமாஷாகச் சிரித்துக் கொண்டு உதடும் கன்னமும் தோளும் கையுமாக விளையாடிக் கொண்டிருந்தார்கள். இடையிடையே ஊடல்; ஒரு நிமிஷம் அவள் முகத்தைக் கிழக்கே திருப்புவாள்; இவன் மேற்கே திருப்பிக் கொள்வான்; அவள் முகத்தில் நிலாக் கதிர் தைக்கும்; உடனே முகம் மேற்கே திரும்பிவிடும்; கூடல் தொடங்கி விடுக்க இருவரும் செல்லமாகக் கிள்ளிக் கொள்வார்கள்; வைது கொள்வார்கள்; அவள் சீ களவாணி என்பாள்; அவன், அடிபட்டி என்பான். வெறி முற்றிப் போனதும் பேசாத பேச்சில் ஆழ்ந்து விடுவார்கள்; மூச்சுத்தான் கேட்கும். மறுபடி அவள் மெள்ள ஒரு பாட்டிழுப்பாள்; இவன் தான் மேடையில் கேட்ட ஒரு பாட்டை பாலக்காட்டு ரம்பம் போல் இழுப்பான்; அவள் வாயை மூடு என்பாள்; இவன் காதை மூடிக் கொள்வான்; மறுபடியும் ஊடல் பிறகு கூடல். இந்த மாதிரி இருவரும் விளையாடிக் கொண்டேயிருந்து அவன் மடியில் இவள் சாய்ந்து கண்ணை மூடினாள். இந்த மன்மத லீலைகளைப் பார்த்த மதனுக்குக் காலையில் உதித்த வேதாந்தம் பறந்து போனது. துறவிகளை வறட்டுப் பிண்டங்கள் என வைதான். ஆகா இன்பம் இதுவே; நமக்கும் இப்படி விளையாட ஒன்று கிடைக்குமா? என்று தூங்கும் இருவரையும் பார்த்து ஏங்குகிறான். அவர்களைப் பார்க்கப் பார்க்க மோகம் நெறிகட்டி ஏறியது. இந்த யுவதி நம்மிடம் இப்படி விளையாடினால் எவ்வளவு சுகமாயிருக்கும் என்று தோன்றியது. அந்த வாலிபன் மேல் பொறாமை பிறந்தது; அவளைத் தொட்டுப் பார்க்கலாமா என்று கூட மனம் துள்ளியது. "பயலே உதை விழும் உஷார்" என்று மனச்சாட்சி எச்சரித்தது. கண்தான் கருத்தை எப்படித் துலக்குகிறது; அவளைப் பார்க்கப் பார்க்க இவனுக்குக் காமலாகிரி மண்டைக் கேறி விட்டது. நெருப்பின் கிட்டவும் போக முடியாது; தள்ளியிருக்கவும் முடியவில்லை. அவஸ்தைப் பட்டுக் கொண்டே மதன் பாபு கண்ணை மூடினான். விழிப்பில் பார்த்தது கனவில் வந்தது; ஆனால் கனவில் அது மின்னற் கொடியாக வந்தது.

பிஜிலி அவனது சூக்ஷ்ம சரீரத்தைப் பற்றிக் கொண்டாள். விழிப்பில் அந்த ஜோடிகள் என்னென்ன செய்தார்களோ அவற்றை—பிஜிலியுடன் மானவ—மதன் செய்தான்; ஹா ஹ ஹ ஆனந்தம் என்று இடையிடையே மழைக் காலப் பன்றி மாதிரி கூச்சலிட்டான். காலை புலர்ந்தது; கங்கையலைகளைத் தழுவிய மந்த மாருதம் மெல்ல வீசியது; கலகல வென்று ஜனங்களின் சத்தம் கேட்டது; கூட்டநாற்றம் குப்பென்றடித்தது. காசி வந்தது; ஜோடிகள் இன்னும் உறங்கினார்கள். மதன் ஐயா காசி காசி என்று கத்தினான். அவர்கள் "காசி எங்களுக்குத் தூசி; இதுவே எங்கள் காசி, வைகுண்டம், சுவர்க்க போகம்" என்று தழுவிக் கொண்டு சிரித்தார்கள். "ஐயா நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டான் மதன். "நாங்கள் கல்கத்தா போகிறோம்." "அங்கென்ன?" "கலைவிருந்து" இத்துடன் மதன் இறங்கினான்; அந்தப் பெண்ணை ஒரு பார்வை பார்த்தே சீட்டுக் கொடுத்து

வண்டி நிலயத்திற்கு வெளியே சென்ருன்.

33. காசிக்கூடன்

காசியில் அவன் வந்த காரிய மென்ன? இதோ வழிச் சுவர்க ளைப் பாரும்.

சுந்தர்லால் நாடக சபையில் ஜகன் மோகன கலா ஸௌந்தரி பிஜிலி பாயின் ஆனந்த நர்த்தனம். இந்த விளம்பரம் மோகனுக்கு மோகா வேச மளித்தது. கங்கை யின் அலைகளில் காலையின் தங்க வொளி நடம்புரிகிறது; கங்கைக் கரையில் பக்தரும் பயிராகிகளும் பகவானைப் பாடிக் கொண்டு இன்ப நீராடுகிருர்கள். எதிரே பஜனை கோஷ்டி சிவ நாமாவளி பாடி வருகிறது; விசுவநாதர் கோயில் கம்பீரமாகப் பொன்ன கை குலுங்கி அழைக்கிறது. ஹர ஹர மஹா தேவ என்று அடியார் முறையிடுகின்றனர். மோகன் இக் காட்சிகளை உதாசீனமாக ஒதுக்கிக் காசியின் முடுக்குகளில் படக்குப் படக்கென்று நெஞ்சு பதறச் சென்ருன். சுந்தரலால் நாடகக் கொட்டகை வந்தது. வாசலிலும் அதே அறிக் கையுடன் பிஜிலியின் வர்ணப் படம் போட்டிருந்தது. மோகன் அதைக்கண்டு மோகித்திருந்து பிறகு ஆவலாக உள்ளே பாய்ந் தான். "கடோ" என்ருன் சேவ கன். நடனம் எப்போது; பிஜிலி பாய் எங்கே தங்கியிருக்கிருர் என்று கேட்டான் மோஹன். சேவகன், "இதென்ன பைத்திய மா, சித்தப் பிரமையா? இங்கே பிஜிலியுமில்லை குஜிலியும் இல்லை" என்று வேட்டைநாய்—இந்தியில் சன் என்ருன் சேவகன். மோஹ னுக்கு ஆத்திரம் பொறுக்கவில்லை; அவனிடம் ஒரு சீட்டனுப்பி கொட்டகைத் தலைவரைப் பார்க்க விரும்பினுன். தலைவர் அன்புடன் வரவேற்ருர்.

மோ: பிஜிலிபாய் நடனம் என்று?

தலை: மூன்று நாளைக்கு முன்பே ஆய்விட்டதே! தேதியைப் பாரும்.

மோ: அவள் இப்போது எங்கிருக் கிருள்?

தலை: அல்லஹபாத்தில் நடனம் ஆடிக் கல்கத்தா செல்வதாகச் சொன்னுள். இப்போது கல் கத்தாவில் இருக்க வேண்டும்.

மோ: கல்கத்தாவில் எந்தத் தெரு?

தலை: அவளுக்கென்ன நித்ய கல் யாணி எங்கும் இருப்பாள். இலச்சாதி பதிகள் அவள் காலைப் பிடித்துக் கெஞ்சுகிருர்கள்—தாங் கள் பிஜிலிபாயின் நண்பரா?

மோ: ஆம், இங்கேதான் இன்று நடன மாடப் போவதாகத் தெரிவித்தார்—வந்தேன்.

தலை: கல்கத்தா காளிதாஸ் பங்க ளாவிலேதான் அவள் இறங்கு வது வழக்கம். ஆனல் அவள் பெரிய அந்தஸ்தில் இருப்பாள்.

மதன்: என்னை அவசியம் பார்ப் பாள்.

தலை: பார்க்கப் பதினுயிரம் பகட் டப் பதினுயிரம் கேட்கும் பேர் வழியல்லவா? நிரம்பப் பணம் வைத்துக் கொண்டிருக்கிறீரா? சொல்லும் எங்கிருந்து வருகிறீர்?

மதன்: தில்லியிலிருந்து.

தலை: ஓகோ! அங்கே சமீபத்தில் நடனம் நடந்தது. அப்போது மயங்கி விட்டீரோ? ஆட்களை இழுத்து விழுங்கும் காந்தத் திமிங்கில மல்லவா பிஜிலி.

மதன்: எனது நண்பரை அப்படிச் சொல்லாதேயும். அவள் என்னை விரும்பும் உத்தமி!

தலை: சரி உத்தமியிடம் பித்துக் கொண்டு சொத்தையிழந்து சுக நோய் அனுபவியும்.

மதன்: எனப்படிச் சொல்லுகிறீர்; உமக்கு அவள் நடனம் பிடிக்க வில்லையா?

தலை: கலையில் பிரியந்தான்; அதனலேதான் இந்தக் கொட்டகை கட்டிக் கலைவாணரை ஆதரிக்கிறேன்; ஆனல் கலையின் வலையும் அதில் சிக்கிக் கொள்வோர் தரும் அநியாய விலையும் கண்டால் பயமாயிருக்கிறது. பிஜிலி பாயை நானே அழைத்து வந்தேன். ஒரு மணி நேரம் நடனமாட ஆயிரம் ரூபாய் என்று பேச்சு. இரண்டரைமணி நடனம் நடந்தது. நல்ல வசூலானது; சரியாக இரண்டரை மணியானதும் பிஜிலி 2500 ரொக்கமாக வாங்கிக் கொண்டாள்; இந்த நகர் லீலாப்ரசாத் கோஷுடன் சென்ருள்; சென்றதும் தன் சேவகன் மூலம் ரூ 500 க்கு பில் அனுப்பிவிட்டாள். அது தன் கோஷ்டி போகவர இருக்க நடக்கச் செலவாம். என் மகன் மூலம் பணம் அனுப்பினேன். அழகான வாலிபன். அவள் அவனை வலை போட்டுப் பைத்தியமாக்கி வசூலான பணம் முழுதும் அவன் மூலம் கைப் பற்றிக் கொண்டு கால் மண்ணைத் தட்டிவிட்டுக் கிளம்பினள். ஐயா...நான் தலையில் கை வைத்துக் கொண்டு புலம்புகிறேன். அந்த ராக்ஷஸியிடம் சிக்காமல் கவனமாயிருங்கள்.

இதைக் கேட்டதும் மதன் ஒரு நிமிஷம் கலங்கினன். பிறகு பிஜிலியை அப்படிச் சொல்லாதேயும்; அவள் கலையின்ப ராணி...என்று மதன் உத்தரவு பெற்றுச் சென்ருன். ஒரு பண்டா வீட்டில் மூட்டைகளை வைத்தான். கடனிழவுக்குக் கங்கையில் காக்காய் முழுக்குப் போட்டான். உணர்ச்சியற்ற விசைப் பொம்மை மாதிரி விசுவநாதர் கோயிலுக்குப் போனன். பண்டாவுக்கு இரண்டு ரூபாய் அழுதான். ஓட்டலில் பூரியும் பால்புட்டுப் பிட்டுப் போட்டு பாலையும் உள்ளே விட்டு இரண்டு ஏப்பத்துடன் எழுந்து வந்தான். பாண்டார காசியாத்திரைப் பலன், இன்ன பாவத்திற்கு, இன்ன பரிகாரம், இவ்வளவு தட்சிணை வைத்தால் இவ்வளவு புண்ணியம் என்று புரோகித புராணம் பாடி ஆயிரம் ரூபாய்க்கு அடிப் போட்டார்.

மதன் பேசாமல் மூட்டையைத் தூக்கிக் கிளம்பினன். கல்கத்தா வண்டியில் ஏறினன். வழியெல்லாம் பிஜிலி தியானமே. கனவில் பிஜலி தரிசனம் கிடைக்கும் என்றே ஆள் கண்ணை மூடினன்; கனவில் வேண்டிய திருவிளையாடல்கள் நடந்தன. காலைக் காற்றுடன் கிச்சு பிச்சு கிஷு என்று வங்காளி பாஷை கலந்து வந்து அவனை எழுப்பியது. அப்போதுதான் அவன் கனவுலகில் பிஜிலியின் காலில் விழுந்தான். இனி விழிப்பிலும் அவள் காலைத் தழுவ இதோ ஓடுகிருன் மதன்.

34. சரணுகதி

கல்கத்தா வீதிச் சுவர்களிலெல்லாம் பிஜிலியின் படமும் புகழுந் தான்! மதன் புகழ் பெற்ற பட்டாச்சாரி ஓட்டலில் இறங்கிக் காலைக் கடனை முடித்தான். பிறகு பணங்கொடுத்து ஒரு தட்டுக்

கொண்டு வரச் சொன்னான். ஓட்டல்காரன் தட்டைக் கொண்டு வந்து அழகான மேஜைமேல் வைத்தான். மதன் இதென்ன பலகாரம் என்று கேட்டான்.

புருக்கரி...என்றதும் சை சை சைகொண்டு போம் பிராமண ஓட்டலில் மீனும் ஊனும் போடலாமா? சை சை என்று மதன் மூக்கைப் பிடித்துக்கொண்டான்.

ஐயா நாங்கள் வங்காளிகள் மச்சப் பிராமணாள். காளி பேரால் மீன் ஊன் எல்லாம் தீட்டுவோம். இது தாந்திர தேசம் என்றான் ஓட்டல்காரன். சை சை தாந்திரமாவது மண்ணுவது பஞ்சமார் ம்.....ம்......என்றான் மதன். "எங்கள் காளிதாஸ் பிரபு இதைக் கேட்டால் உங்கள் காதைப் பிய்த்து விடுவார்—கவனம்" என்றான் ஓட்டல் காரன். அங்கே சாப்பிடவே மதனுக்குப் பிடிக்க வில்லை. அதிலும் கருவாட்டு மூட்டைகளிலிருந்து மூக்கில் வந்து முட்டும் நாற்றம் வயிற்றைப் புரட்டியது. மதன் பழம் வாங்கி யுண்டு பால் குடித்துப் பசியாறி ஒரு வண்டியில் காளிதாஸ் சடர்ஜீ வீட்டை அடைந்தான். ஆள் நல்ல சட்டை போட்டு ஜோரா யிருந்ததால் சலாம் பாபு என்று தார்வான் வாசலைத் தாண்ட விட்டான். திண்ணையில் படே படே ஆசாமிகள், இடம்பாசாரிகள் உட்கார்ந்திருந்தார்கள். மதன் பிஜிலியைப் பார்க்க வேண்டும் என்றொரு சீட்டனுப்பினான்.

தார்வான் திரும்பி வந்து மாலை ஐந்து மணிமுதல் ஐந்தரைக்குள் பார்க்கலாம் என்ற உத்தரவைத் தெரிவித்தான். மதன் பாபு காளி தாஸ் சடர்ஜிக்குச் சீட்டனுப்பினார். அவர் சக்தி சாதனத்தில் ஆழ்ந்திருக்கிறார்; இரவு பைரவி பூஜையிலேதான் அவரைப் பார்க்கலாம் என்றான் தார்வான். மதன் பாபு சக்தி சாதனத்தைப் பற்றி அறிய விரும்பினார். திண்ணையி லிருந்த ஒரு படே ஆசாமி அவருக்கு சிநேகிதமானார். அவர் பேச்சுப்புலி, காரிய நரி, தந்திரச் சிங்கம், பஞ்சமகாரப் புலவர். அவர் மதனின் சட்டைப் பையில் உள்ளதையும் சக்தியின் அருளால் அறிந்துகொண்டு தம் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அங்கே தாந்திரக சாதனத்தால பராசக்தி இறங்கி உடல் அமுத ஊற்றுக்கும் தாந்திர சாதனத்தை வர்ணிக்கத் தொடங்கி விட்டார். தனது பஞ்சமகார ஜோடி வர்ணனையை அடுக்க அடுக்கப் பொழுது போனதே தெரியவில்லை. மணி ஐந்தடித்தது; மதன் பிஜிலியிடம் ஓடினார். தார்வான் அவரை ஓர் அலங்கார மாடியறைக்குள் விட்டு வெளியேறினான். பத்து நிமிஷம் கழித்து பிஜிலிபாய் மோகனப் புன்னகையும் ஜலதரங்கச் சிரிப்புமாக வந்து கைகுலுக்கி "மிஸ்டர் மதன் வாருங்கள்" என்றாள்.

அவள் ஒரு தங்கக் கட்டிலில் அமர்ந்தாள். மின்னலைப் பார்த்தவுடனே மதன் உள்ளம் அதன் ஆசையில் பின்னிக் கொண்டது.

அவள் கேட்காமலே தன் தியாகத்தையும் அவளுக்காகத் தன்னிடம் உள்ள பணத்தையும் மதன் சொன்னான். பிஜிலி பணச் செய்தி கேட்டதும் "டீ" என்றாள்; தங்கக் கூசாவில் டீயும், சந்தேசும் (பால் புட்டு) வந்தது. தானே மதனுக்குத் தந்து சாப்பிடுங்கள் என்றாள். மதன் பிஜிலி பிரசாதத்தை உண்டு டீ சாப்பிட்டு ஒரு ஏப்பம் விட்டான்.

பிஜிலி: சிரமப்பட்டு வந்தீர்கள் கொஞ்ச நாள் இங்கே இருங்கள்.

மதன்: பிஜிலி, இனி நான் உன்னிடமே இருப்பேன்.

பிஜி: தங்கமாயிருங்கள்.

மத: என் பணம் உனக்கே.

பிஜி: பணம் கிடக்கிறது; அன்பு தான் வேண்டும்.

மத: பிஜிலி நான் உனக்கு அடிமை; உன் கலையும் அழகும் என்னைக் கொள்ளை கொண்டன.

பிஜி: அன்பிருந்தால் போதும்; இங்கே இரவில் பைரவ பூஜை நடக்கும்; விரும்பினல் வரலாம்

மத: உன்னையே நான் இனிப் பூசிப்பேன்.

பிஜி: பைரவ கூட்டத்திற் கலந்து கொண்டால் பிறகு பார்க்கலாம்.

மத: அதற்கு நான் எப்படி வர வேண்டும்.?

பிஜி: காளிதாஸ் எல்லாம் சொல்வார்; ஒரு புத்தகம் தருவார். படித்தால் தெரியும். இதோ உங்களை அனுப்புகிறேன்.

பிஜிலி ஒரு சீட்டுக் கொடுத்து மதனைக் காளிதாஸ் பிரபுவிடம் அனுப்பினள். இனி எல்லோரையும் இரவில் சந்திப்போம்.

[தொடரும்]

சூரிய காந்தி

மஞ்சளை முகத்தில் பூசினேன் — ரவி
மாணிக்கக் குங்குமப் பொட்டிட்டான்!
அஞ்சனம் கண்ணுக்கு வேண்டினேன் - அவன்
அந்தோ இருளை வழங்கினன்!

சி. எஸ். ஆர்

நமது ரசனை

[ஸ்ரீமதி சாஸ்திரி]

பிரியமுள்ள தம்பிக்கு,

எனக்கு, இலக்கியச் சுவையுடன் அளவற்ற புகழ்மாலையைப் போட்டிருக்கிறீர்கள். அதற்கு எப்படித் தண்டிப்பது? அதற்கு எப்படி மதிப்பில்லாமல் செய்வது? என்று பலவாறு யோசித்து ஒரு வழி கண்டு பிடித்தேன். அது தான் மேலே கொடுத்திருக்கும் உறவு. 'தம்பி' என்று சொல்லி விட்டால் சொந்தச் சகோதரியை எவ்வளவு புகழ்ந்தாலும் உலகத்தார் அதிக மதிப்பு கொடுக்க மாட்டார்கள். அதனால் நீங்கள் இனி எவ்வளவு புகழ்ந்தாலும் புகழுங்கள்.

நமது மக்களிடை ஒரு பெரிய குறை உண்டு. நல்ல விஷயங்களை யார் சொன்னாலும் அதைப் பாராட்டி அவர்களுக்கு ஊக்கமளித்து, மேலும் வளர விடாமல் ஒரு சிறு தப்பையும் வலை போட்டரித்து எடுத்துக் காட்டித் தங்களுடைய திறமையைக் காட்டி விட்டதாக ஏமாறுதல். உயர்ந்த உள்ளம் படைத்த சிலர்தான் பிறரையும் தன்னைப் போல் மதித்து நடந்து கொள்ளுகிறார்கள். சிலர் என்றால், டி. கே. சி ஒருவர்தான் அதில் தலைசிறந்தவர். "எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு" என்பதை வாழ்க்கை முறையில் கையாண்டு வெற்றி பெற்றவர் டி. கே. சி. அவருடைய அருமைச் சீடரான உங்களுக்கும் அது வந்து விட்டிருக்கிறது.

... "கம்பன் கழகம்" என்றால் ஏதோ பெரிய ஸ்தாபனம் என்று எண்ணி விடாதீர்கள்! நான் தலைவி, திருசுப்பையா காரியதரிசி, அவ்வளவுதான். கட்டணமில்லாததால் எங்கள் சங்கத்திற்குத் தமிழர் எல்லோருமே அங்கத்தினர்கள். 'அங்கத்தினர்களாகிறீர்களா?' என்று கேட்டால், பத்துப் பேர் தான் சேருவார்கள். அதில் 'சப் கமிட்டி' எல்லாமாகச் சேர்ந்து உருவாக விடாமல் செய்து விடுவது தான் வழக்கம். எங்கள் கழகத்திற்கு இந்த ஆபத்து ஒன்றுமில்லை!

தேசாபிமானமும், பாஷாபிமானமும் உயிர் பெற்று எழுந்து போர் புரிந்த வங்க நாட்டில் நாங்கள் பத்து ஆயிரம் பேர்களிருந்தும், ஒரு வாசகசாலை இல்லையென்றால் நாங்கள் வங்காளிகளிடையே எப்படி வாழ்கிறோம் பாருங்கள். அதற்காக கம்பன் கழகத்தின் ஆதரவில் ஒரு இலவச வாசகசாலை வைத்திருக்கிறோம். புத்தகங்கள் அனுப்பும்படி கூட விளம்பரம் செய்திருந்தோம். தமிழருடைய தாராள சிந்தையைக் குறித்து ஒரு முஸ்லிம் வியாபாரி அன்றொரு நாள் சொன்னார்: "நீங்கள் ரொம்பவும் கெட்டிக்காரர்கள் தான். ஆனால், குறுகிய நோக்கமும் செட்டும் உடையவர்கள். வேணுமானால் இந்து தேச படத்தைப் பாருங்கள். போகப் போக அது குறுகி விடுகிறது" என்று பூகோளப் படத்தை வைத்து அவர் தெளிவு படுத்தி விட்டார். நானும், கூட இருந்த நண்பர்களும் சிரித்து வயிறு புண்ணாகி விட்டது.

அதில் அதிக உண்மை இருக்கத் தான் செய்கிறது. பணத்தைச்

சேர்ப்பது ஒரு சாமர்த்தியந்தான். அதில்லாமல் கூட பணம் சேருகிறது. ஆனால் அதை நல்ல முறையில் தனக்கும் பிறருக்கும் பயன் படும்படி வகுத்துச் செலவு செய்ய ரொம்பவும் அறிவும், திறமையும், வேண்டும்............

எழுத்தாளர் சங்கம், நீங்கள் எல்லாம் முயன்று உருவாக்கி இருப்பதை அறிய ரொம்ப சந்தோஷம். தற்காலம் இலக்கியப் பஞ்சம் ரொம்ப ரொம்ப ஏற்பட்டிருக்கிறது. கதை, கட்டுரைகள் நல்ல முறையில், விரைவில் வெளிவர வேண்டும். படிப்பவர்கள் திறமைசாலிகளாய் விட்டார்கள். எழுத்தாளர்கள் முன் போலவே "காப்பி" யடித்துக் கொண்டிருக்கிறார்கள். பல பத்திரிகைகள் வித விதமான தோற்றங்களுடன் அழகாயிருக்கின்றன.

ஆனால் உள்ளே ஒரேவிதமான விஷயங்கள் தான். பலதும் சுத்த ஆபாசமான காதல் சித்திரங்கள். சட்டியில் இல்லாமல் அகப்பையில் எப்படி வரும்? ஒரே 'பிளாட்'டுத் தான்; பலமுறை திரும்பத் திரும்ப ஒரு கதை பல பத்திரிகையில் வெளிவருகிறது. படிப்பவருக்குத் திருப்தியோ, அறிவு வளர்ச்சியோ இவைகளால் கொஞ்சமும் கிடையாது.

உலகத்திலே நாம் ரசிக்கவும் ஆனந்திக்கவும் எவ்வளவோ விஷயங்கள் படைக்கப் பட்டிருக்கின்றன. நமது முன்னோர்களும் நமக்கு அரிய பொக்கிஷங்களைத் தந்து விட்டுப் போயிருக்கிறார்கள். அதை எல்லாம் நல்ல முறையில் பயன் படுத்தாமல், கலியாணம், கீழ்த்தர காதல் இவைகளையே திருப்பித் திருப்பி எழுதவும், படிக்கவும் நேர்ந்து விட்டது. தவிர, சிலராவது உயர்ந்த முறையில் எழுத வேண்டும். "காப்பி" அடிப்பவர்கள் அதைக் கொஞ்சமாவது பின் பற்றுவார்கள்.

எழுத்தாளர் சங்கம் நல்ல முறையில் வளர்ந்து தமிழருக்கும் தமிழுக்கும் சேவை செய்ய வேண்டும். புது முறையில் கதைகள் வரவேண்டும். இலக்கிய ஆராய்ச்சிகள், வாழ்க்கை முறைகள், அரசியலுக்கான ஒழுங்கு முறைகள், இவைகள் மக்களின் வாழ்க்கைக்கு ரொம்பவும் அவசியம் என்பதை நம் ஜனங்கள் உணர்ந்து கொள்ளும்படி செய்ய வேண்டும். எதிலும் பிறரை ஏமாற்றும் மனப்பான்மை நம்மைவிட்டு ஒழிய அறிவு வ்ளர்ச்சி இன்றியமையாதது.

இப்பொழுது படிப்புக்கும் வ்ாழ்க்கை முறைக்கும் சம்பந்தமே கிடையாது. தனித்தனி அறைகள். ரொம்பப் படித்த மேதாவிகள், தினசரி வ்ாழ்க்கையில் வேறு மனிதராகத் தோன்றுவர். அந்த முறை ஒழிந்து இரண்டும், உயிரும் உடலும் போல தொடர்புடையது என்பதை வாழ்க்கை முறையில் பழக்கப் படுத்திக் கொள்ள நல்ல இலக்கியங்களும் அறிவு வளர்வதற்கான ஆராய்ச்சிகளும் தேவையான அளவில் வெளிவர வேண்டும். ரொம்ப ரொம்ப அதிகமாக எழுதி விட்டேன் என்று எண்ணுகிறேன்......

இப்படிக்கு

ஸ்ரீமதி சாஸ்திரி

மலர்மணம்

முகப்புப் படம் :

ஆகாயத்தைத் தொட முயல்வதுபோல் நேராக வளர்ந்து நிற்கும் நெட்டைப் பனை, மணமணக்கும் பச்சை ஓலைகளுடன் அட்டைச் சித்திரமாக இந்த இதழை அலங்கரிக்கிறது. "கதிரவன்" அந்த மணம் முழுவதையும் கவிதையாகச் சித்திரித்துத் தந்திருக்கிறார்.

"காதலும் கவிதையும்" என்ற அழகிய கதையை சிறந்த கதாசிரியர் கி. ரா. ரஞ்சகமான நடையிலே மொழி பெயர்த்திருக்கிறார். பல சிறந்த சிறுகதைகளும், கட்டுரைகளும், விமரிசனங்களும் தித்திக்கும் நடையிலே எழுதி ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர் கி. ரா. இந்த ஸ்பானியக் கதையின் வனப்பு எப்படி இருக்கிறது என்று அனுபவியுங்கள்.

இந்த இதழிலே நமது சகோதரிகள் இயற்றியிருக்கும் நவ நவரசமுள்ள விஷயங்களின் அருமையை என்னவென்று சொல்வது? வானக் கரைக்குச் சரிகைக் கோடிட்டது போல் மின்னற் கொடிகள் புரள்வதை இயற்கையில் கண்டு ஆனந்தித்திருப்பீர்கள். அம்மாதிரி இயற்கை ஆனந்தத்தை 'புத்தன்' 'சூரிய காந்தி' முதலான பாடல்கள் இங்கு அளிக்கின்றன. கவி 'கம்பதாசன்' வனப்பை அழகிய வரிகளிலே படம் பிடித்திருக்கிறார். சி. எஸ். ஆர் இயற்றிய பாடல் தனிப் பரவசத்தை அளிக்கிறது.

எஸ். வி. எஸ் ஆழ்ந்த கருத்தையும், அற்புதமான கற்பனையையும் சுவையுடன் தீட்டி யிருக்கிறார். 'அன்பின் அழைப்பிலே ராமராவ், ஒரு தனி உலகையே கண் எதிரே காட்ட முயன்றிருக்கிறார்.

'வசந்தம்' தாங்கி வந்துள்ள பல இனிமைப் பகுதிகளையும், இலக்கிய ஆராய்ச்சிகளையும், கலைக் கனவுகளையும் தனித் தனியாகப் பிரித்துச் சொல்வது எப்படி! நீங்களே பாருங்கள்

— ஆசிரியர்

GLUCONATE - D

வைடமின்-D உள்ள கேல்ஸியம் க்ளூகோனேட் மாத்திரைகள். சாக்லேட் பூசப்பட்டு ருசியாயிருக்கும்.

கேல்ஸியம் குறைவு, கர்ப காலம், பாலூட்டல், குழந்தைகள் எலும்புகள் பலப்படுத்த — சிறந்த மருந்து.

இது I. T. L. ப்ராடக்ட்

Government Industrial & Testing Laboratory

Malleswaram P. O., BANGALORE.

OVERSEAS REPRESENTATIONS

FRASER SQUARE.

COIMBATORE.

DEALERS IN ALL KINDS OF

HARDWARE, MILL STORES ETC.

A TRIAL ORDER WILL

CONVINCE YOU.

எல்லா நலங்களும் பெற

எல்லா தேசங்களும் தங்கள் தலைவர்களையே எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய எண்ணங்களெல்லாம் யுத்தத்திற்குப் பின் புனர் அமைப்புத் திட்டங்களிலும் எல்லா நலங்களும் பெற, என்ன செய்வது என்ற முக்கிய பிரச்சனையிலுமே சிந்தை லயித்திருக்கிறது.

குடும்பத் தலைவரும் பாதுகாப்பாளருமான உங்களுக்கு உங்கள் மனைவி மக்கள் சந்தோஷமாகவும் சௌக்கியமாகவும் வாழ்வதெப்படி என்பதிலேயே கவனம் சென்றிருக்கிறது. நீங்கள் எப்போதாவது உங்களுடைய அன்புக்குகந்தவர்கள் எல்லா நலங்களும் பெற என்ன செய்வது என்பதைப் பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

வாழ்க்கை எப்போதுமே உங்களுக்கு இன்பகரமாயிராது. உங்கள் உயிருக் குயிரானவர்களிடமிருந்து விதி திடீரென சதி செய்து பிரித்து விடலாம். அப்போது மரணத்திற்குப் பின் பிரச்சனை எழுகிறது. அப்போது யார் அவர்களைக் காப்பாற்றுவார்கள்? உங்களுடைய சந்ததியின் நல் வாழ்வுக்காகவும் கல்விக்காகவும் யார் நிதி சேகரித்து வைத்திருக்கிறார்கள்?

எங்களைக் கலந்து ஆலோசித்தால் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்து உதவத் தயாராயிருக்கிறோம்.

★

தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பனி

லிமிடெட்

தலைமை ஆபீஸ்: **பம்பாய்**

சென்னை கிளை: **4 & 5 முதல் லைன் பீச், சென்னை**

KUPPURAJ

JEWELLER, COIMBATORE.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', gents', Children's Underwear Sport Shirts etc.

S. Beemiah Chetty.

"WHITE SHOP" COIMBATORE.

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்
களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம்
செய்யுங்கள்

ஆர்யவைத்தியர்

★

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய
பார்மசி

திருச்சி ரோடு கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக
அனுப்பி வைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

118. Oppanakara-Street

Coimbatore.

Phone No. 155. Estd., 1921.

Proprietor

C. M. Subramanya Chettiar

CONTRACTOR

To

THE VASANTHA MILLS, LIMITED.

SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

K. B. R. JWELLARY

BIG BAZAR COIMBATORE.

சகல பண்டங்களுக்கும் போக்குவரத்து சாதனங்கள்

கீழ்க் கண்ட ஊர்களிலிருந்து ஊர்களுக்கு லாரி மூலம் வியாபார, விவசாய பண்டங்களை வீட்டுக்கு வீடு கொண்டு போய்ச் சேர்க்க வசதிகள் இருக்கின்றன.

ஸ்ரீ ராம விலாஸ் சர்வீஸ் லிமிடெட்

202/203, மௌண்ட் ரோடு, மதராஸ்

போன்: மதராஸ் "8536" : : தந்தி: "ROAD HAUL" மதராஸ்

கிளை ஆபீஸ்கள்:

1 செரி ரோடு, சேலம்
2 ஈஸ்வரன் கோவில் தெரு, கோயமுத்தூர்
3 கண்டோன் மெண்ட், திருச்சினுப்பள்ளி
4 கிருஷ்ணராயர் தெப்பக்குளத் தெரு, மதுரை
5 ஸ்ரீ நரசிம்ம ராஜாரோடு, பெங்களூர்

மார்க்கங்கள்

1 மதராஸ் — சித்தூர் — பெங்களூர்
2 மதராஸ் — வேலூர் — சேலம் — கோயமுத்தூர்
3 மதராஸ் — திருச்சி — மதுரை — திருநெல்வேலி
4 கோயமுத்தூர் — கள்ளிக்கோட்டை
5 கோயமுத்தூர் — கரூர் — திருச்சினுப்பள்ளி
6 சேலம் — நாமக்கல் — திருச்சினுப்பள்ளி

உங்களது பணியைச் செய்ய எப்போதும் காத்துள்ளோம்.

தி சென்ட்ரல் பேங் ஆப் இந்தியா, லிமிடெட்.

(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)

(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)

அதிகாரம் பெற்ற மூலதனம்	... ...	ரூ. 3,50,00,000
வாக்களிக்கப் பட்ட மூலதனம்	... ...	ரூ. 3,36,26,400
செலுத்தப் பட்ட மூலதனம்	... ...	ரூ. 1,68,13,200
ரிசர்வும் மற்ற நிதிகளும்	... ...	ரூ. 1,48,32,000
டிபாசிட்டுகள் 30–6–1943ல் இருந்தபடி	...	ரூ. 72,27,68,300

தலைமை ஆபீசு:

மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தாபனங்களும் பெற்றது.

மானேஜிங் டைரக்டர்:- Mr. H. C. கேப்டன், J. P.

டைரக்டர்கள்:-

Sir. H. P. மோடி K. B, E. (தலைவர்)
ஹரிதாஸ் மாதவதாஸ்
ஆர்டிஷ B. துபாஷ்
டின்ஷா D. ரோமர்
விதல் தாஸ் கான்ஜி
நூர்முகமத் M. சினய்
பாபுஜி தாதாபாய் லாம்
தரம்ஷே முல்ராஜ் காட்டாவ்
சர். ஆர்டிஷர் டலால் Kt.,
ஹார்மஜி பிரேம்ஜி கனிஷாரியட்

லண்டன் ஏஜண்டுகள்:- மெஸர்ஸ், பார்க்லேஸ் பேங் லிமி., மிட்லண்ட் பேங் லிமி

நியூயார்க் ஏஜண்டுகள்:- தி காரன்டி டிரஸ்ட் கம்பனி ஆப் நியூயார்க்

எல்லா விதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்து விவரங்களை ஸார்ஜிதம் செய்து கொள்ளலாம்.

தென் இந்தியாவின் கிளை ஸ்தாபனங்கள்:—

அடோனி, ஆலப்பிளை, ஈரோடு, பங்களூர், பெஜவாடா, கள்ளிக் கோட்டை, கொச்சி, கோயமுத்தூர், கடப்பை, தோணி, எர்ணுகுளம், குண்டக்கல், கோவில்பட்டி, கர்நூல், மதராஸ் மதுரை, நந்தியால், பொள்ளாச்சி, சேலம், திருப்பூர், திருச்சூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை, விருதுநகர்.

ஒரு மதராஸி யூனிட்

எழுதுவது:

“இவ்வெகுமதிகளை நாங்கள் பெறும்போது எங்களைப்பற்றி நமது ஜனங்கள் நினைத்துக் கொள்கிறார்கள் என்று தெரிந்துகொள்கிறோம்”

மேலும்

அதிக வெகுமதிகள் அனுப்ப

தயவுசெய்து உதவுங்கள்

“ துருப்புகளின் சௌகரியங்களுக்கு ”

என்று குறிப்பிட்டு

மே. த. கவர்னர் யுத்தநிதிக்கு

பணம் தாராளமாகக் கொடுங்கள்.

A. N. Marudachalam Chettiar

AND

A. Krishnaswamy Chettiar

AGENTS

Mssrs. Burmah Shell Oil Storage & Distributing Co., of India Ltd.

COIMBATORE

B O C

B O C

Grades

DEPENDABLE

FIRM

FOR

Shell

Grades

THE PRODUCTS OF BURMAH SHELL

MOTOR SPIRITS : MOTOR OILS

GREASES : INDUSTRIAL

LUBRICANTS OF EVERY

DESCRIPTION

★

Fuel Oils : Candles : Shelltox

Etc., Etc., Etc.

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளீன், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹ்மதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

199797

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram at 4/12. A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam

போன் 218A　　தந்தி "ராஜா"

அபூர்வ ஆபரணங்கள்!

வனப்புள்ள வைரங்கள்!!

P. A. ராஜு செட்டியார் & பிரதர்

கடைத்தெரு : கோயமுத்தூர்

—: தபால் பெட்டி 139 :—

சென்ட்ரல் ஸ்டுடியோஸ் லிமிடெட்

கோயமுத்தூர்

-7 OCT 194

நவீன யந்திர சாதனங்களைக் கொண்டு தே[illegible] இந்தியா
விலேயே மிகப் பிரக்யாதி வாய்ந்த அநேகம்
தமிழ்ப் படங்களைத் தயாரித்த இணையற்ற
ஸ் டு டி யோ !

★

இப்பொழுது தயாராகி வரும் படங்கள்.

★

ஹரிதாஸ் — ராயல் டாக்கீஸ்
வால்மீகி — சென்ட்ரல் ஸ்டுடியோஸ்
சாலிவாகனன் — பாஸ்கர் பிக்சர்ஸ்

★

மற்றும் இரு அற்புதமான
தமிழ்ப் படங்கள்

★